
# இதயத்தைத் திருடிய தேவதையே!

ஆர். மகேஸ்வரி




## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : இதயத்தைத் திருடிய தேவதையே |
| ஆசிரியர் | : ஆர்.மகேஸ்வரி |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| முதல் பதிப்பு | : டிசம்பர், 2010 |
| தாள் | : 11.6 kg. வெள்ளைத் தாள் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 160 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : இராமு நிலையம் 23, காசிம் தெரு, இராயப்பேட்டை, சென்னை-14. |

**விலை: ரூ.60.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர் - 94441-01753 |
| அச்சிட்டோர் | : கே.வி.எஸ். ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை-14. |

# இதயத்தைத்
# திருடிய
# தேவதையே !

# இதயத்தைத் திருடிய தேவதையே!

## 1

மேகப் பெண்... சூரியக் காதலன் எங்கே பூமிப் பெண்ணின் அழகிய வதனத்தில்... தளிருடலில் மையல் கொண்டு... சலனப்பட்டு விடுவானோ... சஞ்சலப்பட்டு விடுவானோ என்று தன்னையே திரையாய்ப் போட்டு... சூரியனின் உருவத்தை மறைக்கச் சிரமப்பட்டுக் கொண்டிருந்த... மேகம் சூழ்ந்த... அழகான மழைக்கால மாலைப் பொழுது!

அன்று பிரதோஷம்!

புனிதா குளிரையும், வரப்போகும் மழையையும் பொருட்படுத்தாமல்... சிவன் கோயிலுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தாள்.

அம்மா சுமதிக்குப் பயங்கர ஜலதோஷம்! அதனால், புனிதா தாயை வீட்டில் இருக்கச் சொல்லி விட்டுத் தனியே கிளம்பி விட்டாள்.

'இன்று போகவில்லையம்மா!' என்று புனிதா சொன்னால்... சுமதி விடவே மாட்டாள்.

காரணம்...?

புனிதாவின் திருமணம் தள்ளிப் போய்க் கொண்டிருப்பதில்... சுமதிக்குப் பெரும் வருத்தம்!

நான்கு கோயில் குளத்திற்குச் சென்றாலாவது... அந்த இறைவனின் அருளால்... அவளுக்குத் திருமண யோகம் வரும் என்ற பயங்கர நம்பிக்கை, சுமதிக்கு!

செவ்வாய், வெள்ளி, பிரதோஷம், சிவராத்திரி, சங்கடஹர சதுர்த்தி, ஏகாதசி, அமாவாசை, பௌர்ணமி என்று ஒரு நல்ல நாளையும் விடமாட்டாள், சுமதி. வேலைமெனக் கெட்டு மகளை அழைத்துக் கொண்டு கடவுளைத் தரிசிக்கச் சென்று விடுவாள்.

புனிதா நல்ல அழகி!

அழகான குண்டு முகம்! மன்மதனின் வில்லாய் வளைந்த புருவங்கள்! மீன் குஞ்சுகளாய்க் கொஞ்சி விளையாடும் அழகான இரு நீண்ட நயனங்கள்! கண்ணிமைகளின் அடர்த்தி எதிரில் இருப்பவர்களைத் தலைகுப்புற விழ வைத்துவிடும்! வளர்பிறை போன்ற அழகான நெற்றி! தாமரை இதழைப் பிய்த்து ஒட்ட வைத்தாற் போன்ற இனிய இதழ்கள்! முல்லை மொட்டை வரிசையாய் கோத்தாற் போன்ற அழகான பல் வரிசைகள்! கதுப்புக் கன்னங்கள்! லேசாய் உதடு சுழித்தாலே அந்த முகத்தில் அத்தனை கவர்ச்சியான புன்னகை மிளிரும்!



சங்குக் கழுத்து! சங்கீதம் போலக் குரல் வளம்!

தளிர் மேனியாள்! மெல்லிடையாள்!

பட்டான கறுத்தடர்ந்த மிக நீண்ட கூந்தல் அவளின் அழகுக்கு அழகு சேர்த்தன!

நிறம் மட்டும் மாநிறம்!

படிப்பு வெறும் ப்ளஸ் டூதான்!

நன்கு ஓவியம் வரைவாள்! குரோஷா ஒயர் கொண்டு அழகிய கூடை பின்னுவாள்! உல்லன் நூல்களைக் கொண்டு ஸ்வெட்டர், ஸ்கார்ப் பின்னுவாள்! சுடிதார், சேலைகளில் எம்பராயிடு வேலை செய்வாள்! மரக் கட்டையில் கலைநயமிக்க சிற்பங்கள் செய்வாள்!

நிரம்ப அன்பானவள்! நன்கு அடக்கமானவள்!

பண்பாடும், பாரம்பரியமும், ஒழுக்கமும் நிறைந்த பாசமானவள்!

சுவையாய்ச் சமைப்பாள்!

ஒரு பெண்ணிற்கு இதைவிட வேறு நல்ல பல தகுதிகள் என்ன வேண்டும்?

ஆனால் இந்தச் சமுதாயம் அவளிடம் இன்னும் பல தகுதிகளை எதிர்பார்க்கிறது!

முதலாவது நல்ல படிப்பையும்... கை நிறையச் சம்பாத்தியத்தையும் எதிர்பார்க்கிறது! நிறைய வரதட்சிணையை எதிர்பார்க்கிறது!

அவளின் மனதின் நிறத்தைப் பார்க்காமல்... உடலின் நிறத்தைப் பார்க்கிறது!

அவளைப் பெண் கேட்டு வந்தவர்கள்...

''பெண்ணின் படிப்பு பத்தாதே!'' என்று உதடு பிதுக்கினார்கள்.

''பெண் வேலைக்குப் போய்ச் சம்பாதித்தால்... குடும்பம் நல்ல நிலைக்கு உயரும்! தற்சமய விலைவாசியேற்ற உலகில் ஆடம்பரமாகவும்... அத்தியாவசியப் பொருட்களை வாங்கி... மகிழ்ச்சியாகவும் வாழ உதவும்!'' என்று பேராசையுடன் நிராகரித்தார்கள்.

''பெண் கொஞ்சம் மார்டனா இருந்தால் பரவாயில்லை! அநியாயத்துக்கு இழுத்துப் போர்த்திட்டு இருக்காளே!'' என்று பெண்ணுக்கு இருக்க வேண்டிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு மறந்து பேசினார்கள், அநாகரிகமாய்!

அப்படியே மாப்பிள்ளைக்குச் சரியான வேலையில்லையென்றாலும்... நல்ல குணமுள்ளவனாய் இருந்தால் பரவாயில்லை என்று பார்த்தாலும்... அவனைப் புனிதாவிற்குப் பிடிக்காமல் போனது!

நல்ல நிறமாய், திறமையானவனாய், உத்தியோகத்தில் இருந்தால்... அவன் ஏற்கெனவே ஒருத்தியைக் கட்டித் தாரமிழந்தவனாக இருந்தான்... சில பேர் குழந்தையைக் கையில் பிடித்துக் கொண்டு வந்து நின்றனர்.

புனிதா தற்சமயம் தன் மனதை மாற்றிக் கொண்டாள்.

''இதுபோல மனைவியை இழந்து, குழந்தையோடு நிற்பவர்களை மணந்து கொள்கிறேன்! அவர்கள் என் படிப்பையோ, வரதட்சிணையையோ பாராமல் என்னை மணந்து கொள்வார்கள்! மனிதராய்ப் பிறப்பதே ஒரு முறைதான்! அதில் யாருக்காவது இந்த உயிரும், உடலும் முழுமையாய்ப் பயன்படுவதாய் இருக்கட்டும்!...

சுயநலம் பாராமல் பிறநலம் வேண்டி வாழ விரும்புகிறேன்! என்னால் ஒரு குழந்தைக்கு நல்ல தாயாகவும், மனைவியை இழந்து, மனம் நொந்து துயருறும், துன்பப்படும் ஆண்மகனுக்கு அன்பான மனைவியாகவும், பாசமிகு தோழியாகவும் இருக்க முடியும்மா!'' என்று புனிதா சொல்ல...



''ஏய்... என்னடி பேசறே? ஏன் இப்படியெல்லாம் பைத்தியமா உளறறே?''

''உளறலேம்மா! உளப்பூர்வமா சொல்றேன்!''

''புனிதா வேணாம்மா! பொறுக்கலாம்! கடவுள் கண் திறக்காமல் போகமாட்டார்!'' அப்பா தனசேகர் கூற...

''இல்லப்பா! நான் என் முடிவை மாற்றிக் கொள்வதாய் இல்லே!''

''அவசரப்பட்டுத் திருமணத்தில் எல்லாம் முடிவெடுக்கக் கூடாதும்மா!''

''நான் அவசரப்படலேப்பா! உங்களுடைய கஷ்டம் எனக்குத் தெரிகிறது! எனக்கொரு நல்வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க முடியவில்லையே என்று... எவ்வளவு கஷ்டப்படுகிறீர்கள் என்று எனக்குப் புரிகிறது! நிஜமாகவே நான் யாருக்காவது நன்மை செய்ய விரும்புகிறேன்!...

என்னை விரும்பாமல்... நல்ல வரதட்சிணையையும்... உடலின் நிறத்தையும்... படிப்பையும்... வேலையையும் எதிர்பார்க்கும் மணமகன் எனக்குத் தேவையில்லேப்பா! எனக்குத் தேவை நல்ல உள்ளம் கொண்ட ஒரு ஆண்மகன்! அதுவும் என்னை விரும்பும்... என்னை மதிக்கும் ஒரு நல்லிதயம் கொண்டவர் தேவை!...

வாழ்க்கையே இருட்டாகி விட்டதே என்று இருப்பவரைத் தூக்கி விடுவதுதான் எத்தனை மேன்மையான

செயல்! வீழ்ந்தவரைத் தூக்கி நிறுத்துவதும்... துன்புறு பவரைத் தாங்கிப் பிடித்து இன்புற வைப்பதும்... தோல்வியில் வளைந்து போனவரை மீண்டும் நிமிர்த்தி வெற்றி பெற வைப்பதுவும் எவ்வளவு புண்ணியத்தைத் தேடித் தரும் நற்செயல்! அப்படி ஒரு செயலைச் செய்ய என் மனம் துணிந்து விட்டது!''

''ஏன் புனிதா இப்படியெல்லாம் பேசறே?''

''நான் எப்படிப்பா பேசறேன்? பெருமைப்படுங்கப்பா! இப்படி ஒரு நல்ல மகளை இந்தக் கலிமுத்திப் போன காலத்தில் பெற்றிருக்கிறோமே என்று!''

''இல்லம்மா... நீ என்ன சொன்னாலும் என்னால் சமா தானமாக முடியாது! பணம் வேண்டாம்... படிப்பு வேண் டாம்... நல்ல பண்பாடு மட்டும் போதும்னு தங்கமான மாப்பிள்ளை வருவார்!''

''எப்போ...? இதுவரை வராதவர்... எப்போ வந்து... வானத்துத் தேவனாய்க் குதிக்கப் போறார்?''

புனிதாவின் கேள்வியால், பதில் பேச முடியாமல், தன சேகர் தலைகுனிந்தார்.

''புனிதா... உனக்கு யார் மேலாவது காதல் வந்தது உண்டா? நீ சந்தித்த ஆண்களில் யாராவது உன் மனதைக் கவர்ந்தார்களா? நீ யாரையாவது நேசித்தால் கைகாட்டுடி, பெண்ணே... அவரையே கட்டி வைக்கிறேன்!''

சுமதி மன வேதனையோடு கண்ணீரை அடக்கிக் கொண்டு கேட்க...

''இல்லம்மா! அப்படியெல்லாம் இல்லை! அப்பா, தரகர்கிட்ட விஷயத்தைச் சொல்லுங்கப்பா!''

''சரிம்மா!'' என்றார்.



மனைவியை இழந்தவர்கள்... மனைவியால் நிராகரிப் பட்டவர்கள் என்று வரிசையாய் மணமகனைக் கொண்டு வந்து நிறுத்தினார், தரகர்.

இரண்டு நாட்களுக்கு முன் ரோஹித் என்ற இளைஞன் கையில் குழந்தையோடு வந்து நின்றான்.

குழந்தை பிறந்த கொஞ்ச நாளில் அதன் தாய் மூளைக் காய்ச்சல் வந்து இறந்துவிட்டதாய்க் கூறினான்.

ரோஹித் பார்க்க அழகாய் இருந்தான். தனியார் கம் பெனியில் மேனேஜராய்ப் பணிபுரிவதாய்க் கூறினான்.

புனிதா காபியோடு வர...

அந்தக் குழந்தை புனிதாவைக் காட்டித் தகப்பனிடம் கேட்டது.

''டாடி... யார் இந்த ஆன்ட்டி?''

''அவங்க ஆன்ட்டி இல்லம்மா! உன் அம்மாடா செல் லம்!'' என்று கூறினான்.

புனிதாவை ரோஹித்துக்கு பிடித்துப் போனதால் அவ் வாறு புன்னகையுடன் சொல்ல... அந்தச் சொல்லில் புனிதா நெகிழ்ந்து விட்டாள்.

அந்தக் குழந்தை அவனிடமிருந்து... பள்ளத்தாக்கை நோக்கி ஓடிவரும் நதியாய் வந்து... புனிதாவின் கால் களைக் கட்டிக் கொண்டது! அவளை ஏக்கத்தோடு பார்த்தது!

''அம்மா... அம்மா...'' என்று வாய் மலர்ந்தது.

''உங்களுக்கு கதை சொல்லத் தெரியுமா?''

''ம்!''

''பாட்டுப் பாடத் தெரியுமா?''

''அம்மா... என்னால் நிற்க முடியவில்லை! உன் தோளை ஆதரவாகப் பற்றிக் கொண்டு நிற்கட்டுமா? அதற்கு அனுமதிப்பாயாம்மா?'' என்று கேட்க...

புனிதா புன்னகையுடன் தலையசைக்க... பற்றுக் கொடியைத் தேடிய முல்லையாய்... புனிதாவின் தோளைப் பற்றிக் கொண்டார், பார்வதி அம்மாள்.

புனிதாவின் முன்புறம் இருந்த கூட்டம் காலியாக... புனிதா நந்தி ஈஸ்வரனின் காதருகே சென்று தனது வேண்டுதலைக் கூறிவிட்டுப் பார்வதியைத் திரும்பிப் பார்க்க... பார்வதி சற்றும் எதிர்பாராமல் மயங்கிச் சரிய... புனிதா சட்டென்று தாங்கிப் பிடிக்க... மற்றவர்களும் உதவ... கொஞ்சம் தள்ளியிருந்த முருகன் சந்நிதிக்குத் தூக்கிப் போய்க் கிடத்தப்பட்டார், பார்வதி.

அவரவர் நகர்ந்துவிட... புனிதா பார்வதியின் அருகில் அச்சத்தோடு அமர்ந்து விட்டாள். தண்ணீரில் முக்கிய ஈரக் கைக்குட்டை கொண்டு அந்த அம்மாளின் கன்னம், நெற்றி, இமை என்று மெல்ல மெல்ல ஒற்றி எடுக்க... கொஞ்ச நேரத்தில் பார்வதிக்கு விழிப்பு வந்தது. பார்வதி மெல்ல எழ... புனிதா உதவினாள்.

''தரையில் விழுந்து மண்டை உடைய இருந்தவளை... அப்படி நேராமல் காப்பாற்றியதற்கு ரொம்பவே நன்றிம்மா!'' கண்ணீர் கரகரத்துக் கன்னங்களில் வழிய... பார்வதி கையெடுத்துக் கும்பிட்டார்.

''ஐயோ... என்ன ஆன்ட்டி இது? என்கிட்ட போய் நன்றின்னு பெரிய பெரிய வார்த்தையெல்லாம் சொல்லிட்டு...'' என்று பதறி... பார்வதியின் கண்களில் வழிந்த நீரைத் துடைத்து விட்டாள், புனிதா.



''தெய்வமாய் வந்து தாங்கிய தேவதைம்மா நீ! உன் பேர் என்னம்மா?''

''புனிதா!''

''ரொம்ப அருமையான பேரும்மா!''

''ஏன் ஆன்ட்டி மயக்கமானீங்க...?''

''பீபி, சுகர்ன்னு நோய் இருக்கும்மா! இதுல காலையில் இருந்து உண்ணவோ... நீர் பருகவோ இல்லே!''

''வயதான காலத்தில் ஏன் ஆன்ட்டி இப்படியெல்லாம் உங்களை வருத்திக்கிறீங்க?'' அக்கறையாய்க் கேட்டாள்.

''பிரதோஷம் முடிந்து... பிறகு சாப்பிடுவேன்னு விரதம் கொண்டேம்மா!

''எனக்கு ஒரே பையன்ம்மா! கம்ப்யூட்டர் இன்ஜினியரிங் படிக்க வைத்தோம்! சென்னையிலேயே நல்ல சம்பளத்தோடு கூடிய கம்பெனியில் வேலை கிடைக்க... அவன் எங்க பேச்சைக் கேளாமல் பெங்களூருக்குப் போய் வேலை பார்க்கிறான்! நானும் என் கணவரும் தனியே வசிக்கிறோம்! அவரும் வேலை விஷயமா மாதத்தில் பாதி நாட்கள் வெளியூர் போயிடறார்! கடல் போலப் பங்களாவுல தனிமை கொல்லுதும்மா!...

அடுத்ததா அவனைத் திருமணம் செய்துக்க வற்புறுத்தறேன்! மேரேஜா... அது போர் மம்மின்னு உதடு பிதுக்கறான்! மனைவியும், குழந்தையும் தொல்லைகள்! என்ன அவசரம்? கொஞ்ச நாட்கள் போகட்டும்ன்னு காலத்தைக் கடத்தறான்!...

இந்தக் கோயிலுக்கு வந்து வேண்டிக் கொண்டால் நிச்சயம் நடக்கும்ன்னு என் தோழி ஒருத்தி சொல்ல... புறப்பட்டு வந்துட்டேன்! ஆனால் அந்த நந்தி ஈஸ்வர

னிடம் என் வேண்டுதலைக் கூறக் கூட பிராப்தம் இல்லேம்மா!''

பார்வதி அம்மாள் உடல் குலுங்க... உரிமையோடு புனிதாவின் மடியில் விழுந்து கதறினார்.

புனிதாவிற்கு அவரின் கண்ணீரைப் போக்க வேண்டும் என்று தோன்றியது!

## 2

பார்வதி தனது உடம்பைப் பார்த்துக் கொள்ளும் மருத்துவ மனை எது என்று கேட்டு அங்கேயே அழைத்துச் சென்றாள், புனிதா.

நிறையக் கூட்டம் இருந்தது. டோக்கன் போட்டு விட்டு... பார்வதியோடு அமர்ந்தாள்.

''புனிதா... நீ கிளம்பும்மா! நான் டாக்டரைப் பார்த்து விட்டு... ஒரு ஆட்டோ பிடித்து வீடு போய்ச் சேருகிறேன்!''

''இல்ல ஆன்ட்டி! உங்களை இந்த நிலைமையில தனியே விட்டுட்டுப் போக மனம் வர்லே! இருந்து காட்டிட்டே போறேன்!''

''உன்னை வீட்டுல தேடுவாங்களே!''

''உங்க கிட்ட போன் இருந்தால் கொடுங்க, ஆன்ட்டி! வீட்டுக்கு ஒரு போன் பண்ணிக்கிறேன்!''

பார்வதி அம்மாள் செல்போனைக் கொடுக்க... அதனை வாங்கி வீட்டிற்கு போன் செய்தாள்.



''ஏய் புனிதா... ஏன் இன்னும் வீடு திரும்பலே? உன் அப்பா சத்தம் போடறார்டி! என்ன பிரச்சனை? மழைக் காலம். இருட்டிக் கிடக்குது! எனக்குப் பயமா இருக்கு! நீ எங்கே இருந்து பேசறே?''

''நான் ஆஸ்பிட்டல்ல இருக்கேம்மா!''

''ஐயோ... என்ன? ஏன்டி?'' சுமதி பதற...

''எனக்கு ஒண்ணுமில்லே! ஒரு ஆன்ட்டி கோயில்ல மயங்கி விழ... அவங்களை ஆஸ்பிட்டலுக்கு அழைச்சிட்டுப் போய் இருக்கேம்மா!''

''உனக்கு ஏன் வேண்டாத வேலையெல்லாம்?'' அம்மா சீற...

''ஆன்ட்டியைத் தனியே விட மனசு வர்லேம்மா! ஆபத்துல இருக்கறவங்களைக் காப்பாற்றாமல் போனால் பாவியாகி விட மாட்டேனா...?''

''என்னடி ஜோக் அடிக்கறதா நினைப்பா...? வயசுப் பெண்ணை இன்னும் காணலையேன்னு பதறிப் போய்... போதாக் குறைக்கு உன் அப்பாவிடமும் திட்டு வாங்கிட்டு காத்திருக்கேன்! உனக்கென்ன கொழுப்பா?''

''ஒண்ணு செய்யும்மா! அப்பாவைக் 'கதிர்' ஆஸ்பிட்டலுக்கு அனுப்பு! ஆன்ட்டியை டாக்டரிடம் காட்டி... அவங்க வீட்டுல விட்டுட்டு... நாங்க ரெண்டு பேரும் வீடு திரும்பிடறோம்!''

''சரி... சரி... அப்பாவை உடனே அனுப்பி வைக்கிறேன்!''

புனிதா செல்போனை ஆப் செய்து பார்வதியிடம் நீட்டினாள்.

''இந்தக் காலத்தில் இப்படியொரு அன்பான, பாச மான பெண்ணா? அதிசயமா இருக்கும்மா! உனக்கு ரொம்ப சிரமம் கொடுக்கறேம்மா!''

''அதெல்லாம் இல்லே, ஆன்ட்டி!''

''இந்தக் காலத்துல இப்படி ஒரு அபூர்வமான குறிஞ்சி மலர் போன்ற பெண்ணா...? நினைக்கவே நெஞ்ச மெல்லாம் தேனாய் இனிக்குதும்மா!...

''அரையும் குறையுமா உடுத்திட்டு திரியற நவநாகரிகக் குட்டிகள்ல நீ வித்தியாசமா புடவை கட்டி... முடியை நீளப் பின்னி... அதில் மல்லிகையைச் சூடி... ரதி போல இருக்கேம்மா! கோயில்ன்னா என்ன? கடவுள்ன்னா யார் என்று கேட்கறாப் போல இன்றைய இளைய சமுதாயம் இருக்கு! நீ நாள் தவறாமல் கோயிலுக்கு வரேன்னு சொல்வது நிஜமாவே அதிசயம்தாம்மா!''

''ஆன்ட்டி... உங்க புகழ்ச்சிக்கு நான் தகுதியான வளா...?'' குறுநகையோடு புனிதா கேட்க...

''இந்தத் தன்னடக்கம் தாம்மா உனக்கு மணிமகுடமே! உனக்குச் சிரமம் கொடுப்பது இல்லாமல்... உன் தந்தைக்கு வேறு சிரமம் கொடுக்கிறேன்!''

''அதெல்லாம் இல்லை, ஆன்ட்டி!''

''அப்பா என்ன செய்யறார்ம்மா?''

''தனியார் கம்பெனியில எழுத்தரா இருக்கார்!''

''அம்மா...?''

''ஹவுஸ் வொய்ப்! தங்கை ஒருத்தி இருக்கா! பேர் அஞ்சலி! பி.எஸ்ஸி படிச்சிட்டு இருக்கா!''

''நீ எதுவரை படிச்சிருக்கேம்மா?''



புனிதாவின் முகம் அந்தி நேரத் தாமரையாய்க் கூம்பி விட்டது!

''நா... நான் வெ... வெறும் ப்ளஸ் டூதான், ஆன்ட்டி!''

''அதுக்கு ஏம்மா இப்படி முகம் வாடிட்டே?''

''படிக்கலேன்னா யார் ஆன்ட்டி மதிக்கறா?''

''படிப்பென்னம்மா படிப்பு... நல்ல பண்பாடோட இருக்கியே, இதுவே பெரிய படிப்புதாம்மா! ஆபத்துல இருந்த என்னை எல்லோரையும் போல வெறுமனே பார்த்துட்டுப் போகாமல்... ஆஸ்பத்திரி வரை அழைத்து வந்து... என்னோட காத்திருக்கியே... இந்த நல்ல உள்ளத்திற்கே.., உன்னை மதிக்கத் தோன்றுமே!'' என்றவர் நினைவு வந்தாற்போல...

''உனக்கு வரன் பார்த்துட்டு இருக்காங்களாம்மா...?'' பார்வதி கேட்க...

''ம்... வர வரன்களெல்லாம் படிப்பைப் பார்க்குது! பணத்தைப் பார்க்குது! கலரைப் பார்க்குது! யார் குணத்தையும், மனத்தையும் பார்க்கறா?''

புனிதா மனம் சோர்ந்து சொல்ல...

''கலர் கொஞ்சம் குறைச்சல் என்றாலும் நீ கண்ணுக்கு ரொம்ப லட்சணமா தெரியறேம்மா!''

பார்வதி அவளின் முக அழகை ரசித்துச் சொல்ல...

''லட்சணத்தை யார் ஆன்ட்டி பார்க்கறா?''

''ரொம்ப விரக்தியா பேசறேம்மா!''

''வர கூட்டமெல்லாம் குடும்பம் நடத்தத் தகுதியான வளா...? அன்பானவளா....? அடக்கமானவளா...? பண்பானவளா...? பாசமானவளா...? நன்கு சமைக்கத் தெரியுமா...? என்று யார் பார்க்கிறார்கள்...

வேலைக்குப் போறீயா...? ஆங்கில அறிவு அதிகமா இருக்கா...? இப்படி நூத்துக் கிழவியாட்டம் புடவை கட்டிட்டு இருக்காமல்... இன்றைய நாகரிகத்துக்கு ஏற்றாற் போல உடுத்தத் தெரியுமா? தங்கமும், வைரமும் பெண்ணுக்குப் பூட்டி அனுப்புவீங்களான்னு தானே பார்க்குது!''

புனிதா மிதமிஞ்சிய கோபத்தில் பேச...

''எல்லோரும் அப்படி இருக்க மாட்டாங்க, புனிதா!''

''நான் பார்த்தவரைக்கும் இப்படித்தான் இருக்காங்க!''

''கூடிய சீக்கிரமே உன் மதிப்பையும், மரியாதையையும் தெரிந்த குடும்பம் உன்னைப் பெண் பார்க்க வந்தால்...?''

''சான்சே இல்லை, ஆன்ட்டி! யார் பெண்ணை மதிக்கறா? பொன்னைத்தானே மதிக்கறாங்க!''

புனிதா சொல்லிவிட்டுக் கசப்பாய்ப் புன்னகைத்தாள்.

கூடிய விரைவிலேயே ஒரு இனிப்பான செய்தி வீடு தேடி வரப் போகிறது என்று அறியாமல்!

## 3



வானில் முழுமையாய் நிலவின் ஆட்சி நடந்தது! ஆங்கங்கே நின்று நட்சத்திர வீரர்கள்... வானத்திற்குக் காவல் புரிந்தனர்!

தென்றலின் தாலாட்டில் மதிமயங்கி... நகரமே குளிர்ச்சிப் போர்வையைத் தன் மேனியில் சுற்றிக் கொண்டு நின்றது!



சதாசிவம் வீட்டினுள் நுழைய... பார்வதி அவரைப் புன்னகையுடன் வரவேற்றார்.

''வாங்க! பயணம் நல்லபடியா அமைஞ்சதா?''

''ம்!''

''உங்களுக்கொரு சந்தோசமான செய்தி சொல்லவா?''

''எனக்கு ரெண்டாவதா கல்யாணம் செய்து வைக்கறதா முடிவு பண்ணியிருக்கீயா?''

''ஆசையைப் பார்! கிழவனுக்கு மீசை நரைத்தாலும் ஆசை நரைக்கலையே!''

பார்வதி அவரின் தாடையில் இடிக்க...

''நீதான் ஒத்தப் பிள்ளையோட நிறுத்திட்டையே! ரெண்டாவதா ஒருத்தியைக் கட்டி வைத்தால்... அவள் வந்து வரிசையாய்ப் பிள்ளை பெற்றுக் கொடுத்தால்... நீ இப்படி தனியே வாடிட்டு இருக்க வேண்டிய அவசியம் இல்லையல்லவா?''

''ஆஹா... மனைவி மேல் ரொம்பத்தான் அக்கறை! இப்படி ஏதாவது பேசினால்... அப்புறம் உங்களைக் கொல்லவும் தயங்க மாட்டேன்!''

''ஆஹா... நீயல்லவோ பத்தினிப் பெண்!'' அவர் அப்பாவியாய்ச் சிரிக்க...

''விளையாடினது போதும்! முக்கியமான விஷயம்! கோயிலுக்குப் போன இடத்தில் சீதையைப் போலப் பெண்ணொருத்தியைக் கண்டேன்!''

''அப்படியா...? எப்போ எனக்குக் கட்டி வைக்கறே?''

''ஐயோ... எதிலுமே விளையாட்டு தானா?'' என்று பார்வதி கோபித்துக் கொள்ள...

''சரி, சொல்லு, பார்வதி!'' என்று அவர் முகவாயைப் பிடித்து ஆசையுடன் சதாசிவம் கேட்க...

''நம்ம மகனுக்கு ரொம்ப பொருத்தமா இருப்பாள்!'' என்ற பார்வதி தான் கோயிலில் மயங்கி விழுந்த திலிருந்து ஆரம்பித்து அனைத்தையும் சொல்லி முடித்தார்.

''ஆஸ்பிட்டல்ல காட்டி... என்னைப் பத்திரமா வீடு சேர்த்துட்டு... மகளும், தகப்பனும் போனாங்க! அபூர்வ மான மனிதர்கள்! ஆச்சரியமா போயிடிச்சி! நம்ம கிருஷ் ணாவுக்கு இவள்தான் மனைவி!''

பார்வதி கட்டளையாய்க் கூற...

''பொண்ணு என்ன படிச்சிருக்கா...? நம்ம கிருஷ் ணாவோடு தகுதிக்குப் பொருந்தி வருவாளா...?'' சதாசிவம் கேட்க...

''படிப்பு வெறும் ப்ளஸ் டூதான்! ஆனால், பைய னோடு குடும்பம் நடத்ததானே நமக்கொரு மருமகளைத் தேடறோம்! வேலைக்கு அனுப்பிப் பணம் சம்பாதிக்கவா மருமகளைத் தேடறோம்? குடும்பத்துக்கு ஏத்தவளா... கண்ணுக்கு லட்சணமா இருந்தால் போதாதாங்க?'' என்று கேட்க...

''போதும்... போதும்!''

''நிரம்ப அன்பானவள்! பாசமானவள்!''

''இப்படிப்பட்ட பெண்தான் நம்ம குடும்பத்துக்கு வேண்டும்! நமக்கிருப்பது ஒரே பிள்ளை! அவனை நம்பித்தான் நாம் இருக்கோம். வருபவள் நம்மிடம் அன்பா, அனுசரணையா இருந்தால் தானே வயதான காலத்தில் நாம நிம்மதியா இருக்க முடியும்!''



''கிருஷ்ணாவும், புனிதாவும் ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சிட்டு நல்லபடியா குடும்பம் நடத்தி... வரிசையா வாரிசைப் பெற்றுக் கொடுத்தால்... அதைப் பார்த்துட்டு நிம்மதியா உட்கார்ந்து விடலாம்!''

''மாடு பிடிக்கறதுக்குள்ளே நெய்க்கு ஆசைப்படாதே பார்வதி!''

''கட்டாயமா புனிதா நம்ம மருமகளா வருவாள்!''

''உனக்கு நம்பிக்கை அதிகம், பார்வதி! விதி என்று ஒன்று இருக்கே!''

''எப்படிப்பட்ட விதியே குறுக்கே நின்றாலும்... நம்ம வீட்டு மருமகள்ன்னா அது அந்தப் புனிதா பொண்ணு தாங்க!''

பார்வதியின் நம்பிக்கை பொய்க்குமா...? பலிக்குமா...?

அந்த வாரச் சனிக்கிழமை கிருஷ்ணா பெங்களூருவில் இருந்து இரண்டு நாட்கள் விடுமுறையில் சென்னை வந்தான்.

பார்வதி கிருஷ்ணாவை உட்கார வைத்து... புனி தாவைப் பற்றி முழுமையாய்க் கூறி முடித்தாள்!

''என்னம்மா நீ... அந்தப் பெண் என்னளவு படிக்கலன் னாலும் பரவாயில்லை! அட்லீஸ்ட் ஒரு டிகிரியாவது படித்திருந்தால் பரவாயில்லை!''

கிருஷ்ணா குறை கூற...

''நீ உன் மனைவியை வேலைக்கா அனுப்பப் போறே?''

''இல்லை!''

''அப்புறம் எதுக்கு டிகிரியெல்லாம்...? உன்னோட குடும்பம் நடத்தி... குழந்தைகளைப் பெற்று... அந்தக்

குழந்தைகளை நல்வழிப்படுத்தி... அதுங்களுக்குப் படிப்பு சொல்லிக் கொடுத்தா போதாதா? அவள் வந்து உன்னை, எங்களை அன்பா, பாசமா, அரவணைப்பா பார்த்துட்டா போதாதா?''

''சரி... சரிம்மா... பெண்ணோட நிறம் எப்படி?''

''நிறம் கொஞ்சம் குறைச்சல்தான்! ஆனால், அவ ளோட உள்ளம் தூய்மையான வெள்ளை நிறம்!''

''என்னவோ செய்யுங்க!'' கிருஷ்ணா சலிப்புடன் கூற...

''நீ வந்து பாரு, கிருஷ்! உனக்கு அவளைக் கண்டிப்பா பிடிக்கும்!'' பார்வதி நம்பிக்கையுடன் கூறினார்.

''வருவேன்! ஆனால் நீங்க கட்டாயப்படுத்தக் கூடாது! எனக்கு அவளைப் பிடிக்கலேன்னால் விட்டுடணும்மா!'' என்று கண்டிப்புடன் கிருஷ்ணா கூற...

''பிடிக்கும்! நிச்சயம் புனிதாவை உனக்குப் பிடிக்கும், கிருஷ்! புனிதாதான் என் மருமகள் என்று எப்போதோ முடிவு பண்ணிட்டேன்!''

பார்வதி திட்டவட்டமாய்க் கூற... கிருஷ்ணா அம்மா வின் தீவிரம் கண்டு கவலை கொண்டான்.

மறுநாள் காலை புனிதாவின் வீட்டிற்கு போன் மூலம் செய்தியைச் சொல்ல... சுமதியும், தனசேகரும் வானுக் கும் பூமிக்கும் குதித்தார்கள்.

அவர்களின் சந்தோஷத்திற்கு அளவேயில்லாமல் போனது!

இருவரும் இளைஞர்களாய் மாறி விட்டார்கள்!

புனிதா மட்டும் அலட்டிக் கொள்ளாமல் எப்போதும் போலச் சாதாரணமாய் இருந்தாள்.



இன்பம், துன்பம் எது நேர்ந்தாலும் புனிதா சமநிலை யோடுதான் இருப்பாள்!

இன்பம் வந்தால் துள்ளிக் குதிப்பதும்...

தோல்வி, துன்பம் கண்டால் துவண்டு போவதும் புனிதாவின் இயல்பு அல்ல.

சுமிதி ஸ்வீட், காரம் என்று சமையலறையையே ரெண்டு படுத்தினாள்!

தனசேகர் ஹாலில் உள்ள ஒட்டடையை நீக்கி... கதவு, ஜன்னல் என்று சுகாதாரத்தில் ஈடுபட்டார்.

அஞ்சலி ரெட்கிராஸ் மாணவி! அவளுடைய கல்லூரி யில் அவளை வெளியூருக்கு கேம்ப் அழைத்துச் சென்றுள் ளார்கள். அவள் வர இன்னும் பத்து நாட்கள் ஆகும்.

மாலையானதும் சுமதி புனிதாவை நச்சரித்தாள்.

''நல்லா அலங்காரம் பண்ணிக்கோ, புனிதா! தலை முடியைத் தளரத் தளரப் பின்னு! அடர்த்தியாய்க் கட்டிய மல்லிகை, கனகாம்பரத்தைச் சூடிக்கோ! கல் வைத்த தோடு, ஜிமிக்கி, நெக்லஸ், செயின்னு போட்டுக்கோ!''

''ரொம்ப ஆசை வைக்காதீங்கம்மா! அவரோ கம்ப் யூட்டர் இன்ஜினியர்! மாசம் லட்ச ரூபாய் சம்பாதிப் பவர்! அவர் வந்து நம்ம வீட்டு மாப்பிள்ளையா வரு வார்ன்னு கற்பனைக் கோட்டை கட்டாதீங்க! அவர் ஆன்ட்டியோட வற்புறுத்தலால் என்னைப் பார்க்க வர லாம்! வந்ததும் என்னைப் பிடிக்கலேன்னு உதடு பிதுக் கிட்டுப் போயிடலாம்!''

புனிதா உதடுகளில் உறைந்த கசப்பான புன்னகை யுடன் கூறினாள்.

''ஏன்டி இப்படி அபசகுனமா பேசறே?''

''பின்னே, நீங்க ஏன் இந்த அளவு சந்தோசமா திரியறீங்க? விஷயம் காயா... பழமான்னு தெரிவதற்கு முன்னாடி பெரிய அளவுல கற்பனைக் கோட்டையைக் கட்டி... அதை அலங்கரிச்சு மகிழலாமா?...

நீயும் வர மாப்பிள்ளையோட எல்லாம் கற்பனையில் என்னைப் பிடித்து மணவறையில் உட்கார வைத்து விடுகிறாய்! நான் தாலி வாங்கி... அவனோடு குடித்தனம் நடத்தி... நாலு குழந்தைகளைப் பெற்று... சீராட்டி... தாலாட்டி... பள்ளிக்கு அனுப்பிச் சீரும் சிறப்புமாய் வாழ்வதா கனா கண்டுடறே!...

கடைசியில் எல்லாக் கனவுகளும் மண் பானைகளா உடைந்து உருவில்லாமல் போயிடுது! தேவையா? அதுவும் அளவுக்கு மீறிய ஆசை தேவையா?'' புனிதா கொஞ்சம் வேகமாய்ச் சுமதியைப் பார்த்துக் கேட்க...

''வாய்க் கொழுப்பெடுத்த கழுதை! என்னைப் பரிகாசமா பண்றே? வாய் மேல போட்டேன்னாத் தெரியும்! நான் இந்த பந்தம் கூடி வரணுமேன்னு வேண்டாத தெய்வமில்லை! தெரியுமாடி?'' என்று சுமதி குரோதத்தில் சீற...

''ஒரு கடவுளை வேண்டும்மா! நீ எல்லாக் கடவுளையும் வேண்டினால் நான், நீன்னு போட்டி போட்டுட்டு... கடைசியில உன் வேண்டுதலைக் கைவிட்டுடப் போகுது!'' சின்னக் கேலிச் சிரிப்போடு கூற...

''புனிதா... புனிதா... உன் திருவாயை மூடிட்டுப் போடி!''

அம்மா கையெடுத்துக் கும்பிட...

''புனிதா... ஏன் அம்மாவை இப்படி வெறுப்பேத்தறே? ஏற்கெனவே அவ பீபி, ஷுகர்ன்னு அவதிப்படறாள்! அப்புறம் நார்மலா இருக்கற பீபி மிக நீண்ட உயரத்திற்கு எகிறணுமா?'' தனசேகர் மகளிடம் குறைப்பட...



''பின்ன என்னப்பா... அம்மா அநியாயத்துக்கு நம்பிக்கை வைக்கிறாங்களே! அது சரியா...?''

''பெத்த மனுஷிம்மா! பிள்ளைக்கு ஒரு நல்வாழ்வு ஏற்படும்ன்னு நம்பறா! அது தப்பா? நம்பிக்கைதாம்மா வாழ்க்கையின் அச்சாணி! நம்புவோமே நல்லதே நடக்கும்ன்னு! ஏன் விபரீதமா கற்பனை பண்ணணும்? எனக்குப் பார்வதி அம்மாள் மேலேயும்... சதாசிவம் சார் மேலேயும் ஏகப்பட்ட நம்பிக்கை இருக்கு!''

''அவங்க மகன் கிருஷ்ணா மேல நம்பிக்கை வர்லே, இல்லையா? கம்ப்யூட்டர் இன்ஜினியர்! மாதம் நல்ல வருமானம்! பங்களா போல வீடு! பெற்றவங்களுக்கு ஒரே பிள்ளை! எந்தத் தகுதியுமே இல்லாத என்னை அவர் கட்டிக்கச் சம்மதிப்பாரான்னு கொஞ்சம் உள்ளுக்குள்ளே உதறலா இருக்கு, இல்லையாப்பா?''

''அவரும் கட்டிக்க சம்மதிப்பார்!'' தனசேகர் திடமாய்ச் சொல்ல...

''எனக்கு ஒரு பர்சண்ட் கூட நம்பிக்கை இல்லை!'' என்று புனிதா விரக்தியாய்ச் சிரித்தாள்.

அவளுடைய பெற்றோரின் வேண்டுதல், விருப்பம் நிறைவேறுமா?

எல்லாம் கடவுளுக்கே வெளிச்சம்!

## 4

அழகிய இளம் மாலையும், கள்ளமற்ற குளிர்ந்த தென்றலும் கை குலுக்கி, நலம் விசாரித்த மாலை நான்கு மணி!

அந்தச் சிறிய வீடு முழுக்கத் தெய்வீக மணம் கமழ்ந்தது!

தனசேகர் வெள்ளை வேட்டி, சட்டை சகிதமாய்த் தயாராகி விட்டார்.

சுமதி எளிய காட்டன் புடவை உடுத்திக் கொண்டு அடுப்பில் பாலைக் கொதிக்க வைத்தாள். சிறு தண்ணீர் கூடக் கலக்காத பால் பொங்கிப் பொங்கி மேலேற... அதைக் கவனத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

எளிய பட்டுடுத்தி... முகத்திற்கு எளிய அலங்காரம் செய்து... மேனியில் கண்களுக்கு உறுத்தாத வண்ணம் மிகச் சிறிய நகைகளை அணிந்து தயாராகி விட்டாள், புனிதா.

சுமதி... புனிதா இருக்கும் அறைக்குள் நுழைந்தாள். புனிதாவின் எளிமையைக் கண்டு வருத்தம் கொண்டவள்...

''காது, கழுத்துக்குக் கல் வைத்த நகைகளைப் போட்டுக்கோ, புனிதா! சேலை... இத்தனை எளிமை வேண்டாம்! இந்த வருடத் தீபாவளிக்குச் சரவணாவுல எடுத்த பெரிய பார்டர் வைத்த பட்டுச் சேலையை அணிஞ்சிக்கோம்மா! உன் அழகான உதட்டுக்கு இயற்கையான கலர்ல கொஞ்சமா லிப்ஸ்டிக் போட்டுக்கோ! இதெல்லாம் செய்து கொண்டால்... உன்னை ஒத்தப் பார்வையிலேயே மாப்பிள்ளைக்குப் பிடித்துவிடும்!''

''பெண்ணோட மேலழகு பார்த்து ஒரு ஆணுக்கு ஆசை வரக் கூடாதும்மா! அவளுடைய உள்ளத்தின் அழகைப் பார்த்துதான் ஆசை வரணும்! மனிதர்களுக்கு முகம் அழகாய் இருப்பதைவிட... மனம் அழகாய் இருப்பதுதான் சிறந்தது. தெரியுமாம்மா?''



''நூத்துக் கிழவியாட்டம் பேசாதே! சொன்னதைச் செய்!'' சுமதி எரிந்து விழுந்தாள்.

''என்னை என் போக்குக்கு விடும்மா! ஏன் இப்படி வற்புறுத்தறே? உன் வற்புறுத்தலுக்குப் பணிந்து எத்தனையோ முறை அலங்காரப் பொம்மையா அலங்கரிச்சி நின்னு இருக்கேன்! அப்போ எல்லாம் என் உடம்பு கூசும்! அப்படியே உன் வழிக்கு வரேன்! இதுவரை அலங்கரிச்சிட்டு நின்னு என்ன புண்ணியம்? எந்த நல்வழி பிறந்துச்சி? சொல்லுங்க.'' புனிதா சின்ன முகச் சுழிப்போடு கேட்க...

''தேவையில்லாமல் பேசாதே! தாய் பேச்சைக் கேளு! பார்வதியம்மாள் ரொம்ப நல்லவர்! அவருக்கு மருமகளாப் போகக் கொடுத்து வைத்திருக்கணும்! மாப்பிள்ளை கிருஷ்ணாவுக்கு உன்னைப் பார்த்தவுடன் பட்டுன்னு பசை போட்டு ஒட்டனாப் போல மனசுக்குப் பிடிச்சிடணும்!''

''எதுக்கும் நீ கேமலின் அல்லது பெவிக்கால் பசையை ரெடியா வச்சிக்கோம்மா!''

''ஏன்தான் இப்படி என்னை எரிச்சல் படுத்தறீயோ! இதுக்கெல்லாம் காரணம் இதுநாள் வரை நேர்ந்த கசப்பான அனுபவங்கள்தான்! உன்னைச் சொல்லியும் குற்றமில்லை புனிதா!''

''என்னை... என் மனசை இப்பவாவது புரிஞ்சிட்டையேம்மா!'' புனிதா கண்கள் சட்டென்று குளமாக...

''சரி... சரி... கண்கலங்காதம்மா! கடவுளின் கருணை இந்த முறை கட்டாயமா உனக்குக் கிடைக்கும்!'' சுமதி கூற...

''உன்னை ஒரு நல்ல இடத்துல சேர்த்துட்டு... அடுத்த வருடமே அஞ்சலிக்கும் திருமணம் செய்து வச்சிடணும்!'' தனசேகர் கூற...

''பணத்துக்கு எங்கே போவீங்க?''

''வீட்டை அடமானம் வைச்சிடலாம், புனிதா. அப்புறமா வீட்டுக் கடனையும் அடைச்சிட்டு... கால் வயிறும், அரை வயிறுமா கஞ்சி குடிச்சிட்டு... பிள்ளைகளைக் கரை ஏத்திட்ட நிம்மதியில மீதிக் காலத்தை நானும், உன் அம்மாவும் ஓட்டிடுவோம்!'' தனசேகர் உருக்கமாய்க் கூற...

''உங்களை அப்படியெல்லாம் விடமாட்டேன்! உங்க ரெண்டு பேரையும் காலம் முழுக்க என்னோடவே... என் கணவரின் அனுமதி பெற்றுப் பாதுகாப்பேன்ப்பா!'' புனிதா உறுதியாய்ச் சொன்னாள்.

''நீ இப்படிச் சொன்னதே எங்க நெஞ்சுல பாலை வார்த்தாப் போல இருக்கு, புனிதா! அப்படியெல்லாம் உன்னோட வந்து... உனக்குப் பாரமாகி விட மாட்டோம்! தவிரவும் பெண்ணைக் கொடுத்த இடத்துல தங்கறது அவ்வளவு சரியா வராது, புனிதாம்மா!''

சுமதி முடிக்கவும்... வாசலில் கார் வந்து நிற்கும் ஓசை கேட்டுப் பெரியவர்கள் வெளியே ஓடினார்கள்.

''வணக்கம்! வாங்க!'' என்று மூவரையும் வரவேற்று அமர வைத்தார்கள்.

கிருஷ்ணாவின் இருபுறமும் பெற்றவர்கள் அமர்ந்தார்கள்.

கிருஷ்ணா கால் மேல் கால் போட்டு அமர்ந்து... கம்பீரமே உருவாய்க் காட்சியளித்தான்.

கிருஷ்ணா... பேரழகன்! நல்ல கோதுமை நிறம்!

தலை கொள்ளாத முடி! வரிசை தப்பாத பற்கள்! மீசையில்லாமல் வழுவழுப்பான முகத்துடன் பாலிவுட் நடிகர்களை நினைவுபடுத்தினான். அவன் முகத்தில் அழகான மலர்ச்சி மலர்ந்திருந்தது.



தனசேகர், சுமதி இருவரும் மாப்பிள்ளையின் அழகில், கம்பீரத்தில், ஆண்மையில் சொக்கித்தான் போனார்கள்.

ஆனால், புனிதாவிற்கு அவனைக் கண்டதும் நெஞ்சில் நேசம் பிறக்கவில்லை... மாறாய் நெருஞ்சியாய்ப் படபடப்பு கூடியது! அவனைப் பார்த்த மாத்திரம் பாசம் பிறக்கவில்லை... இதயத்தில் இனம் புரியாத பயப்புயல் வீசியது!

இப்படிப்பட்ட பேரழகன் தன்னைத் திருமணம் செய்து கொள்ள எப்படிச் சம்மதிப்பான்? பெற்றவர்களின் ஆசை தீப்பொறிபட்ட பலூனாய் வெடித்துச் சிதறப் போகிறதே என்ற அச்சம், எண்ணம் அவளின் இதயத்தைக் கரு மேகங்களாய்ச் சூழ்ந்தது!

புனிதா வந்தாள்! மூவரையும் வணங்கினாள்!

இனிப்பு, காரத்தை நீட்டினாள்.

''நல்லாயிருக்கீயாம்மா...?'' பார்வதி கேட்க... புனிதா உதடு சுழித்து மென்னகை புரிந்தாள்.

''ம்...'' என்று தலையாட்டியவளை இழுத்து அருகே அமர வைத்துக் கொண்டார், பார்வதி.

''ஏய் கிருஷ்ணா... இந்த தேவதை மட்டும் என்னை அன்று தாங்கிப் பிடித்துக் காப்பாற்றலேன்னால்... இன்று உன் அம்மா இப்படி உன்னோட உட்கார்ந்திருக்க மாட்டேம்பா! இந்த தேவதை நான் மயங்கிட்டேன்னு தெரிஞ்சதும் பதறி... முதலுதவி செய்து... நான் பயம் கொள்ளக் கூடாதுன்னு பக்குவமா பேசி... பாசத்தோட ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போனாள், அம்மா இன்று உயிரோடு இருப்பது இந்த தேவதையால்தான் கிருஷ்!''

''என்னம்மா நீங்க... என்னென்னவோ பேசிட்டு?'' கிருஷ்ணா பதற்றத்தோடு கண்டிக்க...

''பார்வதி! நேரம் காலம் தெரியாதா, உனக்கு? ஏன் இப்படிப் பேசி எங்களைக் கலங்கடிக்கறே?'' சதாசிவம் கோபத்தோடு அதட்ட...

''சரி, பேசலேங்க! முதல்ல நீங்க சொல்லுங்க. பொண்ணு எப்படி இருக்கா? தவறு... தவறு... என் மருமகள் எப்படி இருக்கா...?''

பார்வதி இப்படிக் கேட்க... புனிதாவினுள் புதைந்திருந்த பயம் உள்ளே புதைந்து... இரு கன்னங்களிலும் இரு வெட்க ரோஜா மணத்தோடு மலர்ந்து மணம் வீசியது!

''உன் தேர்வு அற்புதம், பார்வதி! இப்படி ஒரு அடக்கமான, பவ்யமான, பாந்தமான பெண்ணைக் காண்பது கண்களுக்கு எவ்வளவு குளிர்ச்சியா இருக்கு தெரியுமா?''

சதாசிவம் ரசித்துச் சொல்ல... சிப்பி இமையைத் திறந்து நம்பாமல் பார்த்த புனிதாவிடம் நேரே சொன்னார்.

''நிஜமாத்தாம்மா சொல்றேன்! இப்படி இயல்பா வெட்கப்படற ஒருத்தி இந்த உலகத்துல நீ ஒருத்தியாத்தாம்மா இருப்பே!''

சதாசிவம் மேலும் அவளுக்கு மகுடம் சூட்ட... புனிதாவால் அவ்வளவு புகழ்ச்சியைத் தாங்க முடியவில்லை! நாணலாய் வளைந்தாள்.

இவ்வளவு காலமும் வந்த மாப்பிள்ளைகளும், மாப்பிள்ளையின் உறவினர்களும் அவளை உதாசீனப்படுத்தும்படி கேள்விகளை அடுக்கும்போது சுருண்டு விடுவாள்! வெட்கி அவமானத்தில் முகம் கறுத்து விடுவாள்!



இன்று மாறாய்... அவளை இரு பெரியவர்களும் போட்டி போட்டுக் கொண்டு பாராட்ட... அந்தப் பாராட்டு மழையில் நனைந்தவளின் கண்களில் லேசாய்க் கண்ணீர் மழை எட்டிப் பார்த்தது.

புனிதா சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

பெரியவர்களின் சம்மதம் அவர்களின் முக மலர்ச்சி வழியாகவும்... களிப்போடு கூடிய பேச்சு வழியாகவும் தெரிந்துவிட்டது!

கிருஷ்ணாவின் மனநிலையை அவனுடைய பார்வையை வைத்துக் கணிக்க முடியவில்லை!

அவனுக்குப் பிடித்திருக்கிறதா? இல்லையா?

தெரியவில்லை!

தரையில் கால் பதியாமல் சந்தோசப் பறவையாய் மகிழ்ச்சி என்ற வானில் பறந்து திரிந்தவர்களின் றெக்கையை வெட்டி வீசி அவர்களைத் துடிதுடிக்க வைப்பானா? துன்பப்பட வைப்பானா?

அல்லது நல்ல பதிலைச் சொல்லி இன்னும் மேலே மேலே விண்ணை முட்ட மகிழ்ச்சி வானில் பறந்து திரிய விடுவானா?

''கிருஷ்... உனக்குப் புனிதாவைப் பிடிச்சிருக்கா?''

பார்வதி பட்டென்று கேட்க... கிருஷ்ணா வெலவெலத்துப் போனான்.

''சொல்லு கிருஷ்? இந்த தேவதையை உனக்குப் பிடிச்சிருக்கா, கண்ணா?''

''..........''

''புனிதாவையே எனக்கு மருமகளாக்குவே, இல்லையா?''

கிருஷ்ணா பதில் கூறாமல் இருக்க... புனிதா, சுமதி, தனசேகர் மூவரும் அவர்களுக்குத் தனிமையைக் கொடுத்துவிட்டு ஹாலை விட்டு அகன்றனர்.

''சொல்லு கிருஷ்? புனிதாவை உனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு தானே?'' மீண்டும் பார்வதி கேட்க...

''என்னம்மா அவசரம்? இது திருமண பந்தம்! ஆயுசு முழுக்கக் கூடி வாழ வேண்டிய புனிதமான உறவு! எனக்குக் கொஞ்சம் டைம் கொடுங்க! நான் யோசிக்கணும்!''

''இதுல யோசிக்க என்ன இருக்கு? இப்படி ஒரு பண்பான, அமைதியான பெண்ணை உன்னளவு நீ இது வரை கண்டிருக்கிறாயா? புனிதாவுக்கு என்ன குறை? ஏன் தயங்கறே? அம்மா உனக்குக் கெடுதி செய்வேனா?'' பார்வதி கொஞ்சம் கோபமாய்க் கேட்டாள்.

''உனக்கொரு நல்ல வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்கத்தானே உன்னைப் பெற்றவர்களான நாங்கள் எண்ணுவோம்! உனக்கொரு பாழாய்ப் போன வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்க நினைப்போமா?'' சதாசிவம் தன்மையாய்க் கேட்டார்.

''குடும்பமும் நல்ல குடும்பமா இருக்கு! பொண்ணும் தங்கமான பொண்ணா இருக்கா! இன்னும் வேறென்ன வேணும்? ஏன் உனக்குப் புனிதாவைப் பிடிக்கலையா, கிருஷ்ணா?'' சூடாய்ப் பார்வதி கேட்க...

''பிடிச்சிருக்கு!''

''பின்னே ஏன் தயங்கறே?''

''லட்சணமாத்தான் இருக்கா. ஆனால் கலர் கம்மியா இருக்காளே!''

''கலரா உன்னோட அன்பா, ஆசையா, அரவணைப்பா குடும்பம் நடத்தப் போகுது? அவள் உள்ளம் அதீத



வெள்ளை நிறம்! உடம்பு வெள்ளையா இருந்து உள்ளம் கறுப்பா இருந்தால்... அவளோட உன்னால் குடும்பம் நடத்த முடியுமா? முடியாது கிருஷ்ணா! நல்ல நிறத்தோட... கேடு கெட்ட குணத்தோட ஒருத்தி உனக்கு மனைவியா வந்தால் உன்னை நிம்மதியா வாழ விடுவாளா?...

தாய் - மகனைப் பிரித்து வேடிக்கை பார்க்க மாட்டாளா? எங்களை உன்னிடமிருந்து பிரித்து முதியோர் இல்லத்திற்கோ... அநாதை ஆசிரமத்திற்கோ விரட்டி விட்டுடுவா, கிருஷ்! லைட்டை அணைச்சிட்டா எல்லாப் பெண்களுமே ஒரே நிறம்தான்! கொடுக்கற சுகமும் ஒண்ணுதான்! அதை முதல்ல புரிஞ்சிக்கோ கிருஷ்! நம்ம குடும்பத்துக்கு ஒரு நல்ல குணவதியைத்தான் நான் எதிர்பார்க்கிறேன்!''

பார்வதி அம்மாள் கோபமாய்ப் பேசி முடிக்க...

''கலர்கூட ரெண்டாம் பட்சம்தான்! ஆனால் இவள் வெறும் ப்ளஸ் டூ. நான் எம்.இ. எனக்குப் பொருந்துவாளா? இவளை நாலு இடத்திற்கு கூட்டிட்டுப் போனால் எனக்குத் தானே அசிங்கம்! என் ப்ரண்ட்ஸுங்க வீட்டுப் பங்ஷனுக்கோ... தொழில் முறை பங்ஷனுக்கோ இந்தப் புனிதாவைக் கூட்டிட்டுப் போக முடியுமா?...

இன்றைய நாகரிகத்துக்குத் தக்கபடி உடுத்தத் தெரியுமா? அங்கே எல்லோரும் நுனி நாக்குல ஆங்கிலம் பேசுவாங்க! இவளால் புரிந்து கொள்ள முடியுமா? திரும்பப் பதில் கூறத் தெரியுமா? நாலையும் நாம யோசிக்கணும், இல்லையாம்மா?''

கிருஷ்ணா தன் மன உணர்வுகளைத் தாயிடம் கூற...

''நாம குடும்பம் நடத்தப் பொண்ணு தேடறமா...? இல்ல கூத்தடிக்கப் பொண்ணு தேடறமா...?'' பார்வதி அனல் கக்கும் பார்வையோடு கேட்க...

''ஏம்மா... என்னைப் புரிந்து கொள்ளாமல் கோபப் படறே?''

''நீதான் எங்களைப் புரிந்து கொள்ளாமல் சாகடிக்கறே! உனக்கு எப்படிப்பட்ட பொக்கிஷத்தை, புதையலைத் தேடித்தரோம்! பத்திரப்படுத்திக்கணும்ன்னு உனக்குத் தோணலையே!'' பார்வதி காட்டமாய்க் கூற...

''வீடு முழுக்கப் பார்... சுவரில் மாட்டியிருக்கற அத்தனை ஓவியங்களும் நம்ம புனிதா வரைந்தவை தான்! ஷெல்பில் இருக்கற அவ்வளவு மரச் சிற்பங்களும் புனிதா செதுக்கியவை தான்! எம்பிராய்டு வேலை, ஜிமிக்கி வேலை எந்த ஒரு கைவினைத் தொழில் நுட்பத்தையும் புனிதா விட்டு வைக்கலே!'' சதாசிவம் தன் பங்குக்குப் புனிதாவைப் புகழ...

''எவ்வளவு மதி நுட்பம்! எவ்வளவு கலைநயம்! இவ்வளவு திறமைகளையும் வச்சிட்டு.. புனிதா சாதாரணமா இருக்கா பார்! இந்தத் தெருவில் உள்ள பிள்ளைகளுக்கு இலவசமா இந்தக் கலைகளைக் கற்பிக்கிறாள்! பாடம் சொல்லித் தாராள்!...

''சோசியல் சர்வீஸ்ன்னா புனிதாவுக்கு ரொம்ப பிடிக்கும்! கண்தானம் செய்திருக்கா! எய்ட்ஸ் தடுப்பு முகாம், போலியோ சொட்டு மருந்து முகாம், காசநோய்த் தடுப்பு முகாம்ன்னு இன்னும் விரல் விட்டு எண்ணிட்டே போகலாம். புனிதா செய்கிற, கலந்துக்கற நல்ல செயல்களை. யார் செய்வா இந்தக் காலத்துல இதுபோல நல்ல செயல்களை? ம்? எல்லோருக்கும் எல்லாமும் அமைந்து விடாது, கிருஷ்ணா. நீ இவ்வளவு படிச்சிருக்கியே, உன்னால் முடியுமா இதுபோல தத்ரூபமா ஓவியம் வரையவும்... சிற்பம் செதுக்கவும்? புனிதா நல்ல பெண்!



இப்படி ஒரு அருமையான பெண்ணோட வாழவும் கொடுத்து வைத்திருக்க வேண்டும், கிருஷ்ணா!'' பார்வதி முடிக்க...

''புனிதாவோடான இல்லறம்... இனிமையான, இன்பமான, தெளிவான நீரோடையாய்க் கண்டிப்பாய் இருக்கும்!'' சதாசிவம் மன நிறைவோடு கூறி முடிக்க...

சுவரை நோட்டமிட்டான்.

ஓவியங்கள் அத்தனையும் அருமையாய் இருந்தன. அவள் செதுக்கிய சிற்பங்களைக் கண்டு பிரமித்துப் போனான்.

அவளின் குணம், கலைநயம் முழுமையாய்ப் பிடித்தாலும்... குறைந்த நிறமும், படிப்பும் மனதிற்குள் முள்ளாய்க் குத்தியது.

மனதிற்குக் கொஞ்சம் பிடிக்காமல் போனாலும், பெற்றவர்களின் பேச்சை, ஆசையை நிராகரிக்க முடியாமல் சம்மதித்தான், கிருஷ்ணா.

''சரிம்மா... உங்க விருப்பப்படி செய்யுங்க! எனக்கும் சம்மதம்!''

கிருஷ்ணா வாய் மலர... பார்வதி குதூகலித்தாள்!

இதனால் வரப் போகும் விபரீதம் தெரியாமல்!

## 5

கார்போஹைட்ரேட், புரதம், கொழுப்பு, வைட்டமின்கள், தாது உப்புகள் அனைத்தும் கலந்த... சரிவிகித

உணவு உண்ட குழந்தையாய்... 'கொழுக் மொழுக்' கென்று வளமாய்... கிழக்கு வானில் தளிர்நடை போட்டுக் கொண்டிருந்தான், இளம் ஞாயிறு.

காலை 10.00 மணி!

நிச்சயதார்த்த தேதி குறிக்க வேண்டும் என்று பார்வதியும், சதாசிவமும் வந்து நின்றார்கள்.

காரணம்...?

கிருஷ்ணா எங்கே மனது மாறி விடுவானோ என்று பயம்!

அவன் புனிதாவை மறுக்காமல் இருக்கவும்... திருமணத்திலிருந்து தப்பிக்காமல் இருக்கவும்... சொந்த பந்தங்களைக் கூட்டி சிம்பிளாய் நிச்சயம் செய்து விடுவது நல்லதென்று உணர்ந்தார்கள்.

கிருஷ்ணா மீண்டும் வேதாளமாய் முருங்கை மரம் ஏறினால் நிச்சயத்தைக் காரணம் காட்டி மணவறையில் உட்கார வைக்கலாம் என்ற உறுதியான நம்பிக்கை, பெற்றவர்களுக்கு!

''நல்லநாள் இருக்கான்னு பாருங்க, தனசேகர். இன்னும் ரெண்டு நாளில் நிச்சயதார்த்த விழாவைக் கொண்டாடிடலாம்! கிருஷ்ணா லீவை எக்ஸ்டென்ட் பண்ணியிருக்கான்!'' சதாசிவம் கூற...

''என்ன அவசரம்?'' தனசேகர் கேட்க...

''நாங்க உங்க மாப்பிள்ளையை விட்டு மாறப் போறதில்லே! அதே போல எங்க பெண்ணை விட்டு வேறு பெண்ணை நீங்க தேடப் போறதில்லே! பிறகு ஏன்?'' சேலைத் தலைப்பை இழுத்துப் போர்த்தி மரியாதையுடன் சுமதி கேட்க.



''பெண் பிடித்திருந்தால் நிச்சயம் பண்றதுதானே தமிழ் மரபு!'' பார்வதி சொல்ல...

''ஆமாம்!'' என்றனர், சுமதியும் தனசேகரும்.

''அப்புறம் என்ன தயக்கம்?''

''சின்னப் பெண் அஞ்சலி கல்லூரி ரெட்கிராஸ் சார்பா கேம்ப் போயிருக்கா. அவளில்லாமல் எப்படி?'' சுமதி தயக்கத்துடன் கூற...

''கல்யாணத்துக்கு அவள் இல்லேன்னால் வருந்த வேண்டியதுதான்! இது வெறும் நிச்சயதார்த்தம்தானே! இதுக்குப் பெரியவங்க இருந்தா போதாதா?''

''சரிங்கம்மா!'' தனசேகர் சம்மதித்தார்.

''எங்க வீட்டு சார்பாவும், உங்க வீட்டு சார்பாவும் சில சொந்த பந்தங்கள், சுற்றத்தினர் என்று சிம்பிளாய் செய்து விடலாம்!''

''திருமணம் எப்போதும்மா?'' தனசேகர் ஆவலோடு கேட்டார்.

''ஒரு எட்டு மாதம் போகட்டும்! கிருஷ்ணாவுக்குச் சென்னையில மாறுதல் கிடைச்சுடும்! மாறுதல் கிடைத்துத் திருமணம் செய்தால் மகனும், மருமகளும் எங்களோடவே இருப்பாங்கன்னு பேராசைதான், தனசேகர்!'' சதாசிவம் கண்கள் பளபளக்கக் கூறினார்.

''அவ்வளவு நாட்கள் சிறுசுகளைக் காக்க வைக்கணுமா?''

''அங்கங்கே வருடக் கணக்கா பெண்ணும், பிள்ளையும் நிச்சயம் முடிந்து காத்திருக்காங்க! கிருஷ்ணாவுக்கு மாறுதல் கிடைத்த உடனே திருமணத்தை முடிச்சிடலாம்.''

''சரிங்க!'' இருவரும் மகிழ்வோடு கூறினர்.

புனிதா தேநீர் எடுத்து வந்து நீட்டினாள்.

''சேலை எடுத்துடலாம் வரீயாம்மா, புனிதா?''

''இல்ல ஆன்ட்டி! உங்களுக்குப் பிடிச்சதா எடுங்க! எனக்குன்னு தனியா விருப்பு, வெறுப்பு இல்லே! நீங்க நல்லதா எனக்குத் தேர்வு செய்வீங்கன்னு எனக்குப் பயங்கர நம்பிக்கை!''

புனிதா இளநகையோடு கூறவும்...

பார்வதி புனிதாவை அருகிழுத்து அணைத்து... ஆசையாய் நெற்றியில் முத்தமிட்டாள்.

''என் மருமகள் கட்டித் தங்கம்தான்!'' கன்னத்தை வழித்து திருஷ்டி கழிக்க... நெட்டி மளமளவென முறிய...

''ஊர்க் கண்ணெல்லாம் உன் மேல்தாம்மா இருக்கு!'' என்று சிரித்தார், பார்வதி.

புனிதா, தனசேகர், சுமதி மூவரும் மகிழ்ச்சிச் சிறையில் மூச்சு முட்டிக் கொண்டிருக்கும் போது... ரோஹித் குழந்தையோடு நுழைந்தான்.

தனசேகர் அவனிடம் நடந்த நிகழ்வுகளைக் கூற... புனிதாவைப் பார்த்து...

''ஆல் த பெஸ்ட்ங்க! பத்திரிகை அனுப்புங்க! கட்டாயமா கலந்துக்கறேன்!'' என்று சந்தோசமாகவே வெளியேறினான், ரோஹித்.

அவனின் நல்லிதயம் கண்டு வியந்து போனாள், புனிதா.

இரவு அஞ்சலியிடம் இருந்து போன் வந்தது.

''நல்லாயிருக்கீங்களாப்பா?''

''நாங்க நல்லா இருக்கோம்! புனிதாவுக்கு ஒரு வரன் வந்தது. பிடிச்சிப் போக நிச்சயமும் செய்யப் போறோம் அஞ்சலி!'' தனசேகர் கூறினார்.



''நான் இல்லாமலா?'' எதிர் முனையில் அஞ்சலி சிணுங்க...

''அவங்க அவசரப்படறாங்க! குடும்பமும் நல்ல குடும்பம்! மறுக்க முடியலே அஞ்சலி! நீ கேம்பை கேன்சல் பண்ணிட்டு வர முடியுமா?''

''ஐயோ... அதெல்லாம் முடியாதுப்பா! சரி. நல்ல காரியத்தைத் தள்ளிப் போடாமல் செய்துடுங்க! மாப்பிள்ளை எப்படிப்பா?''

''ரொம்ப நல்லவர்ம்மா! கலர்ன்னா அப்படி ஒரு அழகு கலர்!''

''என்ன படிச்சிருக்கார்?''

''எம்.இ.ம்மா! பெங்களூர்ல பெரிய கம்பெனியில நல்ல சம்பளத்துல இருக்கார்!'' என்றவர், புனிதா பார்வதியைக் கோயிலில் பார்த்தது முதற்கொண்டு அஞ்சலியிடம் ஒப்பிக்க...

''புனிதாவுக்கு நிஜமாவே குருட்டு அதிர்ஷ்டம்தான். இல்லையாப்பா? இப்படி ஒரு நல்ல வரனைக் கட்டிக்க புனிதாகிட்ட என்ன தகுதி இருக்கு?''

அஞ்சலி கேலியாய்க் கேட்க...

''அஞ்சலி... என்ன இப்படிப் பேசறே? நாமே அவளைக் குறைச்சி மதிப்பிடலாமா?'' தனசேகர் அதட்டினார். பின்னர் -

''நம்ம வீட்டு வறுமையைக் கண்டு படிக்கலேன்னு படிப்பை நிறுத்திய புண்ணியவதி, புனிதா! நீ படிக்கக் காரணமே அவள்தான்! அவள் மட்டும் தையல் மிஷினில் உட்காரலேன்னால் உன்னால படிக்க முடியுமா? சிற்பம் செய்து விற்கலேன்னால் நீ கல்லூரியில காலெடுத்து வச்சிருக்க முடியுமா?''

''நான் சும்மா விளையாட்டுக்குச் சொன்னேம்பா!''

''எதிலெல்லாம் விளையாடுவது? அவள் காதுக்கு உன் சொற்கள் தெரிஞ்சா கஷ்டப்படுவா இல்லையா?''

''ஸாரி... ஸாரிப்பா! புனிதாவுக்கு ஒரு நல்வாழ்க்கை கிடைப்பதில் எனக்குப் பெருமகிழ்ச்சிப்பா! புனிதாவைக் கூப்பிடறீங்களா?''

''அவள் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத் துட்டு இருக்கா! அவளை எதுக்கு டிஸ்டர்ப் செய்வானே?''

''ஆல் த பெஸ்ட்! சொன்னேன்னு சொல்லிடுங்கப்பா!''

தனசேகர் போனை வைத்துவிட்டு அமர்ந்தார்.

புனிதா அமைதியானவள்! அஞ்சலி புயலைப் போல ஆவேசமானவள்!

புனிதாவிற்கு யாரிடம் எப்படிப் பேச வேண்டும் என்று நீக்குப் போக்குத் தெரியும்! பண்பாடு தெரியும்!

ஆனால், அஞ்சலி தேங்காய் உடைப்பது போல ஏதா வது பேசி... எதிராளியின் மனதைப் பட்டென்று உடைத்து விடுவாள்!

அடுத்தவர்களின் மனம் புண்படுமே! இப்படி அவர் களை வலிக்கச் செய்கிறோமே என்றும் தெரியும்! ஆனால், அந்தத் தொழிலை மட்டும் ஒரு நாளும் நிறுத்த மாட்டாள்.

அதனாலேயே அஞ்சலியைப் பெற்றவர்களுக்குப் பிடிக் காது!

புனிதாவை நிரம்பப் பிடிக்கும்! அதனாலேயே புனி தாவை அஞ்சலிக்குப் பிடிக்காது! அவ்வப்போது வார்த்தை களாலும்... செயல்களாலும் புனிதாவின் மனதைக் குத்திக் கிழிப்பாள்!



புனிதா அதனைக் கண்டு கொள்ள மாட்டாள்! தங்கை என்று அடுத்த நிமிடம் பாசத்தைக் கொட்டுவாள்! எதற்குமே அஞ்சலிக்கு முன்னுரிமை கொடுப்பாள்!

தங்கையின் மேல் உயிரையே வைத்திருக்கிறாள்! அஞ்சலிக்காக எல்லாவற்றிலும் விட்டுக் கொடுப்பாள்! தாய், தகப்பனிடம் அஞ்சலிக்காகப் பரிந்து பேசுவாள்.

அஞ்சலியின் வளர்ச்சியில் இன்புறுவாள், புனிதா.

நிச்சயதார்த்த நாளும் வந்தது.

புனிதாவின் வீடு விழாக் கோலம் பூண்டது.

''புனிதாவிற்கு இத்தனை அதிர்ஷ்டமா!'' என்று சில விழிகள் ஆச்சரியத்தில் விரிந்தன! சில நெஞ்சங்கள் அதிர்ச்சியில் பொசுங்கின!

கிருஷ்ணாவின் குடும்பம் பொன் நகைகளையும், பட் டையும், வைரத்தையும் அள்ளிக் கொண்டு வந்து நின்றது.

புனிதாவின் அலைக்கழிப்புக்கு... காத்திருப்புக்கு நல்ல பதிலை இறைவன் கொடுத்து விட்டதாய் எண்ணி அடிக்கடி நன்றி சொன்னார் இறைவனுக்கு, தனசேகர்!

புனிதா அழகு நிலையப் பெண்மணியின் கைவண்ணத் தால் பட்டை தீட்டப்பட்டாள். வானிலிருந்து வழி தவறி வந்த தேவதையாய் ஜொலித்தாள், புனிதா.

புனிதாவும், கிருஷ்ணாவும் அருகருகே அமர்த்தப்பட் டார்கள்! ஐயர் மந்திரம் ஓதி... சடங்கு முடிந்து... நிச்சய தார்த்தப் பத்திரிகை வாசிக்கப்பட்டு... இரு வீட்டாரின் கையொப்பமும் இடப்பட்டது.

அவள் முகம் பூரிப்பில்!

அவன் முகம் கொஞ்சம் யோசனையில்!

பந்தி பரிமாறப்பட்டது. பெரியவர்கள், சொந்தங்கள் என்று முதல் பந்தியில் அமர்ந்தனர்.

புனிதா அறைக்கு அழைத்துச் செல்லப்பட்டாள்.

கிருஷ்ணாவும், அவனுடைய நண்பர்களும் தனித்துக் குழுவாய் அமர்ந்திருந்தார்கள்.

''உங்கம்மா சொன்னாங்கன்னு படிக்காத பெண்ணை முட்டாள் மாதிரி கட்டிக்கப் போறியே, கிருஷ்ணா!''

''நீயெல்லாம் ஐம்பது ஆண்டு முந்திப் பிறந்திருக்கணும்! குணம், மனம்ன்னு சொல்லிட்டு திரிவதற்கு!''

''பெண் நல்ல அழகுதான்! ஆனாலும் அவங்க உன்னை விட கலர் குறைச்சல்! கொஞ்சம் யோசித்து இருக்கலாமே கிருஷ்ணா!''

''என்ன அவசரம்? உன் திறமைக்கும், அழகுக்கும், படிப்புக்கும் எப்படிப்பட்ட பெண்ணாய்க் கட்டிக்கலாம், தெரியுமா? அவசரப்பட்டுட்டையே, மச்சி!''

நண்பர்கள் மாற்றி மாற்றி இவ்வாறு கூற... கிருஷ்ணாவின் முகம் மாறியது! மனம் யோசனையைச் சுமந்து கொண்டு, இருண்டு விட்டது!

நண்பர்கள் சாப்பிடச் சென்ற சமயம்... பார்வதி மகன் அருகில் வந்து... அவனுடைய முக வாட்டத்தைக் கண்டவர்...

''என்ன கிருஷ்ணா... உன் பிரண்டுங்க ஏதாவது சொன்னானுங்களா? ஏன் முகம் வாட்டமா இருக்கு?''

''..........''

''உன் மௌனமே அந்த சாத்தான்ங்க வேதம் ஓதி இருக்குன்றது தெரியுது! கிருஷ்ணா... இந்தக் காலிப் பயலுங்க ஏதாவது சொன்னால் காதிலே போட்டுக்காதே! அவனுங்களுக்கு நம்ம புனிதாவைப் பற்றித் தெரியாது!



புனிதாவை விடக் குணத்துல, அழகுல சிறந்த பொண்ணு இந்தக் களவாணிகளுக்கு வாய்த்து விடுவாங்களான்னு பார்த்துடுவோம்!''

பார்வதி கிருஷ்ணாவின் காதில் வேதம் ஓத... கிருஷ்ணா கொஞ்சம் தெளிந்தான்.

''புனிதாவுக்கு ஏதோ பரிசு கொண்டு வந்ததா சொன்னீயே! அவள் தனியாத்தான் ரூம்ல இருக்கா! போ... போய்க் கொடுத்துட்டு வா!''

தாய் கூற... புனிதா அறைக்குக் கிருஷ்ணா சென்றான்.

புனிதா பதறிக் கட்டிலில் இருந்து எழுந்து நின்று, ''உட்காருங்க!'' என்றாள்.

கிருஷ்ணா கட்டிலில் அமர்ந்தான்.

''ஏன் நிற்கறே? உட்காரேன்!'' அவன் அருகில் கைகாட்டிச் சொல்ல...

''இல்லீங்க... பரவாயில்லீங்க!'' என்று நின்றாள்.

''உன்கிட்ட செல்போன் இருக்கா?''

''ம்கூம்!''

''உன்னிடம் இருக்காதுன்னு நினைச்சேன்! இதை வச்சிக்கோ!''

அழகான செல்போனை நீட்ட...

''ம்கூம்... வேண்டாம்! எனக்கு செல்போன் வச்சிக்க வேண்டிய அவசியமில்லேங்க!''

மென்மையாய்ப் புனிதா மறுக்க... கிருஷ்ணா ஆச்சரியமானான்.

அவன் இதுவரை பார்த்த பெண்கள் அத்தனை பேரும் பரிசு, பணம் என்றால் அலைவார்கள்!

அவனுக்குக் கொடுக்க விருப்பம் இல்லையென்றாலும் பிடுங்கிக் கொள்வார்கள்!

ஆசையே இல்லாத அபூர்வப் பெண்ணைப் பார்ப்பது இதுவே முதன் முறை!

''உனக்குக் கொடுக்கவே விரும்பி வாங்கினேன், புனிதா!'' என்று சொல்ல, மறுக்க முடியாமல் கைநீட்டிப் பெற்றுக் கொண்டாள்.

''நீ கொஞ்சம் மார்டனா மாறணும், புனிதா. இப்படி எதற்கெடுத்தாலும் வெட்கப்பட்டு நிலம் நோக்கினால் எப்படி? ஆமா... மார்டன் ட்ரஸ் போடுவியா? ஜீன்ஸ், பனியன், டீசர்ட், மிடி, சுடிதார்ன்னு?''

''ஐயோ... ச்சீ... ச்சே...'' என்று புனிதா முகம் சுழித்தாள்.

''உன்னை நிறையவே மாத்தணும்! மார்டனா ட்ரஸ் போட வைக்கணும்! கரஸ்ல பி.ஏ இங்கிலீஷ் டிகிரி செய்யச் சொல்லணும்! ஸ்போகன் இங்கிலீஷ் கிளாஸ்ல சேர்த்துவிடணும்! ஸ்டைலா பேச... நடக்க... பயிற்சி கொடுக்கணும்!''

கிருஷ்ணா அடுக்கிக் கொண்டே போக... புனிதா மனம் நொந்து பதில் பேசாமல் இருந்தாள்.

''புனிதா... அடிக்கடி என்னோட போன்ல பேசணும்! அதுல என் படத்தை சேவ் பண்ணி வச்சிருக்கேன்! கணக்குப் பார்க்காமல் முத்தம் தரணும்!''

கிருஷ்ணா குறும்புடன் கண் சிமிட்டிக் கூற... புனிதா அருவருப்பில் முகம் சுழித்தாள்.

அன்றைய நிகழ்ச்சி இனிதே முடிந்தது.

அஞ்சலி வீடு திரும்பினாள். வந்ததும் வராததுமாய்...



''ஏய் புனிதா... அத்தான் எப்படி? முதலில் உன் நிச்சய தார்த்தப் போட்டோவைக் காட்டு!''

அஞ்சலியின் அதிகாரம் தூள் பறக்க... புனிதா ஆல் பத்தை எடுத்து வந்து நீட்டினாள்.

ஆல்பத்தைப் பிரித்த அஞ்சலி... கிருஷ்ணாவையே வைத்த விழி எடுக்காமல் நோக்கிக் கொண்டிருந்தாள்.

''அத்தான் எத்தனை அழகு! அச்சு அசல் ஆக்டர் கிருத் திக்ரோஷன் போல! போன பிறவியில் ஏதோ புண் ணியம் செய்திருக்கிறாய், புனிதா!''

அஞ்சலியின் கண்களில் பிரதிபலித்தது மகிழ்ச் சியா...? வன்மமா...? பொறாமையா...?

இன்னதென்று புனிதாவால் யூகிக்க முடியவில்லை!

## 6

கிருஷ்ணா காலை, மாலையானால் புனிதாவிற்கு போன் செய்வான்! புனிதா எடுத்து அவன் கேட்கும் கேள்விகளுக்கு ''ம்...! ம்கூம்...!'' என்ற பதிலைத் தந்துவிட்டு அம்மாகிட்ட பேசுங்க... அப்பாகிட்ட பேசுங்க என்று பெற்றவர்களிடம் கொடுத்துவிட்டு நழுவி விடுவாள்.

சில நேரம் அவள் டியூசன் சொல்லித் தருவதாய் அவளுடைய தந்தை அவனுக்குப் பதில் சொல்வார்.

சிலநேரம் ''ஜி.ஹெச்சிக்கு எய்ட்ஸ் நோயாளிகளுக்குச் சேவை செய்யப் போயிருக்கா...!''

''இன்றைக்கு நாடு தழுவிய போலியோ சொட்டு மருந்து தினம் இல்லையா, மாப்பிள்ளே! புனிதா அந்த முகா முக்குப் போயிருக்கா! வீடு திரும்ப மாலையாயிடும்!''

''பக்கத்து வீட்டுத் தாத்தாவுக்கு உடம்புக்கு முடியலே! அவரை ஆஸ்பிட்டலுக்கு அழைச்சிட்டுப் போயிருக்கா!''

''தாம்பரத்துல இருக்கற முதியோர் இல்லத்துக்குப் போயிருக்கா!''

இப்படி ஏதாவது ஒரு பதில் கிடைக்கும் கிருஷ்ணா வுக்கு! கிருஷ்ணா எரிச்சல் அடைந்து விடுவான்!

என்ன பெண் இவள்?

திருமணம் வரை அவளிடம் பேசி, பழகி... அவளுக்குப் பிடித்தது, பிடிக்காதது என்ன என்று தெரிந்து கொள்ள முயற்சி செய்தால்... இந்தப் பெண் செல்போனைக் கையில் வைத்துக் கொள்ளாமல் வீட்டிலேயே போட்டு விட்டுப் போய் விடுகிறாளே!

என்னை விட அவளுக்கு மக்கள் சேவைதான் பெரி யதா?

கொஞ்சம் நாகரிகமாய்ப் பேச, பழகக் கற்றுத் தரலாம் என்று நினைத்தால்... ஏன் இப்படி விட்டேற்றியாய் இருக் கிறாள்?

என்னைப் பற்றித் தெரிந்து கொள்ளச் சிறு முயற்சி கூட எடுத்துக் கொள்ளவில்லையே!

ஏன்?

இந்த அம்மா என் டேஸ்டிற்குப் பெண் பார்க்காமல்... அவள் விருப்பத்துக்குப் பார்த்து... இப்படிப் பாதகம் செய்து விட்டாளே! காலமெல்லாம் அவளோடு வாழப் போவது நானில்லையா?



ச்சே... என்னுடைய திறமை, தகுதி, படிப்பு, பதவி, சம்பாத்தியம், அந்தஸ்தைக் கணக்கில் கொண்டு... ஒரு நாகரிகமான பெண்ணைக் கைகாட்டி இருக்கக் கூடாதா?

இந்தத் தொழில் நுட்பப் பெங்களூரு நகரில், கன்னட மும், ஆங்கிலமும், ஹிந்தியும் பேசும் ஐ.டி. துறையைச் சேர்ந்த பெண்கள் கொத்தும் கொடியுமாய் நாக்கில் எச்சில் ஊற வைக்கும் விதமாய் ஏராளமான பெண்கள் இருக்க... போயும் போயும் புனிதா போன்ற நாட்டுப்புறம் தான் எனக்கு வாழ்க்கைத் துணையாய் வாய்க்க வேண் டுமா?

நுனி நாக்கில் ஆங்கிலம் பேசி, நவநாகரிகமாய் உடை உடுத்தி... என்னோடு பார்ட்டி, டிஸ்கோதே என்று கை கோத்து வரும் பெண் கிடைத்திருந்தால் எத்தனை இன்பமாய் வாழ்க்கை இருக்கும்!

சுத்தப் பட்டிக்காட்டோடு எப்படிக் குடும்பம் நடத்துவது?

புனிதாவை எங்காவது கூட்டிப் போனால் அவளின் நாகரிகம் கண்டு... நாலு பேரின் நகைப்பிற்கு உள்ளாகத் தான் வேண்டும்!

திருமணம் நிச்சயத்த பெண் ஒரு போன் பேசத் தயங்கு கிறாளே...! திருமணம் நிச்சயித்த ஜோடிகள் கைகோத்து பார்க், பீச், ஹோட்டல் போவதும்... கட்டிக் கொள்வதும்... முத்தமிட்டுக் கொள்வதும்... ஏன், காட்டேஜ் எடுத்து வரம்பு மீறுவதும் என்று கண்டவன்தானே, இந்தக் கிருஷ்ணா!

நண்பர்கள்தான் கதை கதையாய்த் தன் திருமணத் திற்கு முன் உள்ள வாழ்க்கையைச் சொல்லியிருக் கிறார்களே!

மித மிஞ்சிய நாகரிகத்தில் மூழ்கித் திளைப்பவர்கள் அல்லவா, ஐ.டி. துறையைச் சார்ந்தவர்கள்!

கிருஷ்ணா இதுபோன்ற ஒரு அரக்க நினைப்பில் புனிதாவின் மேல் கடுப்பாகி இருக்க...

புனிதாவோ பாரதத்தின் பண்பாட்டைப் போற்றிப் பாதுகாக்கும்படி சிந்தித்தாள்.

நாள் முழுக்க போனில் என்ன பேசுவது? அப்படியே பேசினாலும் அவனைப் பற்றி முழுமையாய்த் தெரிந்து கொண்டும்... என்னைப் பற்றி அவன் முழுமையாய்த் தெரிந்து கொண்டும் விட்டால்... பிறகு கல்யாணத் திற்குப் பின் பேசுவதற்கு என்ன செய்தி மிச்சமிருக்கும்?

வாழ்க்கை சுவைக்குமா?

அத்தனையையும் பேசிவிட்டால் முதலிரவின் போது அவனைக் கண்டால் அவளுக்கு இயல்பான நாணம் மலருமா?

பெண்ணுக்கு இயல்பாய் இருக்க வேண்டிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு மீதி மிச்சம் அவளிடம் இருக்குமா?

அப்படியே பேசினாலும் என்ன பேசி விடப் போகி றோம்?

'எனக்கு உன்னைப் பிடிக்கும்! உனக்கு என்னைப் பிடிக்குமா? நான் உன்னையே நினைத்து உண்ணாமல், உறங்க முடியாமல் தவிக்கிறேன்! உனக்கு...?' என்று பேச்சு நீளும்!

வெறும் பேச்சில் மகிழ்வதை விட... திருமணமாகி உணர்வுபூர்வமாய் அதை அனுபவிக்கும்போது இன்பம் இரட்டிப்பு ஆகுமல்லவா?



அதனால் கிருஷ்ணாவிடம் அநாவசியப் பேச்சு வைத் துக் கொள்ள வேண்டாம் என்று நினைத்தாள், புனிதா.

அன்று கிருஷ்ணாவிடமிருந்து போன் வர... அஞ்சலி ஓடிப்போய் எடுத்தாள்.

''வேண்டாம், அஞ்சலி! நீ ஏதாவது ஏடாகூடமாய்ப் பேசினால்... அவருடைய மனம் புண்ணாகிவிடும்! கொடு போனை!'' என்று கேட்க...

''வருங்காலக் கணவனுக்கு வலிக்குமே என்று என்ன பெரிய அக்கறை!'' என்று இகழ்ந்து செல்லை ஆன் பண்ணப் போக...

''வேணாம்... வேணாம்... நான் பேசிட்டுப் பிறகு தரேன்! கொடு, அஞ்சலி!''

''மாட்டேன் போ!'' என்ற அஞ்சலி போனைத் தூக்கிக் கொண்டு மொட்டை மாடிக்கு ஓடினாள். கிருஷ்ணா இரண்டு மூன்று என்று முயற்சித்து செல்லை அணைக்க நினைத்தபோது...

''ஹலோ... ஹலோ... சுகமா?'' என்று பாட்டுக் குரல் கேட்க... இது புனிதாவின் குரல் இல்லையே என்று உணர்ந்த கிருஷ்ணா...

''ஹலோ யார்? யார் நீங்க?'' என்று கேட்டான்.

''நானா...? என் பெயர் அழகான ராட்சசி!''

''யார் நீ? என் 'வுட்பி' புனிதாகிட்ட போனைக் கொடு!''

''கொடுக்க முடியாது! என்ன செய்வீங்க?'' கெத்தாய் அஞ்சலி கேட்க... கிருஷ்ணாவிற்குக் கோபம் வந்துவிட்டது.

''ஏய் யார்டி நீ?'' என்று மரியாதைக் குறைவாய்க் கேட்க...

''நான் அஞ்சலி!''

''வாடி என் முகம் தெரியாத மச்சினி! நீதானா? சரியான வாயாடின்னு கேள்விப்பட்டேன்! ஆனால், உலக மகா வாயாடின்னு யாரும் சொல்லலையே!''

''கிண்டலா, அத்தான்?'' செல்லமாய்ச் சிணுங்க...

''எப்போ வந்தே? எப்படி இருக்கே? சொல்லு.''

''நான் சந்தோசமா இல்லை! இந்த வி.ஐ.பி.யை விட்டுட்டு எப்படித் திருமணம் நிச்சயம் செய்யலாம்? எனக்கு உங்க மேல பயங்கரக் கோபம்! உங்களுக்குத் தண்டனை உண்டு, தெரியுமா?''

''என்ன தண்டனை?''

''உடனே சென்னைக்கு வரணும்!''

''வந்து...?''

''பார்க், பீச், ஹோட்டல், சினிமான்னு கூட்டிட்டுப் போகணும்!''

''அப்புறம்?''

''நான் கேட்பதையெல்லாம் வாங்கித் தரணும்!''

''தந்துட்டாப் போச்சு! அதுக்கு ஈடா எனக்கு என்ன தருவே?''

''என்ன வேண்டும்? ஜில்லுன்னு ஒரு 'உம்மா' தரவா, அத்தான்?''

''உன் அக்கா என்னை உதைக்க வருவா!''

கிருஷ்ணா பயந்தாற் போலக் கூற... அஞ்சலி கலகல வெனச் சிரித்தாள்.

இருவரும் நெடுநேரம் பேசினர்.

''சரி, புனிதாகிட்ட கொடு, மச்சினி!'' என்று கிருஷ்ணா சொல்ல...



''புனிதா இல்லையே!'' என்று போனைக் கட் செய்தாள், அஞ்சலி.

''ஏன்டி அப்படிச் சொன்னே? அவர்கிட்ட இப்படியெல்லாம் கண்டபடி பேசலாமா?''

''என் அத்தான்கிட்ட பேச எனக்கில்லாத உரிமையா, உனக்கு? ரொம்ப துள்ளாதே, புனிதா! உனக்குப் பேரதிர்ஷ்டம் வந்துடிச்சின்னு தலைக்கனம் கொள்ளாதே!''

அஞ்சலி எரிந்து விழுந்தாள். அவள் நெஞ்சு பொறாமையில் காந்திற்று!

பிறகு போன் வரும் போதெல்லாம், ''நல்லாயிருக்கீயா, புனிதா? சாப்பிட்டாயா?'' என்ற சம்பிரதாய வார்த்தைகள் மட்டும் கேட்டுவிட்டு, அஞ்சலியிடம் கொடுக்கச் சொல்லுவான்.

அஞ்சலி குரலில் இனிமையைக் கூட்டி... மயக்கும் வார்த்தைகளை உபயோகித்துப் பேசுவாள்.

ஆங்கிலத்தில் நெடுநேரம் பேசுவாள்!

இருவரும் 'ஏ ஜோக்' கூடப் பரிமாறிக் கொள்வார்கள்!

சில நேரம் அஞ்சலியே போன் செய்து கிருஷ்ணாவிடம் பேசுவாள்.

புனிதாவோ, பெற்றவர்களோ அதைத் தப்பாக எடுத்துக் கொள்ளவில்லை!

அஞ்சலி அதை எப்படிப் பயன்படுத்திக் கொண்டாள்?

## 7

காலைக் கதிரவனின் கிரணங்களில் மயங்கிய பூமித் தேவதை... பனியில் குளித்து... வெளிச்ச உடையை

மேனியில் சுற்றிக் கொண்டு சுறுசுறுப்பாய் நடை பயின்றாள்.

அது ஒரு ஞாயிற்றுக் கிழமை!

பத்து மணிக்கு அழகிய தேவனாய்க் கிருஷ்ணா வந்து நிற்க... அவனின் திடீர் வரவால் வீடே திக்கு முக்காடிப் போனது!

அஞ்சலியோ அவனின் அழகில் மதி மயங்கி... வைத்த விழி எடுக்காமல் கிருஷ்ணாவையே நோக்கிக் கொண்டிருக்க...

''அங்கிள்... இந்தச் சிலையை எங்கே வாங்கினீர்கள்? இந்தியாவிலா? அல்லது பாரீன்லயா? எவ்வளவு அழகாய்க் கலைநயத்தோடு மிளிருதே! ரியலி பெண்டாஸ்டிக் அங்கிள்!'' என்று கை நீட்டி அஞ்சலி கூற...

''இவள் என் இளைய மகள்! அஞ்சலி!'' தனசேகர் கூறினார்.

''நிஜமா இவள் உங்க பொண்ணா? கலரும்... ஃபேஸும் கொஞ்சம் சந்தேகத்தை வரவழைக்குதே!''

''அஞ்சலி... மாப்பிள்ளை உன்னைப் போலவே 'கலகல' டைப்! ''சுமதி மலர்ச்சியோடு கூற...

''ஆமா... என் மச்சினிக்கு இமைக்க முடியாத நோய் ஏதாவது இருக்கா...?''

கிருஷ்ணா அஞ்சலி இமைக்க மறந்து நின்றதைக் கிண்டலடித்தான்.

புனிதா உள்ளிருந்து வந்து வரவேற்று... காபியை நீட்டினாள்.

''புனிதா... நீ இதுக்குத்தான் சரிப்படுவே! வீட்டைக் கவனிக்கவும், சமையல் செய்யவும்தான் தோதானவள்!



மற்றதில் எல்லாம் நீ ஜீரோ பர்சண்ட் கூடத் தேறமாட்டே! உன் தங்கை உனக்கு எதிர் மாறானவள்! ஹண்ரட் சதவீதம் தேறுவாள்!''

கிருஷ்ணா சொல்ல... புனிதாவின் முகம் அந்தி நேரத் தாமரையாய் வாடிவிட்டது!

''புனிதா... வா, வெளியே கிளம்பலாம்!''

''நான்...?'' அஞ்சலி கேட்க...

''நீயில்லாமலா...? புனிதாவோட மட்டும் போனால் போர் அடிக்கலாம்! அதனால் படுபோரிலிருந்து என்னைக் காப்பாற்ற நீ கட்டாயம் வர வேண்டும்!''

கிருஷ்ணா கூற, மேலும் குன்றிப் போனாள்.

''அப்பா... அக்காவுக்கு இவ்ளோ நல்ல மாப்பிள்ளை தேடித் தந்திருக்கீங்களே! எனக்கெல்லாம் எந்த தத்திப் பயலைக் கொண்டு வந்து நிறுத்தப் போறீங்களோ? எனக்கு இப்பவே உதறலா இருக்கு! ஆனாலும், புனிதா! மீண்டும் சொல்கிறேன்... கிருஷ் அத்தான் கிடைச்சது உனக்குக் கொள்ளை, குருட்டு அதிர்ஷ்டம்தான்! தெரியுமா?''

அஞ்சலி கூற... புனிதாவினுள் இருந்த மென்மையான மனம் மூச்சுக் காற்றுக்குத் திணறியது!

புனிதா புடவையில் அம்சமாய் வந்து நிற்க...

''அப்படியே அவ்வையாரின் மறுபதிப்பாய் இருக்கே, புனிதா!'' என்று கூற... புனிதா செத்தே விட்டாள்.

டைட் ஜீன்ஸ், அசிங்கமான வாசகத்தைத் தாங்கிய குட்டைக் கை பனியனோடு அஞ்சலி துள்ளிக் கொண்டு வந்து நிற்க...

''வாவ்! வொண்டர்புல்! வெரி நைஸ், அஞ்சலி! பொண்ணுன்னா இப்படித்தான் ட்ரஸ் பண்ணிக்கணும்!

எனக்கு இதுதான் பிடிக்கும்! உன் அக்கா மாதிரி அழகையும், கவர்ச்சியையும் மூடி மூடி மறைச்சி என்ன புண்ணியம் சொல்லு? அப்படியே சேலையே உடுத்தினாலும் லோஹிப், ஜன்னல் வைத்த ஜாக்கெட்டுன்னு போட்டாலும் கொஞ்சம் ரசனையோடு நோக்கலாம்! ஆனால் உன் அக்கா கழுத்தை மூடிய ஜாக்கெட்டும், இழுத்துப் போர்த்திய சேலையும்ன்னு அநியாயத்துக்கு டூமச்சா இருக்காளே, நீ கொஞ்சம் இன்றைய நாகரிகத்தைப் பற்றிப் போதிக்கக் கூடாதா?''

கிருஷ்ணாவோடான வாழ்க்கை பெரும் கசப்பைத் தான் கொடுக்கப் போகிறது என்று நினைத்தவளின் மனம் சுருண்டு போனது.

''நான்தான் அத்தானின் பக்கத்தில் உட்காருவேன்! நீ போய்ப் பின்னால் உட்கார்!''

அஞ்சலி சொல்ல... கனத்த இதயத்துடன் பின்புறம் தனியே அமர்ந்தாள், புனிதா.

கார் விரைந்தது.

அஞ்சலியும், கிருஷ்ணாவும் ஆங்கிலத்தில் உரையாடிக் கொண்டனர். இருவரும் என்ன பேசுகிறார்கள்? எதற்குச் சிரிக்கிறார்கள்? - என்று புனிதாவிற்குப் புரியவில்லை.

பேச்சோடே அவன் தோளைத் தொடுவதும்... அவன் தொடையில் தட்டுவதும்... அவனைக் கட்டிக் கொள்வதுமாய் இருந்தாள், அஞ்சலி.

அஞ்சலியின் இயல்பு ஆண், பெண் பேதம் இல்லாமல் இப்படிப் பழகுவது என்றாலும்... புனிதாவிற்கு அவளின் செய்கையால் எரிச்சல் ஏற்பட்டது.



வயிற்றுக்குள் வேகமாய்ப் பய அமிலம் சுரந்தது.

அஞ்சலிக்குத் தெரியாதா... தனது சகோதரியைக் கட்டிக்கப் போறவனிடம் தள்ளியே பழக வேண்டும் என்று?

ச்சே! என்ன பெண் இவள்!

வெகுளியா? வினைக்காரியா?

அல்லது வேண்டுமென்றே கிருஷ்ணாவைக் கவர இப்படிச் செய்கிறாளா?

கிருஷ்ணாவைக் கவரும்படி எதற்காக அஞ்சலியின் செய்கைகள் இருக்க வேண்டும்?

பாவம்... சின்னப் பெண்! பேதமின்றிப் பழகுகிறாள்! பாழாய்ப் போன மனமே! யாரைச் சந்தேகப்படுவது என்று உனக்குத் தெரியாதா? சொந்தத் தங்கையின் மேலா சந்தேகம் கொள்ள வைப்பாய்? - என்று மனதின் அசிங்கமான முகத்தில் காறி உமிழ்ந்தாள்.

தப்புத் தப்பாய் எண்ணம் கொண்ட மனம் பெட்டிப் பாம்பாய் அடங்கிப் போனது!

முதலில் நகை, துணி, ஆடம்பரப் பொருட்கள் என்று விற்கும் பெரிய ஷாப்பிங் மாலுக்கு அழைத்துச் சென்றான்.

புனிதா ஓரமாய் நிற்க... துணிக் கடையுள் புகுந்து அஞ்சலி தேடித் தேடி, ஓடி ஓடித் தேவையான உடைகளைத் தேர்வு செய்தாள்.

''புனிதா... நீ ஏன் நிற்கறே? உனக்குத் தேவையானதை எடுத்துக் கொள்ளேன்!'' கிருஷ்ணா அக்கறையாய்க் கூற...

''ம்கூம்! என்னிடம் தேவைக்கு அதிகமாகவே உடைகள் இருக்கு!'' புனிதா தன்னடக்கத்துடன் சொல்ல...

''ஏய் புனிதா... ஏன் இப்படி இருக்கே?'' கிருஷ்ணா சலிப்புடன் கேட்க...

''எப்படி இருக்கேன்?''

''இவ்வளவு சிம்பிளாய்!''

''தப்பா...?''

''தப்பில்லே! உன்னைக் கட்டிக்கப் போறவன் ஆடம் பரமாய், அலங்காரமாய் இருக்கணும்னு விரும்பினால் மாறிக் கொள்ளக் கூடாதா? திருமணத்துக்குப் பின் வெறும் புனிதா இல்லே! த கிரேட் இன்ஜினியர் மனைவி யாய் இருப்பாய்! அப்போதும் ஐம்பது ஆண்டுகளுக்கு முந்திப் பிறந்தவளாய் இழுத்துப் போர்த்திக் கொண்டிருந் தால் எனக்குத் தானே அவமானம்!''

கிருஷ்ணா குறைப்பட்டுக் கொண்டான்.

'தன் மனைவி இழுத்துப் போர்த்திக் கொண்டிருப்பது அவமானமா?'

'அதுவே அந்த மனைவி தனது அழகான வளைவு களை, நெளிவுகளை, சுளிவுகளை இறுக்கமான ஆடை யணிந்து வெளியாட்களுக்கு விருந்து படைப்பது அவ்வளவு விரும்பத்தக்க செயலா?'

'நாகரிகம் என்ற பெயரில்... ஏன் இந்தச் சமுதாயம் பித்துப் பிடித்து அலைகிறது?'

'அஞ்சலி அணிவது போல உடை உடுத்தி வருவ தற்குப் பதிலாய் அம்மணமாய் வெளியே வரலாமே! இரண்டுக்கும் என்ன வித்தியாசம்!'

'இவனும் அதைத்தானே நாகரிகம் என்கிறான்! அழகு என்கிறான்! மேன்மை என்கிறான்!'



'ஏன் இவனுக்கு நாகரிகம் எது? அநாகரிகம் எது? என்று இனம் பிரித்துப் பார்க்கத் தெரியவில்லை!'

ஒழுக்க நெறியைக் கடைப்பிடிக்கும் பார்வதி ஆன்ட் டிக்கு ஏன் இப்படியொரு கிறுக்குப் பிள்ளை பிறந்தான்?

இவனை மணந்த பின் முதல் வேலையாய்... தமிழகத் தின் பண்பாட்டை, பாரம்பரியத்தை, ஒழுக்கத்தை... ஒரு தாயாய் மாறிப் போதிக்க வேண்டும்! புத்தி புகட்ட வேண்டும்!

புனிதா மனதிற்குள் உறுதி பூண்டாள்.

கிருஷ்ணாவின் மனத்திருப்திக்காக ஒரு கைக்குட் டையை எடுத்துக் கொள்ள...

''புனிதா... உன் தங்கை அஞ்சலியைப் பார்த்தாயா? சந்தர்ப்பம் அமையும்போது எவ்வளவு சாதுரியமாய்ப் பயன்படுத்திக் கொள்கிறாள்! அவளுடைய அறிவில், சாமர்த்தியத்தில், பயன்படுத்திக் கொள்ளும் புத்தியில்... ஒரு சதவீதம் கூட உன்னிடம் இல்லையே!''

புனிதாவின் இதழ்களில் ஒரு இகழ்ச்சியான புன்னகை மின்னி மறைந்தது.

''உங்க ரெண்டு பேருக்கும் நிறைய ஏதாவது வாங்கித் தரணும்னு, நிறையப் பணம் எடுத்து வந்திருக்கேன்! அதை உன் தங்கை புத்திசாலித்தனமாய்ப் பயன்படுத்திக் கொள்கிறாள்! ஆனால் நீயோ மதி கெட்டவளாய் இருக் கிறாயே! நீ எல்லாம் இந்த வேகமான இயந்திர உலகில் எப்படித்தான் பிழைப்பாயோ!''

புனிதாவின் சுயமரியாதை, சுய கௌரவம், சுய கட்டுப்பாடு, அடுத்தவர் பொருளுக்கு ஆசைப்படாத அற்புதமான மனது என்று எதையும் புரிந்து கொள்ளாத குருடன், கிருஷ்ணா!

அடுத்ததாய்த் தங்க நகைகளை வேட்டையாட அஞ்சலி அடுத்த கடையுள் நுழைய...

''எனக்குத் தலையை வலிக்கிறது! காருக்குள் இருக்கிறேன்!'' என்று கூறிய புனிதா விறுவிறுவென வந்து விட்டாள்.

அஞ்சலியின் பேராசை கண்டு அவளுக்கு அவமானமாய் இருந்தது. அக்காவைக் கட்டிக் கொள்ளப் போகிறவனே என்றாலும்... தற்போது அவன் அந்நிய ஆடவன். அவன் பணத்தில் இதுபோல மானமில்லாமல் மலை போல வாங்கிக் குவிக்கலாமா?

அடுத்ததாய் ஹோட்டல்... அடுத்ததாய் சினிமா தியேட்டர்!

அதுவும் ஆங்கிலப் படத்திற்கு அழைத்துப் போனான். படம் ஓட ஓட, அது கொஞ்சம் அசிங்கமான படமும் கூட என அறிய...

''எனக்குப் படம் பிடிக்கலே! வாங்க கிளம்பலாம்!'' புனிதா சொல்ல...

''புனிதா... படம் எவ்வளவு அருமை! இதைப் போய்ப் பிடிக்கலேன்னு சொல்றீயே!'' என்று அஞ்சலி சொல்ல..

''உன்னை, உன் போக்குக்கு வளர்த்தது பெரிய தப்பாயிடிச்சி! நீ வீட்டுக்கு வா... உன் வாயிலே சூடு வைக்கச் சொல்றேன்!''

''உட்கார் புனிதா! இன்னும் கொஞ்ச நேரத்தில் படம் முடிஞ்சுடும். போகலாம்!'' கிருஷ்ணா சொல்ல...


புனிதா கோபமாகி... தியேட்டரை விட்டு வெளியே வந்து... ஆட்டோ பிடித்து... வீடு வந்து சேர்ந்தாள்.

இனிக் கிருஷ்ணாவோடு வெளியே செல்லக்கூடாது என்று முடிவெடுத்தாள்.



ஆனால், அவளின் உறுதியால் பின்னாளில் சந்திக்கப் போகும் விபரீதம் உணராமல்!

# 8



கிருஷ்ணா அதற்கு அடுத்த ஞாயிறும் வந்தான். அவனை வீட்டினர் வரவேற்று... பரஸ்பர நலம் விசாரித்து... அருந்துவதற்குக் குளிர்பானம் கொடுத்தார்கள்.

அஞ்சலியின் மனதில் கிருஷ்ணாவைக் கண்டதும் பனிச்சாரலின் குளுமை!

புனிதாவிற்கு அடிவயிற்றில் பயம் எழுந்தது. அவளை வெளியே அழைத்துத் தர்ம சங்கடத்தை ஏற்படுத்தி விடுவானோ என எண்ணிக் கொண்டிருக்கும் போதே...

''புனிதா, அஞ்சலி! ட்ரஸ் சேன்ச் பண்ணிட்டுக் கிளம்புங்க! வெளியே போகலாம்.''

''வேண்டாம்!'' புனிதா மறுக்க...

''இவள் ஒருத்தி! வாழ்க்கையை ரசிக்கத் தெரியாமல் அல்லாடறா!'' அஞ்சலி வாய்க்குள்ளே முணுமுணுத்தாள்.

''ஏன் மறுக்கறே? பெங்களூருல தனியே கிடந்து போர் அடிக்குது, புனிதா! ஆபீஸ் விட்டு வீடு... வீடு விட்டு ஆபீஸ்ன்னு இயந்திரத்தனமா இருந்துட்டு வந்திருக்கேன்! முன்பெல்லாம் இந்த அளவு சென்னைக்கு விரும்பி வர மாட்டேன்! மேரேஜ் பிக்ஸ் ஆனப் பிறகு அங்கே இருப்புக் கொள்ளலே! உன்னுடைய பிரியமான பார்வதி ஆன்ட்டியின் பர்மிஷன் வாங்கிட்டுத்தான் வந்திருக்கேன்!''

''நான் வர்லே! நாள் முழுக்க இங்கே வேண்டுமானா லும் இருங்க! உங்களுக்குப் பிடிச்சதா சமைச்சித் தரேன். சாப்பிடுங்க! டீ.வி பாருங்க!'' புனிதா தன் மறுப்பை மீண்டும் சொல்ல...

''சாப்பாடு, டீ.வி... என் வீட்டுல இல்லையா? என்ன அங்கிள்... உங்க பொண்ணு போர் அடிக்கறா!''

கிருஷ்ணா அலுத்துக் கொள்ள...

''அவ்வளவு தூரம் ஆசையா பயணப்பட்டு வந்து இருக்கார்! போயிட்டு வாயேன் புனிதா!'' தனசேகர் கூற...

''ஏன் ஆன்ட்டி... புனிதாவை இப்படிக் கட்டுப் பெட்டியா வளர்த்தீங்க? கொஞ்சம் நாகரிகத்தைப் புகட்டி வளர்த் திருந்தால்... நான் இப்படி அவஸ்தைப்பட வேண்டா மில்ல?'' சுமதியைப் பார்த்து வரிசைப் பற்கள் காட்டி வசீகரமாய்ப் புன்னகைக்க...

''போயிட்டு வாடி, புனிதா!'' சுமதி சப்போர்ட்டாய்க் கூற...

''இதெல்லாம் தப்பும்மா! பார்க்கறவங்க நம்மை அசிங் கமா பேசுவாங்க! அதுபோலச் சூழ்நிலையை நாமே ஏன் உருவாக்கிக்கணும்?'' கோபமாய்ப் புனிதா கேட்க...

''உனக்கும் அவருக்கும் நிச்சயம் ஆயிடிச்சி! அப்படி இருக்க அவரோடு வெளியே போனால் யார் என்ன சொல்லிடுவாங்க? அப்படியே சொல்றவங்களா நமக்குச் சோறு போடறாங்க? மனுஷங்கன்னா ஆயிரம் பேசுவாங்க தான்! அடுத்தவர்கள் என்ன சொல்வார்களோன்னு நாம நம்ம சந்தோசத்தை இழக்கக்கூடாது, புனிதாம்மா! மாப் பிள்ளை ஆசையா வந்திருக்கார்! அவரோட சந்தோசமா போயிட்டு வாடாம்மா! எங்க அனுமதியே கிடைக்கும்



போது அனுபவிக்கத் தெரியாதவளா இருக்கீயே!'' தனசேகர் விளக்க...

புனிதா கிளம்பினாள். பின்னாடியே அஞ்சலியும் வர...

''நீ எங்கே வரே? எக்ஸாம் நெருங்குதில்ல... போ... போய்ப் படிடி!'' என்று புனிதா அஞ்சலியைக் கண்டிக்க...

''அத்தான்... நானும் வரேனே!'' என்று அஞ்சலி கிருஷ்ணாவைப் பார்த்துக் கெஞ்சலோடு கொஞ்ச...

''புனிதா... அஞ்சலியையும் கூட்டிட்டுப் போகலாம்! நீ மட்டுமானால் போரடிக்கும்! அவள் வந்தால் என் டேஸ்டுக்குத் தக்கது போலப் பேசுவா... நடந்துக்குவா!''

புனிதா அவனுடைய பேச்சில் அடிபட்டு மௌன மாய் இருக்க... அதையே சம்மதமாய் எடுத்து அஞ்சலி கிளம்பி விட்டாள்.

இந்த முறை அவன் அழைத்துச் சென்ற இடம், அழ கிய மகாபலிபுரம்! புனிதா மறுக்க மறுக்க... கிருஷ்ணா காதில் வாங்கிக் கொள்ளாமல் அங்கே அழைத்துச் சென்றுவிட்டான்.

எல்லா இடமும் சுற்றிப் பார்த்துவிட்டு... கடலில் குளிக்கக் கிருஷ்ணா ஆசை கொண்டான்.

''புனிதா... கடலில் நீந்தலாமா?''

''ஐயோ... ச்சே... வேண்டாம்!'' புனிதா முகத்தை அஷ்ட கோணலாக்க...

''நான் ரெடி அத்தான்!'' என்று அஞ்சலி அவன் கைப் பற்ற... கிருஷ்ணா சட்டையைக் கழற்றிப் புனிதாவிடம் கொடுத்து விட்டுக் கடலுக்குள் குதிக்க... அஞ்சலி துக்கடா பனியன், டைட் ஜீன்சோடு இறங்கிவிட்டாள்.

இருவரும் நீருக்குள் உல்லாசமாய் நீந்த... அந்தக் காட்சி மனதிற்குள் நெருப்பை ஏற்ற... தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டாள், புனிதா.

தனக்குச் சொந்தமானவனுடன் தங்கையே ஆனாலும் இவ்வாறு கட்டிப் பிடித்துச் சல்லாபித்தால் யாருக்குத் தான் கோபம் வராது?

'விளையாட்டுப் பிள்ளை என்று நினைப்பவள் நாளைக்கு ஏதாவது விபரீதத்தைக் கொண்டு வந்து விட்டு விட்டால் என்ன செய்வது?'

கிருஷ்ணாவோடு வெளியே இப்படி வருவது இதுவே கடைசி முறையாய் இருக்கட்டும்!' சிந்தித்தாள், புனிதா.

குளித்து முடித்துக் கரை ஏறினார்கள்.

''புனிதா! கடலில் நீந்தியது எத்தனை சுகம் தெரியுமா? கொஞ்சம் குளிரக் கூடச் செய்யுது! காட்டேஜ் எடுக்கவா?''

''எதுக்கு கிருஷ்ணா?'' புனிதா அப்பாவியாய்க் கேட்க...

''உன்னிடம் இருக்கும் அளவுக்கதிகமான வெப்பத்தைக் கொஞ்சம் கொடுத்து உதவேன்! என்ன பியூட்டி சொல்றே? இந்த முரட்டு ஆடவனின் ஆண்மையைக் கொஞ்சம் பரிசோதித்துப் பார்த்து விடுகிறாயா?''

கிருஷ்ணா கண்ணடித்துக் காமத்தோடு நோக்க...

''என்ன பேசறீங்க, கிருஷ்ணா? கட்டிக்கப் போற பெண்ணே ஆனாலும் அவளிடம் எப்படிப் பேசணும்ன்னு கொஞ்சம் பேசக் கத்து வச்சிருக்கக் கூடாதா? ஏன் இப்படி யோசிக்காமல் பேசறீங்க? நாகரிகம்... நாகரிகம்ன்னு புலம்பறீங்களே... இது நாகரிகமா? இதுக்குத்தான் நான் உங்களோட வெளியே வரலேன்னு சொன்னது!''

புனிதா பெரும் காரத்தோடு பேச...



''இவளைக் கட்டிட்டு என்ன சுகத்தை அனுபவிக்கப் போறீங்களோ, அத்தான்! போயும்... போயும் இந்த நாட்டுப் புறத்திடம் இப்படிக் கேட்டீங்களே, அத்தான்! உங்களுக்கு கம்பெனி கொடுக்க நான் ரெடி! காட்டேஜ் புக் பண்றீங் களா?''

அஞ்சலி புன்னகையோடு கிருஷ்ணாவைப் பார்த்துக் கண்ணடிக்க... புனிதா ஓங்கி அறைந்து விட்டாள்.

''சின்னப் பெண் என்று நினைத்தால் என்னவெல்லாம் பேசறே? போ... போடி தூரே! கிருஷ்ணா, கிளம்புங்க!''

புனிதா சத்தம் போட...

''ஏன் புனிதா கோபப்படறே? உன்னிடம் அப்படி விளையாட்டுக்குத் தானே கேட்டேன்! அதே போல அஞ் சலியும் தானே என்னிடம் விளையாட்டுக்குச் சொன்னாள். அதைப் பெரிசா எடுத்துட்டு இப்படிச் சின்னப் பெண்ணை அறைவாயா? பத்ரகாளியாய் மாறிக் கத்துவாயா? அவள் சொல்லிட்டாங்கிறதுக்காக இதுதான் சாக்குன்னு காட்டேஜ் புக் பண்ணி... அஞ்சலியோடு சல்லாபிக்கவா போறேன்? ஏன் புரிந்து கொள்ளாமல் நடந்துக்கறே?''

கிருஷ்ணா பதிலுக்கு முறைக்க...

''கிருஷ்ணா... கிருஷ்ணா... இதுக்கு மேலே ஒரு வார்த்தை பேசாதீங்க! எனக்குக் கெட்ட கோபம் வரும்!'' எரிந்து விழுந்துவிட்டுப் புனிதா வேகமாய் நடந்தாள்.

அன்றைய உல்லாசம் புனிதாவின் கோபத்தால் இடை யிலேயே அறுபட்டு வீடு திரும்பினர்.

ஒரு நாள் அஞ்சலி மிதமிஞ்சிய பாசத்தோடு அருகில் வந்து கேட்டாள்.

''அக்கா... என்னைப் பிரிந்து உன்னால் இருக்க முடி யுமா?''

''கொஞ்சம் கஷ்டம்தான், அஞ்சலி! பழகிக்கத்தானே வேணும்!''

''எதுக்கு அப்படிச் சிரமப்படணும்? பேசாமல் அத்தானுக்கு என்னை ரெண்டாவதா மணமுடிச்சிடேன்! நாம காலத்துக்கும் பிரியவே மாட்டோம்! சமையலறையை நீ பார்த்துக்கோ! கட்டிலறையை நான் மேனேஜ் பண்ணிக்கிறேன்!''

அஞ்சலி சிரித்தவாறு எழுந்து ஓட...

''ஏய் அஞ்சலி... அஞ்சலிக் கழுதே...'' என்று துரத்தி ஓடிய புனிதாவின் கையில் அகப்பட்டது அஞ்சலியின் குட்டை முடி.

''அஞ்சலி விளையாட்டுக்குக் கூட அப்படிச் சொல்லாதே! என்னால் தாங்க முடியாது! பொண்ணோ... பொருளோ... உடையோ அல்ல அவர்! இரண்டு பேரும் போட்டு போட்டுக் கழற்றுவதற்கு! அவர் என் புருஷன்! போற்றிப் பாதுகாக்க வேண்டிய புனிதமான உறவுடி! எந்த மனைவியும் தன் புருஷனைப் பங்கிட்டுக்க விரும்பவே மாட்டாள்! அப்படி ஒரு நிலைமை வந்தால் எந்த ஒரு உண்மையான மனைவியும் ஒன்று பைத்தியமாகிப் போவாள்! அல்லது மாண்டு மண்ணாகி விடுவாள்!...

''அஞ்சலி... நீ அவரோட பழகற முறை பிடிக்கலேடி! அவர் என் புருஷனாகப் போறவர்! அவரைத் தொட்டு, கட்டி விளையாடும் போது என் நெஞ்சம் விம்முதுடி!...

''வேற்று ஆணைத் தொட்டுக் கட்டிப் பேசலாமா? இப்படி அரை குறையா உடுத்திட்டுப் போய் நிற்கலாமா? சந்தர்ப்பம் வாய்த்தால் எந்த ஆணும் சலனப்படுவான்... சஞ்சலப்படுவான்... சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கவே விரும்புவான்!...



உனக்கானவனோடுதான் நீ இப்படியெல்லாம் பழக வேண்டும்! இல்லேன்னால் நாளைக்கு மணமாகிப் போகும்போது... உன் கணவரின் அளவுக்கதிகமான அன்பை, நேசத்தை, பாசத்தை அனுபவிக்கும்போது இப்போ இப்படிக் கண்டவனோடு பழகியதெல்லாம் உன் கண்முன்னே நின்று கலவரப்படுத்தும்! இரும்புச் சங்கிலி கொண்டு இதயத்தை இறுக்கிக் கட்டிச் சித்ரவதை செய்யும்! கடந்த காலத்தில் கசப்புகள் விஞ்சி நின்றால்... நிகழ்காலத்தில் வாழ்க்கை சுவைக்காதுடி, அஞ்சலி! இதுநாள்வரை எதுவும் தெரியாதவளாய் வாழ்ந்து இருக்கலாம்! இனியாவது பெண்ணாய் லட்சணமாய் இரு!''

புனிதா கூற...

அது சாத்தானுக்கு ஓதிய வேதமாய் அவள் காதில் விழாமல் போனது!

## 9

புனிதா எவ்வளவு புத்தி புகட்டியும்... அஞ்சலி தன்னை மாற்றிக் கொள்ளவில்லை!

கிருஷ்ணாவின் மேல் ஆசை கொண்டாள்! மோகம் கொண்டாள்! கிருஷ்ணாவும் அஞ்சலியை அடிக்கடி புகழ்வதும்... அவளின் அழகுகளை, வனப்புகளைக் கண் கொண்டு ரசிப்பதும்... அவள் தோலின் வெளுப்பினை ஏக்கத்தோடு பார்ப்பதும் கண்டு ஒரு முடிவுக்கு வந்தாள்.

கிருஷ்ணாவை விட்டால் தனக்கு இதுபோல நல்ல, படித்த, பணக்கார மாப்பிள்ளை கிடைக்க மாட்டான் என்று சிந்தித்தாள்!

'சந்தர்ப்பம் அமைந்தால் எந்த ஆணும் சலனப் படுவான்! சஞ்சலப்படுவான்! சந்தர்ப்பத்தைப் பயன் படுத்திக் கொள்வார்கள்!' என்று புனிதா புத்தி புகட்டிய தில் இருந்து ஒரு கள்ளப் பாடத்தைப் படித்துக் கொண்டு... கிருஷ்ணாவிற்கு அதுபோல ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்து... கிருஷ்ணாவை வளைத்துப் போட்டு... புனிதாவிடம் இருந்து கிருஷ்ணாவைத் தட்டிப் பறிக்க எண்ணம் கொண்டாள்.

பெற்றவர்களுக்கும், புனிதாவிற்கும் தெரியாமல் கல்லூரி செல்லும் வழியில் இருந்த பப்ளிக் பூத்தில் அடிக்கடி கிருஷ்ணாவைத் தொடர்பு கொண்டு பேசினாள்.

''கிருஷ்... எனக்கு உங்களைப் பார்க்காமல் இருக்க முடியலே! உங்களிடம் பேசாமல் இருக்க முடியலே! தூங் கினா கனவுல... நிஜத்துல எதிர்லன்னு உங்க நினைவுகள் என்னை இம்சிக்குது, கிருஷ்!'' என்று கொஞ்சுவாள்.

ஒருநாள் கேட்டாள்.

''கிருஷ் அத்தான்... வர சன்டே சென்னை வந்தால் போர் புனிதாவை விட்டுட்டு நாம ரெண்டு பேரும் மகா பலிபுரம் போகலாம்! கடலில் குளிக்கலாம்! ஜாலியா சுத்தித் திரியலாம்.''

அழகான புள்ளிமான் வந்து தானே கையில் விழுந் தால்... அதை வேடன் வேடிக்கை பார்ப்பானா? அதை இரையாய் உட்கொள்ளத்தானே நினைப்பான்?

அந்த விடுமுறைக்குக் கிருஷ்ணாவும், அஞ்சலியும் பெற்றோர்களுக்குத் தெரியாமல்...

கிருஷ்ணா நண்பனைப் பார்க்கச் செல்கிறேன் என்று ஒரு பொய்யை அவிழ்த்து விட்டும்... அஞ்சலி ஸ்பெஷல் கிளாஸ் என்று நம்ப வைத்துவிட்டும் கிளம்பி விட் டார்கள்.



கைகோத்து நடந்தார்கள்! கடலில் அரைகுறை ஆடையில் குளித்தார்கள்! கும்மாளமிட்டார்கள்! நீரில் விளையாடினார்கள்! நிறையப் பேர் இவர்களை வேடிக்கை பார்த்து ரசித்தார்கள்.

கிருஷ்ணா இதுநாள்வரை உத்தமனாய்த் தான் இருந் தான்! சிகரெட் பிடிப்பான்! நல்ல நாளில் நண்பர்களின் வற்புறுத்தலுக்குக் கட்டுப்பட்டு அளவாய்க் குடிப்பான்! பெண்களோடு சகஜமாய்ப் பழகுவான்! தவறு செய்த தில்லை!

அஞ்சலியின் அழகு அவனை இம்சித்ததுதான்! அவளின் வெண்மை நிறம் கண்டு மனம் பேதலித்தது உண்மைதான்! ஆனால் இது தவறு என்று அவனுக்குத் தெரிய மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

ஆனால், அவனோடு கள்ளத்தனமாய் போனில் பேசியும், வம்பிழுத்தும், மயக்கியும் விட்டாள், அஞ்சலி.

''கள்ளி! உனக்கு என்னைப் பிடிக்குமா?'' கேட்க...

''ரொம்ப ரொம்ப, வானளவு, கடலளவு, பூமியின் பரப்பளவுன்னு உங்களைப் பிடிக்கும் கிருஷ்! உங்களைப் போட்டோவில் பார்த்ததிலிருந்து...''

''ஏய்... நிஜம்தானா?'' ஆச்சரியமாய்க் கேட்க...

''ம்... இங்கே... இங்கே இருந்து இம்சித்தீர்கள்!'' அஞ்சலி நெஞ்சில் கை வைத்துச் சொல்ல... அவளின் நெஞ்சில் ஆசையோடு கிருஷ்ணா சாய... அவனை இழுத்து இறுக்கிக் கொண்டாள்.

நீரில் நனைந்த உடம்புக்கு அவளின் அணைப்பு இதமாய் இருந்தது.

''அத்தான்... உங்களுக்கு என்னைப் பிடிக்குமா?''

''பிடிக்காமலா... நீ அழைத்தவுடன் வந்தேன்!''

''புனிதாவை விலக்கிட்டு... என்னை மணந்துகுவீங்க தானே?''

''எப்படி முடியும்? ஊர் அறிய நிச்சயமாகிடிச்சி! அம்மா புனிதாதான் என் மருமகள்ன்னு சந்தோசமா இருக்கா! உன் அக்காவும் நல்ல பெண்! ஏமாற்றலாமா?''

''உங்களை நெஞ்சிலே சுமந்துட்டு... வேறொருவனை இந்த மடியில் சுமக்க முடியுமா? நான் உங்களை உயிரா நேசிக்கிறேன், அத்தான்! எனக்கு நீங்க வேண்டும்! புனிதா உங்களுக்குப் பொருந்துவாளா? உங்க டேஸ்டுக்குத் தக்கபடி குடும்பம் நடத்துவாளா?''

அஞ்சலி கேட்க... கிருஷ்ணா யோசனையில் ஆழ்ந் தான்.

''எத்தனை திருமணங்கள் மணவறைவரை வந்து நின்று இருக்கின்றன!''

''இது துரோகம் இல்லையா?''

''இப்படிச் சிந்திப்பவர் என் மனதில் எதுக்கு ஆசையை விதைக்கணும்?''

''நானா? மேலே விழுந்து பழகி, என்னை மயக்கி, இப்படிக் கெடுத்ததே நீதான்!'' என்று அஞ்சலி மேல் பழியைச் சொல்ல...

''ஆமாம்... எனக்கு உங்க மேல் ஆசை வந்தது! கட் டிக்கப் பிரியப்பட்டேன்! அதனால் இப்படி வந்து பழகி னேன்! தப்புத்தான்! ஒத்துக்கிறேன்! நீங்கதான் உத்தம ராச்சே...! நீங்க ஒதுங்கிப் போயிருக்கலாம், இல்லையா? நிச்சயித்த பெண்ணுக்குத் துரோகம் செய்யாமல் இருந் திருக்கலாம், இல்லையா? எதுக்கு வரணும், என் பேரில் அறுபது சதவீதம் தப்பு இருந்தால்... உங்க மேலும் நாற்பது சதவீதம் தப்பிருக்கு இல்லே?...



''அந்தத் தப்பை எப்படி நேர் செய்யப் போறீங்க? சொல்லுங்க, கிருஷ்?''

அஞ்சலி கேட்டுவிட்டுக் குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

கூடப் பிறந்தவளுக்குத் துரோகம் செய்கிறோமே என்று சிறு துளியாய் எழுந்த எண்ணம் காட்டாற்று வெள்ளமாய்ப் புரட்டிப் போட்டது.

# 10

கிருஷ்ணாவிற்குச் சென்னைக்கே மாற்றல் கிடைத்து விட்டது.

கல்யாண வேலைகளான நகை, புடவை, பத்திரிகை, என்ற வேலைகள் மடமடவென நடந்தேறின.

கிருஷ்ணாவிற்கும் அஞ்சலியைப் பிடித்துவிட்டது! அஞ்சலியை மணந்தால் இன்பமான வாழ்க்கை வாழ லாம் என்றே எண்ணினான்.

அஞ்சலியும் அவனிடம் பேசிப் பேசியே கிருஷ்ணா வின் மனதைக் கலைத்து விட்டாள்.

''நீ சொல்லு உன் பெற்றவர்களிடம்...!'' என்று கிருஷ்ணா சொல்ல...

''நீங்க சொல்லுங்க உங்க வீட்டுல...!'' என்று அஞ்சலி கிருஷ்ணாவிடம் கூற... இருவரும் போட்டி போட்டுக் காலத்தைக் கடத்தினர்.

ஒரு நாள் திருமண மண்டப நிர்வாகியிடம் இருந்து கிருஷ்ணாவிற்கு போன் வந்தது.

''வாங்க சார்... உட்காருங்க சார்!'' என்று கிருஷ் ணாவை வரவேற்ற மேலாளர்...

''சார்... நம்ம மண்டபத்துல ஒரு கண்டிஷன்! இங்கு மணம் செய்துக்கிற பெண்ணும், மாப்பிள்ளையும் ஹெச்.ஐ.வி டெஸ்ட் எடுத்து... எய்ட்ஸ் இல்லேன்னு சர்ட்டிபிகேட் சமர்ப்பிக்கணும்! நீங்க மண்டபத்தைப் புக் பண்ணும்போது இந்தச் செய்தியைச் சொல்ல மறந்துட் டேன்! ஸாரி சார்! நாள் நெருங்கிட்டு இருக்கு! உடனே டெஸ்ட் செய்து... சர்ட்டிபிகேட்டைச் சமர்ப்பித்தால் நல்லாயிருக்கும்!''

''என்ன சார் இது? நான் இதுநாள்வரை இப்படி ஒரு செய்தியை எங்குமே கேள்விப்படலையே?''

கிருஷ்ணா ஆச்சரியத்தோடு கேட்க...

''எங்க மண்டபத்தின் முதல் கட்டளை இது! வேகமான உலகத்துல மனிதர்கள் ராட்சசர்களா மாறி... வேண்டாத உயிர்கொல்லி நோயான எய்ட்ஸை வரவழைச்சுட்டு நிறைய இளைஞர், இளைஞிகள் சமுதாயத்துல அல்லாட றாங்க! சரியானபடி மாப்பிள்ளை - பெண்ணின் நடத்தை, குணாதிசயங்கள் தெரியாமல் எத்தனையோ பேரின் வாழ்க்கை நாசமாய்ப் போயிடுது!...

அதனால்தான் இத்தகைய ஏற்பாடு! இந்தச் சமுதாயத் திற்கும், சமூக மக்களுக்கும் எங்களால் ஆன சிறு உதவிதான் இது! பெண்ணை அழைச்சிட்டுப் போய், ரெண்டுபேரும் டெஸ்ட் எடுத்துட்டு வந்து, ரிசல்ட்டைக் கொடுங்க!''

கிருஷ்ணா அஞ்சலியிடம் வந்து விபரம் சொன்னான். அஞ்சலி புனிதாவிடம் பக்குவமாய்ப் பேசி ஆஸ்பத்திரி அழைத்துப் போனாள்.



பியூட்டி பார்லர் செல்வதாய் வீட்டில் தகவல் கொடுத் தாள், அஞ்சலி.

கிருஷ்ணா ஏற்கெனவே அப்பாய்ன்ட்மெண்ட் வாங்கி யிருந்ததால் சிறு சிரமமும் இல்லாமல்... இருவரின் ரத்தமும் எடுத்து லேப்புக்கு அனுப்பப்பட்டது.

மூவரும் வெளியே காத்திருந்தனர்.

புனிதாவிற்கு நெருப்பின் மேல் நிற்பது போன்றொரு உணர்வு அவளை அலைக்கழித்துப் பாடாய்ப்படுத்தியது.

டாக்டர், கிருஷ்ணாவின் வயது உள்ளவன்தான்! இந்தச் சிறு வயதில் சிட்டி முழுக்க அவனுக்கு நல்ல பெயர்!

டாக்டரின் எதிரில் அமர்ந்தனர்.

டாக்டரின் முகம் தெளிவற்று, களையிழந்து இருந்தது. கிருஷ்ணா, புனிதா என மாறி மாறிப் பார்த்தவன் சொன் னான்...

''கிருஷ்ணா... உன்னுடைய ரிசல்டில் நெகட்டிவ்ன்னு வந்திருக்கு! ஆனால்... பு... புனிதாவோட ரி... ரிசல்ட் தான் பாசிடிவ்ன்னு வந்திருக்கு! ஸா... ஸாரிம்மா!'' என்று டாக்டர் கூற...

மூவரும் அதிர்ந்தனர். புனிதா ஒரு படி மேலே போய் வானமே இடிந்து தலையில் விழுந்தாற் போலக் கத்தி னாள்... கதறினாள்... வீறிட்டாள்... துடிதுடித்தாள்!

''கிருஷ்ணா உன்னைப் பற்றி ரொம்ப பெருமையா சொல்லியிருக்கான்! ஆனால் இந்த 'எய்ட்ஸ் நோய்' எப்படி உனக்கு வந்தது?''

அஞ்சலியை அணைத்துப் புனிதா கதறினாள். கிருஷ் ணாவிற்குப் புனிதாவின் அழுகை... கண்களில் கண் ணீரை வரவழைத்தது.

''அக்கா இன்னொரு அன்னை தெரேசா, டாக்டர்! நேரம் கிடைக்கும் போதெல்லாம் ஆஸ்பத்திரி, அநாதை இல்லம்ன்னு சேவை செய்யப் புறப்பட்டு விடுவா! அவ் வாறு எய்ட்ஸ் நோயாளிகளுக்குப் பணிவிடை செய்யும் போது இந்த நோய் ஒட்டி இருக்குமா?''

அஞ்சலி டாக்டரைப் பார்த்துக் கேட்க...

''எய்ட்ஸ் நோயாளிகளைத் தொடுவதாலோ... அவர்கள் பயன்படுத்திய கழிவறைகளைப் பயன்படுத்துவதாலோ... அருகில் நின்று பழகுவதாலோ இந்த நோய் ஏற்படாது! நீ படித்த பெண் தானே? அப்போ சேவை செய்யறவங்க அத்தனை பேரும் எய்ட்ஸ் நோயாளியா மாற வாய்ப் பிருந்தால் யார் சேவை செய்யப் போவா? மடத்தனமா ஏதாவது கேட்காதீங்கம்மா!''

''இல்லே... இல்லே... எய்ட்ஸ் நோயாளிகளுக்குச் சேவை செய்யும்போது... அவர்கள் புண்ணில் இருந்து வழிந்த ரத்தம் ஒரு சொட்டு நம் மேல் பட்டாலும்... அஞ் சலியை இடைமறித்தான், டாக்டர்.

''போதும் உங்க திங்க்கிங்! புனிதா... சமீபமா உங்களுக்கு ஆக்ஸிடெண்ட் ஆனதா?''

''ம்...'' என்றாள், புனிதா.

''ரத்தம் ஏற்றும் அளவு?''

''ம்... மோட்டர் சைக்கிள் மோதி நான் விழுந்து... நிறைய ரத்தம் சேதாரமாகி... ரத்தம் ஏற்றிப் பிழைக்க வச்சாங்க, சமீபமா!'' அஞ்சலிதான் விளக்கினாள்.

''சரியானபடி டெஸ்ட் செய்யாத ரத்தம் உங்க உடம் பில் செலுத்தப்பட்டிருக்கு! அதுவும் ஒரு எய்ட்ஸ் நோயாளி யின் ரத்தம்! அடிக்கடி சுரம், தலைவலி, பலகீனம் என்று ஏற்பட்டிருக்கா?''



புனிதா 'ஆம்' என்று தலையாட்டினாள் அழுகையோடு.

''டாக்டர்கிட்ட போனீங்களா?''

''ம்கூம்... மெடிக்கல்ல அப்பப்போ மாத்திரை வாங்கிப் போட்டுக்குவேன்!''

''இதுதான் கிருஷ்ணா இந்த மக்கள்கிட்ட இருக்கற பெரும் தவறு! அம்மா... மருந்து, மாத்திரைகளால் குணப் ப்டுத்த முடியாத நோய், இந்த எய்ட்ஸ் நோய்! ஆனால், நாட்களைத் தள்ளிப் போட்டு... நீண்ட நாட்கள் வாழ லாம்! அதுக்குத் தேவை சுத்தம், சுகாதாரம், இயற்கை உணவு, ஆரோக்கியமான உணவு, யோகா, உடற்பயிற்சி என்று கடைப்பிடித்தால்... ரொம்ப நாட்கள் உயிரோடு வாழ முடியும்!''

''நான் வாழ்ந்து எதைச் சாதிக்கப் போறேன்? ஏதாவது விஷ ஊசி போட்டுச் சாகடிச்சிடுங்க டாக்டர்!''

புனிதா அழுதாள்.

''கடவுள் கொடுத்த உயிர்! அதனைப் போக்க எனக்கோ... உனக்கோ ரைட்ஸ் இல்லம்மா! மாத்திரை, மருந்து தரேன்! மறக்காமல் தொடர்ந்து சாப்பிடு!''

அஞ்சலி புனிதாவைக் கையணைப்பில் வெளியே அழைத்து வந்தாள். பின் இருக்கையில் அஞ்சலியின் மடியில் தலை வைத்துக் குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

மூவரும் சென்ற இடம்... அழகான பூங்கா.

புனிதா அழுகையை நிறுத்தி... வெட்ட வெளியை நோக்கினாள்.

'வாழ்வாகிய ஆடையில் எப்பொழுதும் இருவகை நூல்கள். அவை நன்மை, தீமை இரண்டுமாம்'

— காண்டேகர்.

புனிதா இவற்றையெல்லாம் படித்து அறியாதவள் அல்ல!

ஆனாலும், அவளால் இந்தப் பெரிய பேரிடியை, பெரும் மின்னலைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

'இவ்வளவு பெரிய துக்கத்தை எப்படி என்னுள் போட்டுப் புதைத்து வாழ்வது? இப்படி ஒரு இழிவான நோயோடு எவ்வாறு உயிர் வாழ்வது? இப்படி ஒரு உடலும், உயிரும் தேவையா? இந்தச் சாக்கடைக்குச் சமமான அமில உடலை வைத்துக் கொண்டு... இந்த உலகில் எதைச் சாதிக்கப் போகிறோம்! எதை எட்டிப் பிடிக்கப் போகிறோம்?'

'பேசாமல் இறந்து விடலாமா?'

'எப்படி இறப்பது?'

'தூக்க மாத்திரை விழுங்கியா?'

'தூக்குப் போட்டு உயிரை மாய்த்துக் கொள்வதா?'

'தண்டவாளத்தில் தலை வைத்துச் சாவதா?'

செய்துவிடலாம்! எளிதுதான்!

ஆனால், அதை இப்போது செய்தால் வீடு துக்கப் பட்டுப் போய்விடும்!

கல்யாணம் நின்று போனாலே பெற்றவர்களால் தாங்க முடியாது. எய்ட்ஸ் நோய் வந்து புனிதா இறந்துவிட்டால் என்றால் தாயும், தகப்பனும் சுவாசிக்க மாட்டார்கள்!

அதனால் இறப்பு என்பது வேண்டாம்!

என்ன செய்வது? திருமணம் நின்று பெற்றவர்கள் தலை குனியாமல் இருக்க, எது மாதிரியான தீர்வைக் காண்பது?



புனிதாவிற்கு விடைதான் தெரியவில்லை!

''அக்கா... இப்போ என்ன செய்வது?''

மூவருக்குமிடையே ஏற்பட்ட மௌனத்தை அஞ்சலி தான் உடைத்தாள்.

''திருமணம் நின்று போனால் இரு குடும்பங்களுக்கும் பெருத்த அவமானம்! உனக்கு வந்திருக்கும் நோயைத் தாய், தந்தையிடம் கூறினால், அவர்கள் உயிர் வாழ்வார்களா?''

புனிதாவினுள் சுருண்டிருந்த அழுகை சுனாமியாய்ப் பொங்கிப் பிரவாகம் எடுத்தது!

''கிருஷ் அத்தான் எவ்வளவு படித்தவர்! நல்ல குடும்பத்தில் பிறந்தவர்! மாசமானால் எவ்வளவு சம்பாதிக்கிறார்! எல்லாவிதத்திலும் உன்னைவிட அவர் உயர்வானர்! அப்படிப்பட்டவர் உன்னைக் கட்டிக் கொள்கிறேன் என்றதே வரம்! உனக்கு வந்திருக்கும் நோயால்... சமூகத்தில் திருமணம் நின்று அவமானப்படப் போகிறார், கிருஷ்!''

அஞ்சலி கூற... புனிதா தாங்க முடியாமல் வீறிட்டாள்.

''என்ன செய்வது? அத்தானுக்கு அவமானம் நேராமல் எப்படித் தடுப்பது?''

''வேறு டாக்டரிடம் காட்டிப் பரிசோதித்துப் பார்க்கலாம், புனிதா! என்ன சொல்றே?'' கிருஷ்ணா கேட்க...

''வேண்டாம்!'' என்று புனிதா மறுக்க... அவளை வற்புறுத்தி வேறு டாக்டரிடம் அழைத்துப் போனாலும் அதே பதிலே கிடைத்தது.

மீண்டும் அதே பூங்காவிற்கு வந்தனர். பூமி மெல்ல மெல்ல இருட்டுப் போர்வையைப் போர்த்திக் கொண்ட இரவு எட்டு மணி!

''மகனுக்கு மணமுடித்துக் கண்குளிரப் பார்க்க ஆசைப் பட்டார், பார்வதி ஆன்ட்டி! பாவம், அவர் ஆசை கானல் நீராகப் போகுது! அவரால் தாங்கிக் கொள்ள முடியுமா?''

''நான் என்ன செய்வேன், அஞ்சலி? நோயுள்ள என்னை எப்படி அவரால் திருமணம் செய்துக்க முடியும்? தெரிந்தே பள்ளத்தில் விழலாமா? அவரே சம்மதித் தாலும் நான் சம்மதிக்க மாட்டேன்!''

புனிதா முடிவாய்க் கூறினாள்.

''இதற்கு என்ன தீர்வு?'' அஞ்சலி கேட்க...

அங்கே நீண்ட நேரம் மௌனம்!

கொஞ்ச நேரத்தில் புனிதாவின் உள்ளத்தில் அந்த எண்ணம் சட்டென்று வெடித்து மலர...

''நீ... நீ நி...நினைத்தால் மு...முடியும்! உன்னால் முடியும் அஞ்சலி!''

''எ... எப்படி?''

''இவரை நீயே திருமணம் செய்துக்கோ!''

''நா.. நானா?''

''ஆமா அஞ்சலி! இந்த நேரத்தில் நம்ம குடும்ப மானம் காக்க நீதான் உதவ வேண்டும்!''

''மாட்டேன், புனிதா!'' அஞ்சலி மறுக்க...

''ப்ளீஸ்... ப்ளீஸ் அஞ்சலி!'' புனிதா கெஞ்ச...

''வீட்டில் என்ன சொல்லி விளக்குவது?''

''உனக்குச் சம்மதமா சொல்? பிறகு இதற்கு ஒரு கார ணத்தைக் கற்பித்துக் கொள்ளலாம்! உனக்குக் கிருஷ் ணாவைப் பிடிச்சிருக்குதானே?''

''ம்... ஆனால் படிக்கவும் ஆசையா இருக்கு! சரிவிடு... குடும்பத்திற்காக நான் இதைக் கூடச் செய்யக் கூடாதா?''



''அஞ்சலி... அஞ்சலி... என் கண்ணே! உனக்கு எப்படியடி நன்றி கூறுவேன்! அடுத்த பிறவி என்று ஒன்று இருந்தால் உன் வீட்டைக் காவல் காக்கும் நாயாய்ப் பிறக்க வேண்டும்! அல்லது உன் காலை அலங்கரிக்கும் செருப்பாய் நான் உருமாறி... உன் காலில் தேய வேண்டும்! உன்னை... உன் உதவியை... என் உயிர் உள்ளவரை மறக்க மாட்டேன், அஞ்சலி!''

புனிதா தங்கையைப் பிரியத்தோடு கட்டிக் கொண்டு அழுதாள்.

அஞ்சலி ஆனந்தக் கண்ணீர் வடித்தாள்.

இத்தனை எளிதாய்க் கிருஷ்ணா தனக்குக் கிடைப்பான் என்று அஞ்சலி நினைக்கவில்லை!

புனிதாவோ வீட்டில் கூறி எவ்வாறு கிருஷ்ணா - அஞ்சலி திருமணத்தை நடத்துவது என்று மொட்டை மாடியில் கால் வலிக்க நின்று யோசித்தாள்.

கடைசியில் அந்த எண்ணம் மனதில் அரும்ப மலர்ந் தாள்!

## 11

இன்பம், துன்பம் இரண்டின் நிறம்தான் என்ன? இன்பத்தின் நிறம் வெள்ளையா? துன்பத்தின் நிறம் கறுப்பா?

இன்பம், துன்பம் என்று ஒன்றை உருவாக்கியதே மனிதன்தான்! எல்லாம் மனிதனே வகுத்துக் கொண்டு... தன்னை வீணாக மாய்த்துக் கொள்ளும் இழிவான

செயல்தான் அது! கடைசியில் கடவுள் துன்பத்தைக் கொடுத்துவிட்டார்! இன்பத்தைத் தட்டிப் பறித்து விட்டார் என்று இறைவனைக் குறை சொல்லும் மனிதப் பிறவிகள் ஏராளம்!

படிக்கும் காலத்தில் புனிதா இப்படியெல்லாம் வாதிட்டு இருக்கிறாள், தோழிகளிடம்!

இன்று துன்பத்தின் வீரியம் கண்டு அவளே துக்கப் பட்டுப் போகிறாள்!

'அம்மா! எனக்கு வந்திருப்பது எய்ட்ஸ் என்ற உயிர் கொல்லி நோய்! அதனால் கிருஷ்ணாவை மணந்து கொள்ள முடியாது! அவருக்கு அஞ்சலியை மணம் முடித்து வையுங்கள்!' என்று தனது நோயைப் பற்றி வெளிச்சம் போட்டுக் காட்டினால்... அந்த வேதனையைப் பெற்றவர்களால் தாங்கிக் கொள்ள முடியாது!

அப்பா உடல் பலகீனமானவர்! அப்பாவுக்கு ஏதாவது நேர்ந்து விட்டால் அம்மாவும் உயிர் வாழ மாட்டாள்!

அவர்கள் வலியையும், வேதனையையும் சுமக்காமல் இருக்க வேண்டுமானால் என்ன செய்வது?

மூளையைப் போட்டுக் கசக்கினாள், புனிதா.

ஒருவருக்கு வேதனையும், கஷ்டமும், நஷ்டமும், துன்பங்களும், துயரங்களும் தாக்கினால் அது உயிர் உள்ளவரை அவர்களின் மனதை, உடலைத் தாக்கித் தரைமட்டமாக்கி விடும்!...

அதுவே அவர்களுக்கு மிதமிஞ்சிய அவமானம் நேர்ந் தால்... அது கோபமாகி... பின் பயங்கரக் குரோதமாகி... என்னை எதிரியாய்ப் பாவித்து... கொஞ்ச நாளில் என்னை மறந்து இயல்பு வாழ்வு வாழப் பழகி விடுவார்கள்!



ஒருவன் வேதனையைத் தாங்கிக் கொள்வதை விட அவமானத்தைத் தாங்கிக் கொள்வான்! வேதனை ஒரு வனைத் தரைமட்டமாக்கி விடும்! அதுவே அவமானம் தாக்கினால் கொஞ்சம் அஸ்திவாரம் ஆட்டம் மட்டுமே காணும்!

அதுவும் இதுபோல அவமானங்கள் தெருவுக்கு நாலு இல்லாமல் போகாது!

அன்புள்ள அப்பா, அம்மாவுக்குப் புனிதா எழுதிக் கொள்வது,

முதலில் என்னை மன்னித்து விடுங்கள்! ஆனால் மன்னிக்க முடியாத செயலைத்தான் செய்து இருக் கிறேன்! என்னை ஒருவர் உயிராய் நேசித்தார்! உங்கள் மேல் நான் கொண்ட பாசத்தில், நீங்கள் என்மேல் வைத்த நம்பிக்கையால் அவருடைய காதலை நான் ஏற்றுக் கொள்ளவில்லை! என் நெஞ்சில் நேசத்தை நுழைய விடவில்லை!

என்னைப் போலவே ஓவியம், சிற்பம் செய்பவர். நான் வழக்கமாய் மணி, ஜிமிக்கி, நூல் வாங்கச் செல்லும் கடையில்தான் அவர் என்னைச் சந்தித்துக்... காதல் கொண்டார்!

சமீபமாய் அவரைச் சந்தித்தேன்! என் நினைவில் வாழ்வதாகவும்... நான் அவருக்குக் கிடைக்கவில்லை யென்றால் உயிர் வாழ மாட்டேன் என்றும்... அவர் காதலை யாசகமாய்க் கேட்க... என்னால் மறுக்க முடியவில்லை! என் மீது நேசம் கொண்டவருக்குத் துரோகம் இழைக்க விரும்பவில்லை!

என்னை பூஜித்தவருக்கு... என்னைச் சுவாசித்தவருக்கு என்னை நான் முழுமையாய், உளமறிய ஒப்படைக்கப் போகிறேன்! அவர் கரம் பற்றி வெளியேறுகிறேன்!

என்னைவிடக் கிருஷ்ணாவிற்கு அஞ்சலி பொருத்த மாய் இருப்பாள்! இருவருக்கும் மணம் முடித்து வையுங்கள்.

என்னை மன்னித்து விடுங்கள்.

இப்படிக்கு,

புனிதா.

'காதலனோடு போகிறேன்' என்று புனிதா தன் மீது சேற்றையும், சகதியையும் வாரிப் பூசிக் கொண்டு வந் திருக்கிறாள்.

பூமி இருட்டின் மடியில் தலைசாய்ந்து நிம்மதியாய்த் தூங்கிக் கொண்டிருந்தது.

நள்ளிரவு 1.00. மணி!

சேலம் எக்ஸ்பிரஸ் இருட்டைக் கிழித்துக் கொண்டு விரைந்தது!

புனிதா தனக்கான கம்பார்ட்மெண்டில் தனியே அமர்ந்திருந்தாள். ஜன்னல் வழியே நல்ல குளிர்ந்த பனிக்காற்று வந்து... அவளின் மெல்லுடலைத் தழுவி... அவளை ஜில்லிட வைத்தாலும்... அவளுக்குக் குளிரவே யில்லை!

உடலும், மனமும் மரத்து... உணர்வுகள் அறுந்த வளுக்கு எப்படிக் குளிரும்?

அவளுக்குள்ள நோயை மறைத்து... காதலனுடன் விரும்பிய வாழ்க்கை வாழப் போவதாய் எழுதி வைத்து விட்டு... பெற்றவர்களைப் பிரிந்து... பிரியமான தங் கையைப் பிரிந்து... அந்தஸ்து, படிப்பு பாராமல் திரு மணம் செய்து கொள்கிறேன் என்ற கிருஷ்ணாவை விட்டு விட்டு... அன்பான பார்வதி ஆன்ட்டியை



மறந்து... விடையே தெரியாத பயணம் எத்தகைய கொடுமையானது?

கண்களிரண்டும் நதியைப் போல பிரவாகம் எடுத்து ஓடின. தனிமை கொடுத்த அநுமதியில் அழுதவளின் அழுகை அந்த இளைஞனின் வரவால் தடைப்பட்டது.

மீண்டும் சூடான வெந்நீர் ஊற்று கண்களில் பொங்க, தலை குனிந்து, அவனுக்குத் தெரியாமல் துடைத்துக் கொண்டாள்.

'மரம் தன் கிளைகளை இழந்தாலும்... மீண்டும் துளிர்த்து, தளிர்த்து, மொட்டு விட்டு, காய்த்து, கனியாகி உயிர் வாழும்! ஆனால் வேரினை இழந்தால் மண்ணில் மரங்கள் உயிர் வாழ முடியுமா?'

'புனிதாகூட வேரினை இழந்த மரம்தான்! இனி விழுது விட முடியாது! ஒரேயடியாய் மண்ணில் சாய்ந்து, விழுந்து, மட்கிப் போக வேண்டியதுதான்!'

அவளின் மிதமிஞ்சிய அழுகையை அந்த இளைஞன் கண்டுவிட்டான்!

வேதனையை வேதனைப்பட்ட இதயத்தால் மட்டுமே இனம் கண்டுபிடிக்க முடியும்! அவனும் அளவுக்கதிக மான வேதனையைச் சுமந்து ஊரிற்குச் செல்கிறான்!

ஊரிலே எல்லோரும் அவனோடு இன்னொரு நபரை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருப்பார்கள்!

வேதனையைக் கொடுத்தது, ஒரு பெண்!

பெண்ணால் வேதனையென்றால் அது காதலால் தான் ஏற்பட்டிருக்க வேண்டும்!

ஆம், காதல்தான்! உயிருக்குயிரான காதல் என்று நினைத்தவனுக்கு உயிர் கொல்லும் காதலாய்ப் போய் விட்டது!

தோல்வியைப் பரிசளித்து விட்டுப் பறந்து விட்டாள், அந்தச் சிட்டு!

அவன் வாழ்க்கையையே வெறுத்துத் தன் பிறந்தகம் பயணப்படுகிறான்!

''ஹலோ... ஏங்க அழறீங்க? ரயிலில் ஏறியதிலிருந்து நானும் பார்க்கிறேன், விடாமல் தொடர்ச்சியா அழுதுட்டு வரீங்களே! உடம்பு என்னத்துக்கு ஆகும்ங்க?'' புனிதாவைப் பார்த்துக் கேட்டான்.

''.........''

''தெரிந்தவர்களுக்கு ஏதாவது உடல்நிலை சரியில்லையா? அல்லது சொந்தம், சுற்றத்தில் ஏதாவது நிகழ்ந்து விட்டதா?''

புனிதா கண்ணீரோடே 'இல்லை' என்று தலையாட்டினாள்.

''என் பெயர் ரமணன்! சேலத்துக்குப் பக்கம் சேர்வராயன் மலையடிவாரத்துல, ஏற்காடு மலையேறுமிடத்தில் என் ஊர் இருக்கு! அங்கேதான் போறேன்! நீங்க எங்கே போகணும்? என்ன இழப்பு நடந்துவிட்டது? சொல்லக் கூடாதா?...

''என்னை உங்க தோழனா நினைத்து... உங்களோட சுக துக்கங்களை என்னிடம் பகிர்ந்து கொள்ளலாம்! உடலையும், மனதையும் நம் வசம் வைத்துக் கொள்ள வேண்டும்! அப்படித் தன்வசப்படுத்திக் கொள்ளாவிட்டால் இப்படித்தான் துன்பத்தைக் கண்டும், துக்கத்தைக் கண்டும் வீறிட வைத்துவிடும்! நம்மைத் துவண்டு போக வைத்துவிடும்!''

புனிதா கண்ணீரைக் கட்டுக்குள் கொண்டு வந்தாள்.



''நான் கூடத் தாங்க முடியாத சோகங்களை இதயத்தில் சுமந்து கொண்டு ஊரிற்குப் பயணிக்கிறேன்! சென்னை எனக்கு நிறையப் பாடங்களைச் சொல்லி அனுப்புகிறது!''

புனிதா அவனைக் கேள்வியோடு நோக்க...

''நீங்க பெண்! மனதில் உள்ள வலிகளை அழுது ஆத்திடறீங்க! அதே ஒரு ஆண் எல்லாவற்றையும் தன்னுள்ளே போட்டுப் புதைச்சிட்டு, வலிய புன்னகையை முகத்தில் சூடிக் கொண்டு நடமாட வேண்டிய பரிதாப நிலை! அழறதுல பெண்ணுக்கு இருக்கற சுதந்திரம் ஆணுக்கு இல்லைங்க!...

எதையும் தன்னுள்ளே போட்டுப் புதைச்சிக்கக் கூடாது! அப்படிப் புதைச்சிகிட்டால்... அது ஒருநாள் பூகம்பமாய் வெடித்து... புயலாய் எழுந்து நம்மை நிலைகுலைய வைத்துவிடும்!''

ரமணன் நட்புடன் கேட்டான்.

புனிதாவின் ஆழத்தில் கிடப்பது சொல்லி ஆற்றக் கூடிய சோகங்களா?

அவளின் ரணத்திற்கு மருந்தேதும் உண்டா?

அவள் துன்பத்தின் வீரியம் புரியாமல் அறியாச் சிறுவனாய்க் கேட்கிறான். எப்படிச் சொல்லுவாள்?

அவனுக்குப் பதில் கண்களில் கண்ணீராய்க் கிடைத்தது!

''சரிங்க! நீங்க எதுவும் சொல்ல வேண்டாம்! ஆனால் என் சோகத்தை, வேதனையை உங்களிடம் சொல்லுவேன்! அதுவும் இல்லாமல் உங்களிடம் சொல்லணும்ன்னு தோணுது! அது எனக்கு மருந்தாய் இருக்கும்ன்னு தோணுது! கேட்பீங்களா?''

ரமணன் கண்ணீர் மினுமினுக்க அவள் விழிகளை நோக்க... அவளும் அவனை நோக்க... இரு ஜோடி

விழிகளின் சங்கமத்தில்... கண்ணீர் நலம் விசாரித்துக் கொண்டது!

## 12

ஏற்காடு மலையேறும் பாதையின் அடிவாரத்தில் ரமணனுடைய சிற்றூர் இருந்தது.

அந்த ஊரின் விவசாய நிலங்களில் பெரும்பான்மை நிலம் ரமணனின் தந்தைக்கு உரியது! பரம்பரைச் சொத்து! பெரிதாகிற்றே தவிர குறையவில்லை!

மா, திராட்சை, மாதுளை, தென்னை, கமுகு, வாழைத் தோட்டம் என்று ஒவ்வொன்றும் ஐம்பது ஏக்கருக்குக் குறையாமல் விரவிப் பரவி இருக்கிறது! நெல்லும், கரும்பும் என்று எங்கும் அவர்களின் விளைநிலம் பச்சைப்பட்டுடுத்தி... கம்பீரமாய்க் காட்சியளித்தது!

சேலத்தில் வரிசையாய்க் கடைகள், ஏற்காட்டில் கெஸ்ட் ஹவுஸ், பண்ணையில் அரண்மனை போல வீடு... ஊரிற்குள் பெரிய பங்களா என்று ரமணனுடைய சொத்துக்களை அடுக்கிக் கொண்டே போகலாம்!

ரமணன், நிவேதிதா என்று இரு பிள்ளைகள் சாந்தா - நாராயணன் தம்பதிக்கு!

நிவேதிதா சேலத்தில் மணமாகிச் சீரும் சிறப்போடும் வாழ்கிறாள்!

ரமணன் சேலத்தில் தரமான கல்லூரியில் வர்த்தகம் பற்றிய படிப்பு படித்தான்! பிறகு தந்தையோடு பண்ணையை மேற்பார்வை செய்தான்!



படித்த படிப்பு என்ன? பார்க்கும் வேலை என்ன?

தந்தையிடம் சேலத்தில் பிசினஸ் வைத்துத் தரக் கேட்க... அவரோ மறுத்துவிட்டார்.

இங்கிருக்கும் சொத்துக்களே ஏராளம்! புதிதாய் பிஸினஸ் எதுக்கு? தோட்டங்களை மேற்பார்வையிடு! அதுவும் பிடிக்கலேன்னால் விட்டுடு! ஜாலியா இரு! நல்ல பெண்ணாய்ப் பார்த்துத் திருமணம் செய்து வைக்கிறேன்! அந்தப் பெண்ணோட சந்தோசமாய்க் குடும்பம் நடத்தி... குழந்தைகளைப் பெற்று... குதூகலமாய் இரு! அதை விடுத்துத் தனியே பிசினஸ் அது இது என்று பிதற்றாதே!''

நாராயணன் சத்தம் போட... ரமணன் சொல்லாமல் கொள்ளாமல் சென்னை சென்றுவிட்டான்.

தாயும், தகப்பனும் அலை மோதினார்கள்! சாந்தாவிற்கு உடல் நலனே பாதித்துப் படுத்துவிட்டார்.

இரண்டு மாதம் கழித்துத் திரும்பி வந்தான்! தாயின் உடல் சீரானதும் மீண்டும் கிளம்பி விட்டான்.

சிறு அறையை வாடகைக்கு எடுத்து... மெஸ்ஸில் சாப்பிட்டு... வேலைக்குப் போய் என்று அவனின் வாழ்க்கை நிலையே மாறியது!

சம்பாதித்ததில் அவனுடைய செலவு போக... மீதியைத் தாய்க்கு அனுப்பி வைத்தான். அந்தப் பணத்தைக் கண்டு சாந்தா மகிழ்ந்து போனார்.

நாராயணன் கூட ரமணனின் பொறுப்பில் அக மகிழ்ந்து போனார்!

பிள்ளையின் பிடிவாதம்... சுய சம்பாத்திய வாழ்க்கை... சுய கௌரவம் அத்தனையும் அவருக்குப் பிடித்திருந்தது!

சிறுபிள்ளைக்குப் பெரிய வியாபாரம் எதற்கு என்று மறுத்ததின் பலன்... அவன் வாழ்க்கையை புரிந்து கொண்ட விதம்... பொறுப்புணர்ச்சி அவனிடமிருந்து வெளிப்பட்டது!

ஊரில் என்றால் இளவரசன் கணக்காய் உடுத்திக் கொண்டு, பொறுப்புணர்ச்சி இல்லாமல் நண்பர்களோடு வெளியே கிளம்பி விடுவான்!

ரமணன் ஆபீஸ் முடிந்து... மெரினாவிற்குப் போய்க் காற்று வாங்கி விட்டுத் தான் வீடு திரும்புவான்!

அன்று பஸ்ஸில் கூட்டமில்லை!

அவன் அமர்ந்திருந்த இருக்கையில் இடமிருக்க... துள்ளித் திரியும் பெண்மயில் ஒன்று தோழிகளுக்குக் கையசைத்து விடை கொடுத்துவிட்டு அவன் பக்கத்தில் வந்து அமர்ந்தது.

கண்டக்டர் டிக்கெட் கேட்டு வர... கைப்பைக்குள் கையை விட்டுத் துழாவியள் பதறினாள்!

''சார்... பர்ஸ் திருடு போய்விட்டது!'' என்று கலக்கத்தோடு கூற...

''நவீனப் பிச்சையா...? உன் போன்ற பெண்கள் சிலது இப்போதெல்லாம் இப்படித்தான் பிச்சை எடுக்கிறார்கள்!'' என்று கண்டக்டர் இழிவாய்க் கூற...

''மரியாதையா பேசுங்க, சார்!'' அவள் கோபமுற்றுக் கேட்க...

''உனக்கெல்லாம் மரியாதை ஒரு கேடா? மேல மினுக்கிட்டு வந்துட்டால் மயங்கிடுவோம்னு நினைப்பா? மரியாதை கொடுத்திடுவோம்னு நினைப்பா? கிரீமும், பெர்பியூமும் போட்டுக்கக் காசிருக்கு! லிப்ஸ்டிக் வாங்கப்



பணமிருக்கு! டிக்கெட் எடுக்கத்தான் பைசா இல்லையா? ஒழுங்கு மரியாதையா அடுத்த ஸ்டாப்பிங்லே இறங்கிடு!''

கண்டக்டர் அதட்ட... அந்தக் கீதா அவமானம் உணர்ந்து தலைகுனிய...

''சார்... லேடீஸ்கிட்ட எப்படி பிஹேவ் பண்றதுன்னு தெரியாதா? அந்த நாகரிகம் கூடத் தெரியாமல் எதுக்கு இந்த வேலைக்கு வரீங்க? மக்களுக்குத் தன்னை அர்ப்பணிக்கிற உன்னதமான பணி! மற்றப் பணியைவிடச் சிரமமான பணியும்கூட! இப்படி அநாகரிகமா பேசலாமா? மிஸ்! நீங்க எங்கே போகணும்?''

ரமணன் கேட்க... அவள் சொல்ல... கீதாவிற்கும் சேர்த்து டிக்கெட் எடுத்தான்.

கண்டக்டர் தன் தவறு உணர்ந்து 'ஸாரி' கேட்டார்.

ரமணனை நன்றியோடு நோக்கிக் கையெடுத்து வணங்கினாள். ''ரொம்ப நன்றிங்க!'' என்றாள்.

''நன்றியெல்லாம் எதுக்குங்க? மனுஷனுக்கு மனுஷன் சின்னதா உதவறதுல... நன்றியைச் சொல்லி அந்நியமாக்கிடாதீங்க! உங்க நன்றியை எதிர்பார்த்தோ... உங்க இளமையை எதிர்பார்த்தோ... நான் உங்களுக்கு உதவலே! என்னிடம் இருக்கற இயல்பான உதவும் குணம்... அம்மா ஊட்டிய நற்பண்புங்க! நன்றி சொல்லணும்னால் என் அம்மாவுக்குச் சொல்லுங்க!''

அவன் இறங்க வேண்டிய இடம் வர... கீதாவிடம் சொல்லிக் கொண்டு இறங்கி விட்டான்.

நான்கு நாட்கள் கழித்து...

மெரினாவில் 'அலைக் குழந்தை'யின் சுறுசுறுப்பு, துறுதுறுப்பை எண்ணி வியந்து கொண்டிருக்கையில்...

''ஹலோ... குட் ஈவினிங்!'' என்ற குரல் கேட்டுத் திரும்பினால்... பஸ்ஸில் கண்கள் கலங்க நன்றி சொன்ன கீதா... இளமஞ்சள் நிறச் சுடிதாரில் அழகான ஓவியமாய் நின்றிருந்தாள்!

நல்ல சந்தன நிறம்! குழந்தை முகம்! கொடியுடல்! நல்ல உயரம்! பாந்தமான அழகு என்று கீதா இருந்தாள்.

''மிஸ்டர்... உங்களைச் சந்தித்ததிலே ரொம்ப சந்தோசம்!'' என்று வரிசைப் பற்கள் காட்டிச் சிரிக்க...

''ஐ ஆம் ரமணன்! கால் மீ ரமணன்!'' என்று ரமணன் இன்முகம் காட்ட...

''ஐ ஆம் கீதா! பி.எஸ்ஸி தேர்ட் இயர் படிக்கிறேன்! நீங்க எங்க ஒர்க் பண்றீங்க?''

''மனோ இன்டஸ்ட்ரீஸ்! ஆமா, உங்க அப்பா, அம்மா என்ன செய்யறாங்க? வீடு எங்கே?''

''தாய், தகப்பன்னு யாருமில்லே! அநாதையில்லத்துல வளர்றேன்!'' கீதா முகம் சோர்ந்து சொல்ல...

''ஓ... ஸாரி... ஸாரிங்க, கீதா!'' ரமணன் உண்மையாகவே கீதாவிற்காக வருந்தினான்.

''எதுக்கு ஸாரியெல்லாம்? கடவுள் என்னை அநாதையா வாழணும்னு விரும்பியிருக்கிறான்! அதான்! என்ன செய்வது... தாயன்பு, தகப்பனுடைய பாசமெல்லாம் அமிர்தத்துக்குச் சமம்ன்னு என் தோழிங்க எல்லாம் சொல்லுவாங்க! நிஜமா, ரமணன் சார்? அடுத்த பிறவியிலாவது நான் தாய், தகப்பனோடு வாழணும்! அவர்களுடைய அபரிமிதமான அன்பை நான் அணு அணுவாகச் சுவைக்கணும். இறைவனிடம் இப்பிறவியில் வேண்டிக் கொள்வது இதைத்தான் ரமணன்!''



கீதா கண்கள் கலங்க... ரமணனின் மனம் நெகிழ்ந்து விட்டது! அவளை இழுத்து மடியில் போட்டுத் தட்டித் தாலாட்டி, 'நான் இருக்கிறேனடி, கண்ணே!' என்று அணைத்துக் கொள்ள மனம் பரபரத்தது!

கண்ணீர் சொட்டும் கண்களைத் துடைத்து... விழி மலரில் மென்மையாய் முத்தமிட ஆவல் வந்தது!

தாயன்பு, தந்தையன்பு இரண்டையும் ஒரு சட்டியில் போட்டுக் குழைத்து, அவளுக்குத் திகட்டத் திகட்ட ஊட்ட ஆசை வந்தது.

''நாங்களெல்லாம் வெறும் மனிதர்களுடைய குழந்தைகள்! ஆனால் உங்களைப் போல் உள்ளவர்களெல்லாம் இறைவனின் குழந்தைகள்! இறைவனின் குழந்தைகளான நீங்கள் எப்படி அநாதையென்று சொல்லலாம்? ம்?''

''ரமணன்... ரமணன்... நான் இறைவனுடைய குழந்தைன்னு தெரியாமல் இருந்திருக்கேன்! என்னை அநாதையாக்கியது இந்தச் சமுதாயம்ன்னு நினைத்து... இந்தச் சமுதாய மக்களிடம் நிறையக் கோபம் கொண்டு யாரோடவும் ஒட்டி உறவாடவில்லை! எல்லோரிடமும் வெறுப்பை உமிழ்ந்திருக்கேன்! நான் செய்தது எவ்வளவு முட்டாள்தனம்ன்னு இப்போ புரியுதுங்க ரமணன்!''

கீதா மனம் வருத்தத்துடன் கூற...

''ரொம்ப வருந்தறீங்களே, கீதா!''

''வருந்தாமல் என்ன செய்யட்டும், ரமணன்? நான் அப்படி ஒரு வாழ்க்கை வாழ்ந்திருக்கிறேனே! என் மீது அன்பு கொண்டு அணைக்க வந்தவர்களிடம் எல்லாம் அரக்கியா நடந்துட்டு இருக்கேனே!''

''இதுநாள்வரை தவறான நினைவுல வாழ்ந்து இருக்கீங்க!''

''அது என் தப்பா? அறிவுறுத்த உங்களைப் போல ஆசாமிங்களை இறைவன் அனுப்பாததுதானே, தப்பு?

கீதா புன்னகைக்க... ரமணன் அவளின் முகத்தை ஆழ்ந்து நோக்கிக் கூறினான்.

''குட்! நீங்க இதுபோல எப்போதும் சிரிச்சுட்டே இருக்கணும்!''

''முயற்சி செய்கிறேன்!''

''அப்படிச் சொல்லக் கூடாதுங்க, கீதா! உங்களால் கண்டிப்பா முடியும்!''

''ரமணன்... நிஜமாகவே எனக்கு நிறையத் தெம்பு வந்தாப்போல இருக்கு! ரொம்பவே நன்றிங்க, ரமணன்!''

கீதா மலர்ந்த முகத்தோடு சொன்னவள் ''ஓ... உங்களுக்கு நன்றி சொன்னால் பிடிக்காதில்லையா? என் நன்றியை வாபஸ் வாங்கிக்கிறேன்! நான் வரேன்!''

- என்று கீதா எழுந்து விடை பெற்றுச் சென்ற திசையையே விழிகள் தெறிக்க நோக்கிக் கொண்டிருந்தான், ரமணன்.

இரவு மொட்டை மாடியில் தூக்கம் வராமல்... கீதாவின் நினைவுகளோடே நடமாடினான், கால்கள் வலிக்கும் வரை!

கட்டிலில் மல்லார்ந்து படுத்து நிலவை வெறிக்க... நிலவு கொஞ்ச நேரத்தில் கீதாவாய் உருமாறி... அவனைக் குளிர்விக்க வந்தது!

கீதா அவன் இதயத்தில் காதல் அம்பைத் தொடுத்து... அவனை அடியோடு வீழ்த்தி விட்டாள்!



# 13

ரமணன் எதை மறக்கிறானோ இல்லையோ... தினம் தினம் 'மெரீனா பீச்' செல்ல மறப்பதில்லை!

ரமணன் சுவாசிக்கிறானோ இல்லையோ... ஆனால், கீதாவின் நினைவுகளைச் சுமக்காமல் ஒரு நொடி கூட இருக்க மாட்டான்!

கீதா அவனை நிலை குலைய வைத்து விட்டாள்!

அம்மாவும், அப்பாவும், தங்கையும் ஆக்கிரமித்த இதயத்தைக் கீதா ஆக்கிரமித்து அரசாட்சி செய்தாள்!

தினம் தினம் மாலையில் அவளின் வரவிற்காய்த் தவமிருந்தான்!

ஆனால், கீதாதான் மனமிரங்கி வரம் தரவில்லை!

ரமணனைத் தவிக்கவிட்டு.அணுஅணுவாய்ச் சித்ரவதையை அனுபவிக்க வைத்து... பத்து நாட்களுக்குப் பிறகு அவன் முன் வந்து தோன்ற...

ரமணன் கண்ணெடுக்காமல் பார்வையால் அவளை ஸ்பரிசித்துக் கொண்டிருந்தான்!

''ஹலோ ரமணன்... என்ன நலமா?'' அவன் முகத்திற்கு எதிரே சொடுக்குப் போட... சுதாரித்து...

''நீங்க நலமா?'' என்று கேட்டான்.

''ரொம்ப நலம்! உங்களைச் சந்திச்சுட்டுப் போனதிலிருந்து உடலளவிலும், மனதளவிலும் ரொம்ப ஆரோக்கியமா இருக்கேன்! மக்களை நான் ரொம்பவே நேசிக்

கிறேன்! என் தோழிகளின் நட்பு எவ்வளவு உயர்ந்த துன்னு உணர்கிறேன்!...

ஒரு புது உலகையே கண்டாற்போல இருக்கு! இந்த அழகான உலகைக் காண அறிவுறுத்தியவர், நீங்கள்! வாழ்க்கை ஒரு அற்புதம்ன்னு அறிய வைத்தவர், நீங்கள் ரமணன்! உங்களை மீண்டும் சந்தித்ததிலே எனக்கு மிகுந்த மகிழ்ச்சி, ரமணன்!''

''நீங்க ரொம்ப ஓவரா புகழறீங்க, கீதா! இந்த புகழ்ச் சிக்கு நான் தகுதியானவன்தானா?''

''என்ன சந்தேகம்? கட்டாயமாங்க, ரமணன்!''

''படிப்பு முடிந்து என்ன செய்யப் போறீங்க? மேலே படிக்கப் போறீங்களா?''

''இல்லத்தின் விதி இளங் கலை வரைதான் படிக்க வைப்பார்கள்! அப்புறம் ஒரு வேலை தேடிட்டு மேற் கொண்டு தபாலில் படிக்க வேண்டும்!''

''அப்படியே ஐ.ஏ.எஸ் தேர்வுக்கும் ரெடியாகலா மில்லையா?''

''உங்களுக்கு என்மேல் நிறைய அக்கறையில்லையா?''

''இருக்கக் கூடாதா?'' அவன் மென்னகையோடு கேட்க...

''நான் ஒரு அநாதை என்பதாலா?'' கீதா முகம் வாடிக் கேட்க...

ரமணனிடத்தில் சட்டென்று சினம் மூண்டது!

''ஓ... நோ... என்ன பேசறீங்க, கீதா? அநாதைங்கிற எண்ணம் உங்க உள்ளத்துல சுத்தமா இருக்கக் கூடா துன்னு சொன்னேனில்லையா? மிச்ச மீதி எண்ணம் இது போல இருந்தால்... இந்த நிமிடமே துடைச்சி எறிங்க!''



''செய்துடலாம், ரமணன்! சரி... என் மேல் அக்கறை யும், பிடிப்பும் ஏற்பட என்ன காரணம்?''

இதற்கு மேல் அவள் மேலுள்ள நேசத்தை மூடி மறைப்பது சரியல்ல என்றுணர்ந்தவன்...

''நான் உங்களை உயிருக்குயிரா நேசிக்கிறேன், கீதா! இப்போ என்னுடைய சுவாசமே... உங்க மேலான காதல்தான், கீதா! உங்களைப் பார்த்த நொடியிலிருந்து அமைதியா இருந்த இதயத்திற்குள் நேசச் சலனம் புகுந்துடிச்சி, கீதா! உங்களைக் கண்ட நாள் முதலே காதல் ஆழமா என் உயிர் வரை ஊடுருவி விட்டது, கீதா!...

''இப்போ என் உயிர், சுவாசம், நினைவுகள் அத்தனை யும் என்னிடம் இல்லை! அது உங்ககிட்ட பத்திரமா இருக்காங்க, கீதா? நான் முதன் முதலாய் மயங்கிய தேவதை நீங்கதான்! என் காலம் முழுக்க என்னோடு கைகோத்து வரவேண்டும் கீதா! ஐ லவ் யூ, கீதா! ஐ லைக் யூங்க, கீதா!''

ரமணன் கண்களில் நிஜமான நேசம் மினுமினுத்தது!

''நான் யோசிக்கணும்!'' கீதா மெல்லக் கூற...

''யோசிங்க! ஆனால் நோ மட்டும் சொல்லிடாதீங்க, கீதா! ப்ளீஸ்...''

ரமணன் தான் ஒரு கம்பீரமான, ஆண்மையுள்ள, அழகான ஆண்மகன் என்பதை மறந்து கீதாவிடம் காதலை யாசித்தான்!

ரமணனைக் காதல் தீயிலிட்டுப் பொசுக்கிய கீதாவோ... சாவகாசமாய்ப் பத்து நாட்கள் கழித்து வந்து...

''இந்த அளவு எனக்காகத் தவிக்கிற... ஒரு அழகான ஆண்மகனைத் தவிக்க விடக் கூடாதுன்னு இரக்கப் பட்டுதான்... உங்களை நேசிக்கலாம்ன்னு முடிவெடுத் திருக்கேன்!''

''என் தவிப்பிற்காக இரங்கித்தான்... என்னை நேசிக் கப் போறீங்களா? அப்போ உங்களுக்கு என்னைப் பிடிக்க வில்லை! என் காதலைப் பிடிக்கவில்லை! அப்படித் தானே, கீதா?''

''ஐயோ... எங்களைக் கொஞ்சம் உயர்த்திக் காட்டிக்க விட மாட்டீங்களே! கொஞ்சம் பிகு பண்ண அநுமதிக்க மாட்டீங்களே! இந்த ஆண்கள் எல்லோரும் ஏன்தான் இப்படி இருக்கீங்களோ?''

கீதா இதழ்களில் பூத்த அழகான புன்னகையுடன் கேட்க...

''அப்போ உங்களுக்கும் என்மேல் நிஜ லவ்தானே?''

''ம்...'' என்று உதடு சுழித்து, அருமையான புன்னகை யொன்றைக் கீதா சிந்த...

''இந்த உலகையே வென்றுவிட்ட மகிழ்ச்சி, என் மனதில்! ரியலி நான் ரொம்ப சந்தோசமா இருக்கேன்! அம்மா, அப்பாவுக்குச் சொல்லிடவா?''

''ம்! என்னன்னு சொல்வீங்க?''

''உங்களுக்குச் சிரமம் வைக்காமல் நல்ல மருமகளைத் தேர்ந்தெடுத்து விட்டேன் என்று!

''உங்க விருப்பம், ரமணன்!''

''கீதா... நாளைக்குக் கடற்கரைக்கு வருவே இல் லையா?''

''வர்லேன்னால்?''



கீதா வில்லாய் வளைந்த புருவம் உயர்த்திக் கேட்க...

''உன் இருப்பிடம் தேடிவந்து... கொத்தாய் முடியைப் பிடித்துத் தரதரன்னு இழுத்துட்டு வந்து... என் மடியில போட்டு 'என் கண்ணே... என் மணியே... என் செல் லமே... என் தங்கமே'' என்று கொஞ்சுவேன்!''

''அது உங்களுக்கு ரசிக்கும்! எனக்கு ரசிக்குமா?''

''ஐயாவோட மன்மதக் கலையில் மயங்கிடுவே, தெரி யுமா?''

''என் கண்ணன் சரியான குறும்பு!'' அவன் கன் னத்தைச் செல்லமாய் நிமிண்ட...

''ஆஹா... என் ராதை கட்டிக் கரும்பு!'' அவனும் அவளைப் போலச் செய்ய...

''உங்களுக்கு எதுகை, மோனை நல்ல பரிச்சயமா?''

''ம்... தமிழ் இலக்கணம், இலக்கியம் மீது ரொம்ப மோகம்! அதன் விளைவுதான் இதெல்லாம்!

''அப்போ உங்களோடான வாழ்க்கை எனக்கு போரடிக் காதில்லையா?''

''கட்டாயமா கண்ணே!''

''ரமணன்...''

''ம்...''

''ஐ லவ் யூ ரமணன்!''

கீதா கண்களில் கிலோ கிலோவாய்ப் போதையேற்றிக் கூற... ரமணனோ ஐஸ்கிரீமாய் உருகினான்!

இந்த உருகலுக்கெல்லாம் வட்டியும் முதலுமாய்ச் சேர்த்து உருக்குலையப் போகிறோம் என்று தெரியாமல்!

# 14

ரமணன் தன்னை வசதியற்றவன் என்று கூறியிருக்கிறான்!

அநாதை யில்லத்தில் வளர்ந்தவளைச் செல்வந்தர்களான நாராயணன் - சாந்தா தம்பதி தன்னை மருமகளாய் ஏற்றுக்கொள்வார்களோ... மாட்டார்களோ என்று ஐயம் ஏற்படக் கூடாது என்பதற்காகவே அவ்வாறு கூறியிருக்கிறான்!

பார்க், பீச், ஹோட்டல், ஷாப்பிங் என்று அவனோடு கைகோத்துத் திரிவாள், கீதா.

ரமணனுக்குப் பணம் பற்றாமல் போக... சாந்தாவிடம் கேட்க... அவரும் சந்தோசமாக மகனுக்குப் பணம் அனுப்பினார்.

தனக்குச் சிரமம் வைக்காமல் நல்ல மருமகளைத் தேடி வைத்திருப்பதாய் ரமணன் கூற அகமகிழ்ந்து போனார், சாந்தா.

''ரமணன்... நீங்க வேற ஏதாவது வேலை தேடுங்க! நீங்க சம்பாதிக்கற பணம் நாளைக்கு என்னைத் திருமணம் செய்து குழந்தை, குடும்பம்னு ஆனால் பத்தாது, தெரியுமா?''

ரமணன் அவளின் பேச்சுக் கேட்டுக் கேலியாய்ப் புன்னகை புரிவான்.

''ரமணன்! ஊர்ல சொத்துன்னு ஏதாவது இருக்கா?''



''ம்! வயதான தாய், தகப்பன்! கூரை வீடு!''

''விவசாய நிலமிருக்கா?''

''ம்... பாரதியார் வர்ணித்தது போலக் காணி நிலம், சுற்றிலும் கரும்புத் தோட்டம்ன்னு கொஞ்சமா நிலமிருக்கு, கீதா!'' பொய் சொன்னான்.

''அதெல்லாம் போதாது, ரமணன்! நிறையச் சேர்க்கணும். இந்தச் சென்னையில நல்ல ப்ளாட், லேண்ட்ன்னு வாங்கிப் போடணும்!''

''ம்... அப்புறம்?'' புருவம் உயர்த்திக் கேட்க...

''ஸ்கார்பியோ கார் வாங்கணும்! விளம்பரத்துல அந்த காரைக் காட்டுவான் பாருங்க... என்ன அழகு! அதை ஓட்டிட்டு வர ஹீரோ பாலைவனத்துல சுற்றி, சுழற்றி, வளைத்துன்னு கொண்டுட்டு வந்து நிறுத்துவான் பாருங்க... என்ன அருமை! அதைக் கண்டதுல இருந்து, வாங்கினால் ஸ்கார்பியோ கார்தான் வாங்க வேண்டும் என்று முடிவு செய்து வச்சிருக்கேன்!'' ரசித்து, ருசித்துக் கீதா கனவுகளோடு சொல்ல...

''நம்ம வசதிக்கு அதெல்லாம் முடியாதும்மா, கீதா!''

''ஏன் முடியாது? வேற நல்ல கம்பெனிக்கு ட்ரை பண்ணுங்க! அல்லது பாரின் போய் நிறையச் சம்பாதிக்க ஏற்பாடு பண்ணுங்க! அப்படியே ஓவர் டைம், பார்ட் டைம்ன்னு வொர்க் பண்ணிப் பணம் கொண்டுவாங்க! நானும் ஏதாவது வேலைக்குப் போய்ச் சம்பாதிச்சிட்டு வரேன்!''

கீதா பேராசையோடு கூற...

''ஐயோ... பெண்டாட்டியை வேலைக்கு அனுப்புவதா? அதில் வரும் காசை அனுபவிப்பதா? எனக்குப் பிடிக்காத ஒரே செயல் இது, கீதா!''

''என்ன தப்பு? ரெண்டு பேரும் சம்பாதிச்சாத்தான் ஆடம்பரமா வாழ முடியும்!'' என்று கோபமாய்க் கூற...

''அப்போ வீடு, குழந்தை, என் தாய், தந்தையை யார் கவனித்துக் கொள்வது?''

''அப்போ பெண்கள்ன்னா உங்களுக்கு இளப்பமா? வீட்டையும், அடுப்படியையும், உங்க வயதான பெற் றோரையும் பார்த்துட்டு இருக்க... கௌரவமா தாலிங்கிற பேர்ல ஒரு கயிற்றை எங்க கழுத்துல கட்டி, கூட்டிட்டுப் போற வேலைக்காரிங்க தானா, எங்க பெண்ணினம்?''

கீதா கடுப்புடன் சீற...

''சங்க காலத்திலெல்லாம் தலைவன் பொருள்தேடச் செல்லுவான்! தலைவி வீட்டையும், குழந்தைகளையும் கவனித்துக் கொண்டு... தலைவனின் வரவிற்காய் வழிமேல் விழி வைத்து ஆவலோடு காத்திருப்பார்கள்! நீ சங்க இலக்கியம் அறிந்ததில்லையா, கீது?'' ரம்ணன் கூலாகச் சொல்ல...

''படிச்சிருக்கேன், ரமணன்! அதெல்லாம் சங்க காலத் துக்குத் தான் பொருந்தும்! தற்காலத்திற்குப் பொருந்தவே பொருந்தாது!''

''உன்னிடம் பேசி மிச்சமெடுக்க முடியுமா, கீது? என்னை மணந்த பின் நம் வீட்டு நிதி நிலையைப் பொறுத்து வேலைக்குப் போகலாம், சரியா?''

ரமணன் கேலியாய்ச் சிரிக்க...

''அதுயென்ன உங்க முகத்துல கேலியாய் ஒரு புன் னகை தோன்றி அடிக்கடி மறையுது?''

''என்ன கீதா... நான் சிரிக்கக் கூடக் கூடாதா?'' என்று ரமணன் கேட்பான்.



''ரமணன்... யமஹா கிளாடியேட்டர் பைக் வாங்குங்க''

''எதுக்கு?''

''பஸ்ல போய்க்... கடற்கரையில உட்கார்ந்து எதிரும் புதிருமா ஒருவரை ஒருவர் பார்த்துப் பேசி போரடிக்குது! வண்டியில உங்க பின்னாடி உட்கார்ந்து ஊரைச் சுத்தணும்னு ஆசையா இருக்கு!

''மெல்ல வாங்கலாமே, கீதா!'' அவன் சொன்னால் மாலைச் சூரியகாந்தியாய் வாடி விடுவாள்.

சின்னச் சின்னக் குறும்புகளுடன், சீண்டலுடன் சென்ற அவர்களின் காதலில் சமீபமாய் மெல்ல மெல்ல இடைவெளி விழுந்தது.

கீதா ரமணனைச் சந்திப்பதைத் தவிர்த்தாள்.

கடற்கரைக்கு வருகிறேன் என்று கூறிவிட்டு ஏமாற்றி னாள்.

ஒருநாள் கல்லூரி வாசலிலேயே கீதாவை மடக்கி... அருகிலிருந்த பூங்காவிற்கு அழைத்துச் சென்றான். மறுக்க முடியாமல் மனமின்றி வந்தமர்ந்தாள், கீதா.

''கீதா... நீ ஏன் சமீபமாய் என்னைப் பார்ப்பதைத் தவிர்க்கிறாய்?''

''பரிட்சை வருதில்லே! நான் படிக்க வேண்டாமா?''

''இது உண்மையான காரணமில்லே! சொல்லு கீதா?''

''எனக்கு இந்தக் காதல், கத்தரிக்காய் எல்லாம் சமீபமாய்ப் பிடிக்கலே!''

ரமணன் கீதாவின் இந்த வார்த்தையால் செத்தே விட்டான்.

''சொற்பமான, மாதச் சம்பளக்காரரான உங்களை மணந் துட்டு என்ன சுகத்தை அநுபவிக்கப் போறேன். எனக்கு

உங்களையும், இந்த பாழாய்ப் போன காதலையும் பிடிக்கலே!''

''காதல்... பணம், பொருள், சொத்து, சுகம், அந்தஸ்து, ஜாதி, இனம் பார்த்து வருவதில்லே, கீதா!''

ரமணன் கோபத்தோடு வார்த்தைகளை நெருப்புத் துண்டாய் வீச...

''இதெல்லாம் பார்த்து ஒருத்தனைத் தேர்ந்தெடுக் கலேன்னால்... வருங்காலத்தில் நொண்டிமாடாய்த் தான் வாழ்க்கை வண்டியை இழுத்துட்டுப் போகணும்! ஆசைப்பட்டதை அநுபவிக்க முடியாத வாழ்க்கை... என்ன வாழ்க்கை! இதுவரை வறுமையில் வாழ்ந்தது போதும்! எனக்குத் தேவை நல்ல வேலையும், பணமும் உள்ள மாப்பிள்ளை!''

''பாசமான மனிதனை விட.... பணமுள்ள மனிதன் தான் உனக்கு உயர்ந்தவனா?

''ஆமா...!''

''இந்த உலகில் அன்பு ஒன்றுதான் நிலையானது... பணம் இல்லை என்பதை நீ கூடிய சீக்கிரமே புரிந்து கொள்ள வேண்டிய சந்தர்ப்பம், சூழ்நிலை வரலாம்!''

''எனக்குப் புரிய வேண்டிய அவசியமில்லை!''

''இதுநாள்வரை என்னைக் காதலித்தது எல்லாமே வெறும் நடிப்பா?''

''ஆமாம்!''

''ஏன்?''

''எனக்குத் தேவைகளும், ஆசைகளும் அதிகம்!''

''ஓ... காதல் விபச்சாரம்?''



கீதா முறைக்க...

''நான் தவறா ஏதும் சொல்லலையே! இது என்ன நூதனப் பிழைப்பு கீதா? இது உனக்கே அசிங்கமா தெரியலே?''

அவன் வார்த்தைகள் அவளிடம் கத்தியாய்ப் பாய...

''ரமணன்...'' கத்தினாள்.

''வேண்டாம், கீதா! இதுபோல ஒரு அல்பமான பிழைப்பு வேண்டாம்! ஆண்கள் எல்லோரும் ஏமாளிகளாய் இருக்க மாட்டார்கள்! உன்னிடம் ஏமாந்த ஆண்களில் நான் எத்தனையாவது ஆள் கீதா? எல்லோரும் என்னைப் போல இருக்க மாட்டார்கள்! சில கோபக்கார ஆண்கள் கத்தி எடுத்து ஒரே குத்தாய்க் குத்தி விடலாம்!

எனக்குக் கூட அப்படி ஒரு ஆத்திரம் வருது! ஆனால் என் அன்னை அவ்வளவு கொடூரனாய் வளர்க்கவில்லை!...

போயும் போயும் நான் உருகி உருகி... மறுகி மறுகிக் காதலித்தது ஒரு சாக்கடையை எனும் போது... என் உடம்பெல்லாம் சாக்கடையில் விழுந்து புரண்டாற் போல அருவருக்குதுடி!''

''ரமணன்! அளவோடு பேசுங்க! மரியாதையா பேசுங்க!'' கீதா சீற...

''உனக்கெல்லாம் மரியாதை ஒரு கேடா? பெருமைக் குரிய பெண் இனத்தில் பிறந்துட்டு ஏன் இப்படி ராட்சசி யாய் வாழறே? இனிமேலாவது திருந்து! நான் வரேன்!''

ரமணன் எழுந்து திரும்பிப் பாராமல் நடந்தான்.

''இது... இதுதாங்க என் மரணத்திற்குக் காரணம்! இது தாங்க நான் ஏமாந்த கதை! அவள் அநாதையில்லை! பெற்றவர்கள் இருக்காங்களாம்! பொய் சொல்லி

என்னிடம் பழகியதாய்ச் சொல்ல... நான் வாழ்க்கை யையே வெறுத்துட்டேன்!...

அதன் பிறகு அவளைப் பற்றி நான் எந்த ஆராய்ச்சியும் பண்ணலே! அம்மாவும், அப்பாவும் மருமகளை அழைச்சி வாடான்னு அடிக்கடி புலம்பினாங்க! நான் ஊருக்கு வரேன்னு சொல்ல... 'என் மருமகளோட தானே வரே?' என்று அம்மா அதிகப்படியான ஆசையோடு கேட்க, 'ம்...' என்று பதில் சொல்லி விட்டேன்!''

''ஏன் அப்படிச் சொன்னீங்க?'' புனிதா மெல்லக் கேட்க...

''அம்மாவுக்கு உடல் நிலை சரியில்லே! ஆஸ்துமா, ஹார்ட் வீக்குன்னு நோய் இருக்கு! போய்ப் பக்குவமா சொல்லிக்கலாம்ன்னு தைரியமா சொல்லிட்டேன்! இப்போ பயமா இருக்கு!''

''உங்க பெற்றவர்கள், பாவம்! ஏராளமான ஆசையைச் சுமந்துட்டு காத்து இருப்பாங்க!''

''ஆமாம்! கீதா மேல ரொம்ப அன்பும், ஆசையும் வச்சிருந்தாங்க! பெண் அநாதை என்று அம்மாவிடம் சொல்ல... அம்மா பெரிய சண்டைக்கே வந்துட்டாங்க! உன்னைக் காதலித்த பிறகு அவள் எப்படி அநாதையாக லாம்! என் மருமகளை எப்படி அநாதைன்னு சொல்ல லாம்ன்னு லெப்ட் அண்ட் ரைட் வாங்கிட்டாங்க! அப் படிப்பட்டவங்களைத் தனியே போய் ஏமாற்றப் போறேன்னு நினைக்கும் போதே என்னால் தாங்க முடியலைங்க!''

ரமணன் வருத்தத்துடன் சொல்லிவிட்டு அவளிடம் கேட்டான்.

''நீங்க எங்கே போறீங்க? வீட்டுல என்ன கோபம்?''

ரமணன் கேட்க... புனிதா பதில் சொல்லாமல் இருக்க...



ரமணனின் மனதில் வெளிச்சமாய் அந்த எண்ணம் உதித்தது. ரமணன் உல்லாசமாய் இதழ் விரித்துப் புன்னகைத்தான்.

அந்த எண்ணத்தால் வரப் போகும் துன்பத்தை அறியாமல்!

## 15

இரயில் சுருதியோடு கூடிய தாளலயத்தோடு பயணிகளைத் தாலாட்ட... எல்லோரும் நித்திரையில் ஆழ்ந்திருக்க... இரண்டு உள்ளங்கள் மட்டும் சோகத்தைச் சுமந்து கொண்டு... ஒருவரை ஒருவர் விழிகளால் ஸ்பரிசித்துக் கொண்டிருந்தன.

''புனிதா... நீங்க எங்க போறீங்க? அதையாவது என் னிடம் சொல்லக் கூடாதா?'' ரமணன் அக்கறையோடு கேட்க...

''எங்கே போறேன்னு எனக்கே தெரியலைங்க! நீங்க சொல்லுங்க... சேலம், ஏற்காடு நல்ல ஊர்களா? பெண் தனியே தங்கி, வேலைக்கு போய்ப் பயமில்லாமல் வாழ முடியுமா?''

''புனிதா... நீங்க எங்கே போவது, தங்குவது என்று தெரியாமல் தவிக்கறீங்க! நானோ என்னோட காதலியை அழைத்து வருகிறேன் என்று சொல்லிவிட்டுத் தனியே வருகிறேன்! அம்மாவிற்கும், அப்பாவிற்கும் என்ன பதில் சொல்வது என்று புரியாமல் முழிக்கிறேன்! புனிதா... நீங்க நினைத்தால் எனக்கு உதவ முடியும்!'' ரமணன் புதிரோடு பேச...

''எப்படி?'' கேட்டு விழித்தாள், புனிதா.

''என் காதலியாய் என்னுடன் வந்து... கொஞ்ச நாட்கள் என் பெற்றவர்கள் முன்பு நடமாட வேண்டும்!''

''ஐயோ... என்ன சொல்றீங்க?'' புனிதா அதிர்ச்சி யோடு கேட்க...

''நான் உங்களுக்குப் பாதுகாப்பையும், இருப்பிடத் தையும் கொடுத்து உதவுகிறேன்! அதற்கு ஈடாய்க் கொஞ் சமே கொஞ்ச நாட்கள் என் காதலியாய் நடிக்க வேண் டும்! நீங்க உதவினால்... இந்த உதவியை உயிருள்ள வரை மறக்க மாட்டேன்!...

''உங்க கோபம் தீர்ந்து வீடு திரும்பும்வரை நானும் உங்களுக்குப் பாதுகாப்பைத் தருவேன்! இது பொல்லாத உலகம்! பெண்ணொருத்தி தனியே யாருமற்று வாழ்வது கடினம்! என்ன சொல்றீங்க, புனிதா?''

அவள் மௌனமாய் இருக்க...

''ப்ளீஸ் புனிதா... உதவுங்க! அம்மா உடல்நிலை சரியில்லாதவர்! அதிகப்படியான துக்கம் ஆகாது! நான் வேறு பொய் சொல்லி அவர்களின் மனதில் ஆசையை மூட்டிட்டேன்!'' என்று கெஞ்ச...

''ரமணன்... உங்கள் தாய் ஒரு நோயாளி என்பதால் என்னால் மறுக்க முடியவில்லை! அதனால் அங்கே வந்து கொஞ்ச நாட்கள்தான் இருப்பேன்! சரியா?''

''போதும்! போதுங்க... நான் அம்மாவிடம் உண் மையை உணர வைக்கிறேன்! அல்லது ஏதாவது சிறு சண்டையை ஏற்படுத்திப் பிரிவது போலப் பிரியலாம்! முதல்ல அங்கே போகலாம்! பிறகு இதைப் பற்றியெல் லாம் அங்கிருக்கும் சூழ்நிலையைப் பொறுத்துப் பார்த்துக்



கொள்ளலாம்! நானே உங்களை உங்க வீட்டினரிடம் சேர்க்கிறேன்!''

''நான் எப்போ வீடு திரும்பறதா சொன்னேன்?'' உங்க வீட்டுல நடிச்சி முடிந்ததும்... பிறகு வேலை தேடி வாழ வேண்டும்!''

''ஏன் இப்படியெல்லாம் பேசறீங்க, புனிதா? உங்க வீட்டினரிடம் கோபமா? அல்லது ஏதாவது லவ் பெயி லியா? அல்லது ஏதாவது நோயா?'' பொறுப்போடு கேட்கவும்... சொல்லி விடலாமா என்று நினைத்தாள். ஆனால் இன்னொரு மனம் உள்ளிருந்து தடுத்து வேலி போட்டது.

'என் துக்கம் என்னோடே போகட்டும்! இந்த உலகில் எத்தனை பேர் எய்ட்ஸ் நோயாளிகளைக் கண்டால் முகம் சுழிக்காமல் பேசுகிறார்கள்! பக்கத்தில் வந்து அமர்கிறார்கள்! 'எய்ட்ஸ் ஒரு தொற்றுநோய் அல்ல' என்று அரசாங்கம் கரடியாய்க் கத்தினாலும்... இன்னும் பெரும் பாலானோர் தீண்டத்தகாதவர்களாய்த் தானே பார்க்கிறார் கள்! ரமணன் இதில் எதில் சேர்த்தி! வேண்டாம்!'

'ஒரு நல்ல சந்தர்ப்பம் இது! இறப்பதற்கு முன் நாலு பேருக்கு நல்லது செய்துவிட்டுப் போகவேண்டும் என்ற என் உறுதியான கொள்கைக்கு முதல் வேலை இது! மனப்பூர்வமாகவே செய்யலாம்!'

'காதலியாய் நடிப்பது அவ்வளவு கடினமான வேலை யில்லையே! நானும் இந்த துக்கத்தில்... நீண்ட நாட்கள் உயிர் வாழ மாட்டேன்! கூடிய சீக்கிரமே எமன் என்னை நெருங்கி விடுவான்!'

'உயிருள்ளவரை அங்கே ரமணனின் காதலியாய் நடித்தால்... நாளைக்கு, என் உயிர் பிரிந்த பின்பு...

என்னை அநாதைப் பிணமாய்க் கிடக்க விட மாட்டான்! கைம்மாறாய்த் தூக்கிப் போய் இடுகாட்டில் வைத்து என் சிதைக்குத் தீ மூட்டுவான்!'

''புனிதா... நீங்க ரொம்ப களைத்துப் போய் இருக் கீங்க... படுத்து உறங்குங்களேன்! ப்ளீஸ்...''

ரமணன் அவள் நினைவுகளுக்குத் தடை போட்டான்.

''சின்னப் பெட்டியா இருக்கே? உடை ஏதும் எடுத் துட்டு வரலையா?''

''ம்கூம்!'' தலையாட்டினாள். அதில் அவள் ஒரு எய்ட்ஸ் நோயாளி என்று டாக்டர் கொடுத்த சர்டிபிகேட் பொக்கிஷமாய் உள்ளது.

''புனிதா... சேலத்தில் இறங்கியதும்... உங்களுக்குத் தேவையான உடைகள் கொஞ்சம் வாங்கணும்! சரியா?''

பணக்காரனின் காதலியாய் நடிக்க நாகரிகமாய் உடுத்த வேண்டும்! அது என்னால் முடியாதே!

''ரமணன்... நீங்க அந்தப் பெண்ணிடம் பொய் சொல் லாமல் நான் ஒரு பணக்காரன் என்று கூறியே பழகி யிருக்கலாமே!''

''அநாதை யில்லத்தில் வளர்ந்தவள்! நான் பெரிய பணக்காரன் என்றால் மிரண்டு விடுவாள் என்றுதான். அப்படிக் கூறியது கூட எவ்வளவு நல்லதுன்னு பாருங்க... உண்மைக் காதல் எது? பொய்க் காதல் எதுன்னு அறிஞ் சிட்டேன், இல்லையா? எனக்கொரு நல்ல படிப்பினையைக் கொடுத்திருக்கில்லையா? தரங்கெட்ட பெண்ணின் நிறம் காணக் கற்றுக் கொடுத்திருக்கில்லையா?''

ரமணன் சொல்வதில் நூற்றுக்கு நூறு உண்மை இருப்பது கண்டு மௌனமாய் இருந்தாள்.



ரமணனின் செல்போன் ஒலிக்க... அழைத்தது அவ னுடைய தாய் சாந்தா.

''ரமணா... என்னப்பா விடியற்காலையில் வந்துடு வியா?''

''என்ன அவசரம்மா? சேலத்தில் இறங்கி... இவளுக்குக் கொஞ்சம் உடைகள் எடுத்துட்டு வரேனே!''

''அதெல்லாம் வேண்டாம்! அவளுக்குப் பட்டும், தங்கமும், வைரமுமா வாங்கிக் குவிச்சிருக்கேன்! சேலம் ஸ்டேஷன்ல இறங்கியதும்... நம்ம கார்ல ஏறி ஆறு, ஏழுக்கெல்லாம் வந்து சேரணும், கட்டாயமாய்!''

ரமணன் பதில் சொல்லும் முன் போன் ஆப் ஆனது.

புனிதா முகம் கழுவி, சுருங்கிய சேலையை நீவி விட்டு ரெடியாகி விட்டாள்.

சேலம் வந்தவுடன்... கார் டிரைவர் வந்து அழைத்துப் போனான். கார் சீரான வேகத்தில் சென்றது.

''என்ன சுரேஷ்... நல்லாயிருக்கியா? அம்மா ஆரத்தித் தட்டோட காத்திருக்காங்களா?''

''நீங்களே வந்து பாருங்க சின்னய்யா!'' ரமணனின் கேள்விக்குப் பதில் சொன்ன சுரேஷ்... அர்த்த புஷ்டி யுடன் சிரித்தான்.

ஊர் எல்லையைத் தொட... தெருவெங்கும் தோரண மும்... பச்சைப் பந்தலுமாய் இருக்க...

''நம்ம ஊர்ல என்ன விசேஷம்? இத்தனை அமர்க் களம் படுது! ரமணன் கேட்க...

''கல்யாணம், சின்னய்யா!''

''யாருக்கு?''

''வந்து பாருங்களேன்! நீங்களே தெரிஞ்சிகுவீங்க!'' என்று சுரேஷ் ரகசியப் புன்னகை புரிய...

பங்களாவின் முன் கார் நிற்க... இறங்கிய ரமணன் மிரண்டு போனான்.

அவன் பங்களாவின் முன்பு ஆரம்பித்த பச்சைப் பந்தல்தான் ஊர்க் கோடியில் முடிந்திருந்தது.

ஊர் மக்கள் அனைவரும் அங்கே திரண்டிருந்தனர்.

சொந்தம், பந்தம் வந்து இவனைச் சுற்றிக் கொண்டது.

சத்தம் கேட்டு விழித்த புவனா... கார் கதவைத் திறந்து வெளியே வர... அங்கே இருந்த அலங்காரம், பந்தல் எல்லாம் சேர்ந்து அவளுக்குள்ளே பெரிய பிரளயத் தையே உண்டு பண்ணியது.

சாந்தா தாம்பூலத் தட்டோடு வந்து... ஆரத்தி எடுத்து... புனிதாவை உச்சியில் முத்தமிட்டுக் கையணைப்பில் அழைத்துச் சென்றாள்.

ரமணனை அப்பா அணைத்து அழைத்துச் சென்றார்.

புனிதாவும், ரமணனும் அதிர்ச்சியோடு உள்ளே போக... சொந்தம், பந்தம் வெளியே நிற்க... அந்தப் பெரிய அறைக்குள் அழைத்துச் சென்று அமர வைத்தனர்.

புனிதா வெடவெடத்துக் கொண்டிருந்தாள்.

''ரமணா... நீ வருவதாய்ச் சொன்ன கொஞ்ச நாளில் பத்திரிகை அடிச்சி... ஊரெல்லாம் விநியோகித்து... பந்தல் அலங்காரம்... மேளம்... சமையலுக்கு ஆள்ன்னு கஷ்டப்பட்டு ஏற்பாடு செய்திருக்கோம்! எல்லாம் உன் சந்தோஷத்திற்குதான்!'' நாராயணன் சொல்ல...

''என்னப்பா இதெல்லாம்? இங்கே என்ன விசேஷம்?'' என்று கோபமாய்க் கேட்க...



''உனக்குத் திருமணம், ரமணா!''

''ஐயோ... என்ன சொல்றீங்க? யாரைக் கேட்டுட்டு ஏற்பாடு பண்ணினீங்க?'' என்று சீற...

''உனக்கு ஒரு அதிர்ச்சியான மகிழ்ச்சியைக் கொடுக் கத்தான்!''

புனிதா செய்தியின் வீரியம் அறிந்து குலுங்கினாள்.

''உங்களை யார் என்னைக் கேட்காமல் இப்படி யெல்லாம் செய்யச் சொன்னா?''

''நீங்க ரெண்டு பேரும் உயிருக்குயிரா காதலிக்கிறீங்க தானே?'' அப்பா கேட்க...

''ஆமாம்...''

''இவளுக்குன்னு யாருமே இல்லேன்னு சொன்னதெல் லாம் நிஜம்தானே?'' அம்மா கேட்க...

''ஆமாம்...''

''உங்க திருமணத்திற்கு ரெண்டு பக்கமும் எதிர்ப்பு இல்லைங்கிறது உண்மைதானே?''

''நீங்க சொல்றதெல்லாம் சரிதாம்மா. ஆனால்... ஆனால்... கீதாவோ, நானோ இதை எதிர்பார்க்கலே!''

புனிதா விம்மிக் கொண்டிருந்தாள்.

''எவ்வளவு சந்தோசமான விஷயம்டா இது, கீதாம்மா! சந்தோசப்படாமல் அழறியே, செல்லம்!''

சாந்தா, புனிதாவின் கண்களைத் துடைத்துவிட....

''இதுக்கு நான் ஒத்துக்க மாட்டேன்!'' ரமணன் கூற...

''ஒத்துத்தான் ஆகணும்! சொந்தம், சுற்றம்ன்னு ஊரைக் கூட்டியாச்சி! உங்கிட்ட கேட்டால் ஒத்துக்க மாட்டே! என்ன அவசரம்... மெல்லத் திருமணம் செய்துகிறேன்னு

சொல்லுவே! உனக்கும் வயசாகுது! என் மருமகளையும் ரொம்ப நாள் காக்க வைக்கக் கூடாது! எங்களுக்கும் பேரப் பிள்ளையைச் சீக்கிரமே பார்க்கணும்! அதுக்குத்தான் இப்படி உனக்குத் தெரியாமல் ஏற்பாடு செய்தோம்! உன்னை இப்படி ஒரு இக்கட்டில் நிறுத்தினால் மறுக்க முடியாதில்லையா?''

''உங்க இஷ்டத்துக்குக் கட்டுப்பட முடியாது! கல்யாணம் இல்லேன்னு போய்ச் சொல்லி... எல்லோரையும் வீட்டுக்கு அனுப்புங்க!''

''மகனே... மகனே... ரமணா...'' சாந்தா அழ ஆரம்பிக்க...

''அம்மா ஒரு ஹார்ட் பேஷண்ட்! ஏன்டா இப்படி விளையாடறே? சாந்தா! உன் மகன் சும்மா விளையாட றான்! நீ ஏதாவது விபரீதத்தை இழுத்து விட்டுகிட்டு... கல்யாணத்தை நிறுத்திடாதே!'' நாராயணன் கூற...

''ரமணா... அப்பா சொல்றாப் போல விளையாடறி யாடா?''

அம்மா கண்களைத் துடைத்து, மகிழ்ச்சியாய்க் கேட்க...

''ஆமாம், சாந்தா! நீ வாம்மா! ரெண்டு பேரும் பேசித் தெளிந்து... மணவறைக்கு வரட்டும்!''

இருவரும் வெளியேற... புனிதா அடக்க முடியாமல் வீறிட்டழ...

''புனிதா... புனிதாம்மா... நான் இதை எதிர்பார்க்க லேம்மா!'' என்று ரமணனும் தழுதழுக்க...

''காதலியா நடின்னு கூட்டிட்டு வந்தீங்க! உங்க மேலும், உங்க அம்மா மேலும் இரக்கப்பட்டுச் சம்மதிச்சி வந்து இருக்கேன்! இப்போ கல்யாணம், கணவன்னு



சொன்னால் எப்படி ரமணன்?'' என்று கோபமாய்ப் புனிதா கேட்க...

''புனிதா... ப்ளீஸ் என்னை மன்னித்துக் கொள்! இதை நானே எதிர்பார்க்கலே! அம்மாவால் நம்ம மறுப்பைத் தாங்க முடியாது!''

''அதுக்கு நான் என்ன செய்ய?'' வேகமாய் ஆவேசத் துடன் கேட்க...

''மீண்டும் நீதாம்மா உதவணும்! இப்போ ரெண்டு பேரும் சம்மதிச்சித் திருமணம் செய்துக்கலாம்!''

''என்ன விளையாடறீங்களா?'' சீற...

''அம்மா, அப்பா, ஊராருக்காக மனைவியா கொஞ்ச காலம் இரு! காதலியா நடிக்க வந்தவள்... என் மாங்கல் யத்தைப் பெற்றுக் கொண்டு மனைவியா நடிக்கப் போறே! ரெண்டுக்கும் அதிக வித்தியாசம் இல்லேம்மா! ப்ளீஸ் ஒத்துக்கோம்மா! மறுத்துடாதே, புனிதாம்மா!''

ரமணன் புனிதாவின் முன்பு மண்டியிட்டுக் கெஞ்ச... அதற்கு மேல் அவனைக் கெஞ்சவிடப் பிடிக்காமல் சம்மதமாய்த் தலையசைத்தாள்!

இதனால் நாளைக்கு நிகழப் போகும் விதியின் விளை யாட்டை உணராமல்... அறியாமல்...!

## 16

சென்னை நகரம் விடியலைப் பரபரப்போடு இரு கை நீட்டி ஆசையாய் வரவேற்றது!

கொஞ்ச நேரத்தில் கிழக்கே ஆதவன் குளித்து, பொன் னிற ஆடை உடுத்தி... முதலிரவுக்குச் செல்லும் புதுமாப்

பிள்ளையின் துள்ளலோடு... துடிப்போடு... உற்சாகத் தோடு... பூமிப் பெண்ணை அணைத்து, உச்சிமோர்ந்து, முத்தமிடக் கிளம்பிவிட்டான்!

சுமதி எழுந்து புனிதாவின் அறைக்குச் சென்றாள். அங்கு அவள் இல்லாமல் போக வீடு, தோட்டம் என்று தேடிவிட்டு... பதறிக் கணவரை எழுப்ப... அவரும் எழுந்து வந்து புனிதாவின் அறையை அலச... அலமாரி யில் இருந்த லெட்டர் கண்ணில்பட... பிரித்துப் படித்தவர் அதிர்ந்தார்.

சுமதியும் செய்தி அறிந்து மார்பில் அடித்துக் கொண்டு அழுதாள்.

''ஐயோ... ஐயோ... என்ன கொடுமைங்க, இது! நம்ம புனிதா செய்த காரியமா இது? நம்ப முடியலையே! நம்பாமலும் இருக்க முடியலையே!''

''நாம மோசம் போயிட்டமே! அமைதியா, நல்ல பிள்ளைபோல நடிச்சி கழுத்தை அறுத்திட்டாளே! இந்தப் பெருத்த அவமானத்தை எப்படித் தாங்குவேன், சுமதி?'' தனசேகரும் கதற...

சத்தம் கேட்டு அஞ்சலி எழுந்து வந்தாள். புனிதா செய்த காரியம் உணர்ந்தாள். புனிதா இந்த அளவு செய் வாள் என்று அஞ்சலியும் உணரவில்லை!

''சுமதி... கத்தாதேடி! நம்ம வீட்டு மானத்தை நீயே வாங் காதே! சத்தம் கேட்டு அக்கம் பக்கம் கூடிடப் போகுது!'' தனசேகர் சுமதியை அதட்ட... சுமதி அழுகையைக் கட்டுப்படுத்தினாள்.

''ஐயோ...பாவி! இப்படிச் செய்ததற்குப் பதிலாய்த் துளி விஷத்தைச் சாப்பாட்டுல வச்சி நம்மைக் கொன்று இருக்கலாமே!''



''புனிதா இதுவரை எந்த ஆணையும் ஏறெடுத்தும் பார்க்கவில்லை! பேசவில்லை! இதில் எங்கே ஒரு வனைக் கண்டாள்? அவன் மேல் காதல் கொண்டாள்?''

''கைவினைப் பொருட்கள் செய்ய... தேவையான சாமான் கள் வாங்க அடிக்கடி கடைக்குக் கிளம்பி இருக்கா! இதுல இலவச சேவைன்னு ஆஸ்பத்திரி, இலவச மருத்துவ முகாம்னு கிளம்பிவிடுவா. அப்போ எவனையாவது கண்டாளோ... கருமமோ, தெரியலையே!'' சுமதி விம்மி வெடித்தாள், மீண்டும்.

''மாப்பிள்ளை வீட்டுக்கு விஷயத்தை எப்படிச் சொல் வது? ஊராரெல்லாம் இவளுடைய நடத்தையால், செயலால் நம்மைக் கண்டு நகைப்பார்களே!''

''விதி... விதிடி! இப்படி அவமானப்படணும்னு தலை யிலே எழுதியிருக்கு... அதை அழிச்சிட முடியுமா?''

''எத்தனை அடக்கமா, அன்பா, கண்ணியம் தவறாமல் நடந்து கொண்டாள்! இதெல்லாம் வெறும் நடிப்பு தானா? ஐயோ... அந்தச் சண்டாளிக்கு ஒண்ணும் தெரி யாது... மிக்க நல்லவள்ன்னு நம்பினேனே!''

''எனக்கு அஞ்சலி மேலகூடச் சந்தேகம், பயம் இருக் கும்! ஆனால் அவள் மேல துளிப் பயமோ, சந்தேகமோ கொண்டதில்லையே! இப்படி எல்லோருடைய நெஞ் சையும் குறிவச்சி தாக்கிட்டுப் போயிட்டாளே! சுமதி! என்னால் தாள முடியலையே!''

தனசேகரும், சுமதியும் அழுது ஓய்ந்து... கொஞ்சம் தெளிந்தனர்.

''என்ன சுமதி செய்யலாம்?'' தனசேகர் மனைவி யிடம் கேட்க...

''மருமகன் வீட்டுக்குப் புனிதா ஓடிப்போன செய்தியைச் சொல்லிடுங்க!''

''காறித் துப்புவாங்களே, சுமதி!''

''இப்படிப்பட்ட பெண்ணைப் பெற்றதற்கு எல்லாத்தையும் பட்டுத்தான் அநுபவிக்கணுங்க!'' சுமதியின் கண்களில் பெரிய நதியே உருவாகிக் கன்னத்தில் வேகமாய்ப் பாய்ந்தது.

''குறித்த தேதியில் திருமணம் நடக்கலேன்னா அவமானமே!

''பெண் இல்லாமல் எப்படிங்க திருமணத்தை நடத்த முடியும்?''

''அதான் அவளே ஒரு வழியையும் காட்டிட்டுப் போயிட்டாளே, சுமதி! கிருஷ்ணாவுக்கும் அஞ்சலிக்கும் மணமுடிக்கணும்!''

''அந்த வீடு ஒத்துக்கணுமே! புனிதா மேல எவ்வளவு அன்பு வச்சிருந்தாங்க. பார்வதியம்மா! எல்லாத்தையும் மறந்து ஓடிப் போயிட்டாளே!''

''முன்னமே காதல், கண்ராவியைச் சொல்லியிருந்தால் நாம கேட்கவா மாட்டோம்? பிடிச்சவனுக்கே கட்டி வச்சிருக்கலாமே! அவங்க கிட்ட எப்படி சுமதி சொல்வது?'' ஆறாத சோகத்தோடு தனசேகர் கேட்க...

''சொல்லுவோம்! எல்லாத்தையும் எடுத்துச் சொல்லுவோம்! அந்த நாசமாப் போனவள் திருமணத்திற்கு முன் ஓடி வச்சாளே! நடந்து ஓடியிருந்தால் பெருத்த அவமானம், இழிவு இல்லையா? சுமதி! அழறதை நிறுத்து! இந்த மட்டும் தப்பித்தோமே! புனிதா செய்த காரியத்திற்கு அவங்க காலைக் கண்ணீரால் கழுவலாம்!''



''மனம் இரங்கலேன்னால்?''

''இப்படிப்பட்டவளைப் பெற்றதற்கு விஷம் குடித்தோ... தூக்குமாட்டியோ உயிரை விடலாம்!''

''முதல்ல அஞ்சலி விருப்பத்தைக் கேளுங்க!''

''அஞ்சலி... நீ என்ன சொல்றே? படிக்கிற பெண்ணிடம் இந்த உதவியைக் கேட்க நா கூசுது! உன்னால் தாம்மா எங்க அவமானத்தைத் துடைக்க முடியும்! செய்வாயா, கண்ணே?'' நாத் தழுதழுக்க...

''உங்களுக்காக என் உயிரைக் கூடக் கொடுப்பேன்ப்பா! ஆனால் அத்தானும், அந்த வீட்டுப் பெரிசுகளும் என்னை ஏத்துக்கணுமே!''

அஞ்சலி கவலையோடு சொல்ல...

''பக்குவமா கேட்கலாம் தாயீ!''

''அந்த வீடு சம்மதிச்சா... அத்தானைக் கட்டிக்க விருப்பம்ப்பா!''

அஞ்சலி புன்னகையோடும், தெளிவான முகத்துடனும் சொல்ல... இருவர் முகத்திலிருந்த இருளும் விலகி... முகம் பிரகாசமானது!

''எங்களுக்காக ஒத்துட்டு பிறகு நீ வருத்தப்படக் கூடாது, அஞ்சலி! திருமணம் ஆயிரம் காலத்துப் பயிர்! வாழ்வின் கடைசி வரை வரும் உறவு கணவன்! நீ யோசித்துச் சொல்லு, அஞ்சலிம்மா!'' சுமதி அழுகையோடு சொல்ல...

''இதுல யோசிக்க எதுவும் இல்லேம்மா! கிருஷ்ணாவைக் கட்டி, நான் சந்தோசமா குடும்பம் நடத்திக் காட்டறேம்மா! ப்ராமிஸ்ம்மா! உங்களுக்கு சந்தோசமாம்மா?''

''இதைவிட சந்தோசம் வேறு என்னடா இருக்கு!''

''அக்கா திரும்பி வந்தால் வீட்டுல சேர்த்துப்பீங்களாப்பா?''

''அவளைப் பற்றிப் பேசாதே! அவள் செத்துட்டா. நாள் பார்த்து அவளுக்குக் காரியம், திதி கொடுக்கணும்!''

தனசேகர் இவ்வாறு கூற... பெற்ற தாயின் மனமோ தாங்க முடியாமல் துடிதுடித்துக் கதறியழுதது.

# 17

நிலவு இருட்டை விரட்டிவிட்டு... தனது பால் ஒளியால் பூமியை மெல்லத் தாலாட்டிக் கொண்டிருந்தது. எத்தனை நட்சத்திரங்களின் ஒளியும் ஒன்று சேர்ந்தாலும்... மதியின் ஒளிக்கு ஈடாகாது என்பதை அறியாத மூட நட்சத்திரங்கள், கண்சிமிட்டிக் கண்சிமிட்டி மதியோடு மல்லுக்கு நிற்க என... வானத்தின் இந்தக் காட்சி வெகு ரம்யமாய் ரசிக்கத்தக்க அளவு இருந்தது!

ஆனால் அதை ரசிக்கும் மனநிலைதான் புனிதாவிற்கு இல்லை!

காதலியாய் நடிக்க ஒத்துக் கொண்டு வந்தவளுக்கு இங்கே அவனின் மனைவியான மாயக் கதையை நினைக்க நினைக்க நெஞ்சு ஆறவில்லை!

ஒரு எய்ட்ஸ் நோயாளியான அவள் அன்பே உருவான இரு உள்ளங்களுக்கு மருமகளாகி விட்டாள்! அழகும், கம்பீரமும் ஒருங்கே இணைந்த மன்மதன் ரமணனுக்கு மனைவியாகி விட்டாள்! கள்ளமற்று



'அண்ணி அண்ணி' என வளைய வரும் நிவேதிதாவுக்கு அண்ணியாகி விட்டாள்!

இந்த உறவுப் பந்தங்களையெல்லாம் விட்டு... என்றைக்குக் கட்டவிழ்ந்து செல்வது எனப் புரியாமல் கலங்கினாள்!

சாந்தாவின் அபரிமிதமான அன்பும், ஆசையும் அவளை இம்சித்தன! 'உங்கள் அன்புக்குத் தகுதியில்லாதவள்... நான் நோய்க்காரி!' எனக் கத்த வேண்டும் என்று வெறி வந்தது, புனிதாவிற்கு.

''கீதாம்மா... நீ இங்கேயா இருக்கே?'' என்று மாமியார் அழைக்க... புனிதா வானவெளியையே உற்று வெறித்து நோக்கிக் கொண்டிருக்க...

''கீதா... உன்னைத்தாம்மா...'' என்று அருகில் வந்து அன்பாய்த் தோள்பற்ற... புனிதா திடுக்கிட்டுத் திரும்பினாள்.

இன்னுமே தன் பெயர் கீதா என்பது மனதிற்குள் பதியவில்லை!

''அத்தே... அத்தே...'' என்று திடுக்கிட்டவளிடம்...

''யாரோன்னு பயந்துட்டையாடா செல்லம்? வாடா கீழ! உனக்குக் கொஞ்சம் அலங்கரிக்கணும்!''

''எதுக்கு? எ... எதுக்கத்தே?'' என்று திணற...

''இன்றே நாள் நல்லாயிருக்காம்! இன்றே முதலிரவை வச்சிக்கச் சொல்லி குடும்ப ஜோசியர் சொன்னார்ம்மா!''

புனிதா சொல்ல முடியாத துயரத்தோடு சாந்தாவைப் பார்க்க...

''உன்னோட கஷ்டம் புரியுது, கண்ணம்மா! நேற்று இரவு ரயில் பயணம்! இன்று காலையில மணமேடையில மந்திரம், புகை... மதியம் சொந்தம் பந்தம் காலில விழுந்து ஆசிர்வாதம் வாங்கச் சொல்லி... உன்னை

ரொம்பவே கஷ்டப்பட வச்சிட்டோம்! உடம்பு அலுப்பாய்த் தான் இருக்கும்! ஆனாலும், இந்தச் சடங்கும் முக்கிய மல்லவா?...

நல்ல நேரத்தில்... நல்ல நட்சத்திரத்தில் உங்களின் புனிதமான உறவை ஆரம்பித்தால்தானே... எங்களுக்குக் கட்டித் தங்கமாய்ப் பேரப் பிள்ளையைப் பெற்றுக் கொடுக்க முடியும்!'' என்று சாந்தா பேரப் பிள்ளையைப் பற்றிய கனவுகளை வெளியிட...

சட்டென்று புனிதாவின் கண்கள் பனித்தன!

''நீ எங்க வீட்டுத் தேவதை! எங்க வீட்டுக் குலவிளக்கு நீ! அழலாமா, செல்லம்?''

''உ... உங்க மி... மிதமிஞ்சிய அ...அன்பைக் கண்டு அழுகை வருது, அத்தை!'' புனிதா சட்டென்று குலுங்கியழ...

''உனக்குத் தாய், தகப்பன்னு உறவு இல்லாதது தானே குறை? என்னை உன் தாயா, உன்னுடைய மாமாவைத் தகப்பனா நினைச்சிகோயேன், கீதாம்மா!'' சாந்தா மென்னகையோடு கூற...

''உங்க வீட்டு மருமகளாக எனக்கு என்ன தகுதி யிருக்கு, அத்தை?''

''உனக்கு என்னடா தங்கம் குறை? கலர்தான் கொஞ்சம் குறைச்சல்! ஆனால் அழகுல குறையில்லே! குணத்துல குறையில்லே! பண்பாட்டுல குறையில்லே! மூக்கும், முழியும், பட்டான கூந்தலும் எவ்வளவு கவர்ச்சி தெரியுமா? இந்தப் பொண்ணு என்ன சேலையை இழுத்துப் போர்த்திட்டு இருக்காளேன்னு முதல்ல பார்த் தப்ப நினைத்தேன்! அதுகூட என் மருமகளுக்குப் பாந்த மான அழகை மேலும் சேர்த்துட்டு இருக்குன்னு இப்போ புரியுது! நேரமாகுது. வாடாம்மா!''



சாந்தா பேசப் பேச... பார்வதியம்மாளே நேரில் வந்தாற் போல இருக்கு... அந்த நினைவு கண்களில் ஊற்றைப் பெருக்கெடுக்க வைத்தது!

''அத்தே... இல்லத்துல என் தோழிங்க, சிஸ்டர் எல் லோரும் என்னைப் புனிதான்னு அழைப்பாங்க! அப்ப டியே நீங்களும் அழைத்தால்...''

''கீதாங்கிற பேரைவிடப் புனிதா ரொம்ப நல்ல பேர்ம்மா! அப்படியே அழைக்கிறேம்மா!''

சாந்தா தன் கையாலேயே அலங்கரித்தாள்.

தலையைத் தளரத் தளரப் பின்னி... நிறைய வாசனை மலர்களைச் சூட்டி... எளிய பட்டுடுத்தி... சிறு சிறு நகைகளைப் போட்டு... திருப்பித் திருப்பிப் புனிதாவைப் பார்த்துத் திருப்தியுற்றவளாய்... நெற்றி வழித்து நெட்டி முறித்தார், சாந்தா.

சாந்தாவின் ஒவ்வொரு செயலும் அவளின் இதயத் தைக் கத்தி கொண்டு கீறியது!

பெற்றவர்கள் இல்லாத குறையால்தான் மருமகள் ஒவ்வொரு சடங்கிற்கும் கண்ணீர் சிந்துகிறாள் என்று சாந்தா நினைத்துக் கொண்டார்.

பால் சொம்பை நீட்ட... புனிதா மறுப்புச் சொல்லாமல் வாங்கிக் கொண்டாள்.

''அப்படியே இதையும் வச்சிக்கோ!''

நிறையச் சாவிகள் அடங்கிய தங்கச் சாவிக் கொத்து!

புனிதா தடுமாற்றத்துடன் நிற்க...

''இனி இந்த வீட்டின் அத்தனை பொறுப்புகளும் கடமைகளும் உன்னைக் கேட்டுதான் இயங்கும், புனிதாம்மா! என் கணவன், என் பிள்ளையே ஆனாலும்

உன்னிடம் தான் பணத்துக்குக் கை நீட்டி ஆகணும்! 'மருமகள்'ங்கிறது எத்தனை பெரிய பதவி! அந்தப் பதவிக்கு நான் மரியாதை செய்துட்டேன்! இனி இந்தக் குடும்பம் உன் மூலமாத்தான் இயங்கும்!''

''ஐயோ... வேண்டாம், அத்தே!'' புனிதா மறுக்க...

சாந்தாவோ அவளின் அழகான இடுப்பில் தங்கச் சாவிக் கொத்துகளைச் செருக, மறுக்க முடியவில்லை!

''ரமணன் மனசு கோணாமல் நடந்துக்க, தங்கமே!'' என்று கூறிச் சாந்தா அனுப்பி வைக்க...

கதவு திறக்கும் ஒலி கேட்டு ரமணன் திரும்பிப் பார்க்க... வானத்துத் தேவதையாய்ப் புனிதா வந்து பால் சொம்பை நீட்ட...

''ஸாரி... ஸாரி புனிதா! உனக்கு எப்படிப்பட்ட சூழ் நிலையை உருவாக்கிட்டேன்!'' என்று ரமணன் குற்ற உணர்வில் தலை கவிழ்ந்தான்.

புனிதா கண்ணீரோடு மௌனமாய் நிற்க... அங்கே நீண்ட நேரம் மௌனமே ஆட்சி செய்தது.

பின்னர்...

''எவ்வளவு சீக்கிரம் அம்மா, அப்பாவிடம் பக்குவமா நம்ம செய்தி சொல்ல முடியுமோ சொல்லி... உனக்கு இங்கிருந்து விடுதலை வாங்கித்தரேன்!'' ரமணன்தான் மௌனத்தை உடைத்தான்.

'நீங்க விடுதலை வாங்கித் தருவதற்குள் நான் இந்த மண்ணை விட்டு விண்ணுக்குப் போய்விடுவேன், ரமணன்!' என்று நினைத்துக் கொண்டவள்...

''சரி!'' என்று அவனுக்குப் பதிலளிக்க...



''புனிதா... அம்மா, அப்பாகிட்ட நெருக்கம் காட்டாதே! அம்மாவிடம் அன்பா இருக்காதே! அக்கறையாய் இருக் காதே! அப்படி இருந்தால்... அம்மா உன்னைப் பிரியும் சமயம் வந்தால்... ரொம்ப சிரமமாகிவிடும்! அல்லது இந்தத் திருமண பந்தத்திலிருந்து நீ விலகிப் போக முடியாமல் தவிக்க நேரிடும்!''

''............''

''அம்மாவுக்குக் கோபம் வராப்போல நீ நடந்துக்கணும்! அப்பாவுக்குக் குரோதமும், எரிச்சலும் வராப்போல செயல் களை நீ செய்யணும்! அப்படி நடந்து கொண்டால் நீ என் மனைவி என்ற பந்தத்திலிருந்து எளிதாய் விடுபட்டு விடலாம்!'' ரமணன் சொன்னான்.

'விபரம் அறிந்து நான் எந்தப் பாவமும் செய்யவில் லையே! அப்படி இருக்கும்போதே... இப்படி ஒரு நோய் பிணித்து... பெற்றவர்களுக்குப் பொய்க் கடிதம் எழுதி வைத்துவிட்டு... படித்துக் கொண்டிருக்கும் தங்கையைப் பெரிய இக்கட்டில் மாட்டி வைத்து விட்டுக் கண்காணாத தூரம் பயணித்து வந்திருக்கிறேன்! இதில் அன்பே உருவான மாமியாரையும்... கௌரவத்தின் மறுபெயரான மாமனாரையும் எப்படி அலட்சியப்படுத்துவது? வார்த்தை களால் வதைப்பது? முடியக் கூடிய செயலா இது?' புனிதா நொந்து கொண்டாள்.

''என்ன புனிதா பேசாமல் சிலையா நின்னுட்டே?''

''ம்... முயற்சிக்கிறேன்!''

''நீ நடந்துகிறதுலதான் இருக்கு புனிதா... நாம் சீக்கிரம் பிரிவதும், பிரியாததும். நீ மேலே படுத்துக்க! நான் கீழே படுத்துக்கிறேன்!'' ரமணன் சொல்ல...

''வேண்டாம்! உங்களுக்கு அது பழக்கமிருக்காது!'' என்று கூறி... ஒரு போர்வையை விரித்துத் தரையில் படுத்துக் கொண்டாள் புனிதா.

ரமணன் கொஞ்ச நேரத்தில் உறங்கிவிட... புனிதா உறக்கத்தோடு போராடினாள்!

புனிதாவிற்குக் கிருஷ்ணாவை விட ரமணனைப் பிடித்துவிட்டது! ரமணனிடம் சிறு பயம்கூட வரவில்லை! மாறாய்ப் பெரிய பாதுகாப்பை உணர்ந்தாள்! ரமணனின் அமைதியான தோற்றப் பொலிவு, அன்பு, எல்லாமும் சேர்ந்துதான்... அவன் மேல் கருணை வந்தது! அதனால் தான் அவன் காதலியாய் நடிக்கக் கேட்டுக் கொண்ட போது... இத்தனை எளிதாய்... உடனே ஒத்துக் கொண்ட தெல்லாம்!

கிருஷ்ணாவிடம் அலட்டலைக் கண்டாள்!

ரமணனிடம் அன்பைக் கண்டாள்!

கிருஷ்ணாவிடம் பயம் கொண்டாள்! அவனின் பேச்சால், செய்கையால் தாழ்வு மனப்பான்மை கொண்டாள்!

ஆனால் ரமணனின் இதமான பேச்சு, செயல், அன்பு, அக்கறை, பாசம், அலட்டிக் கொள்ளாத தன்மை என எல்லாமும் சேர்ந்து... அவளுக்கு ரமணனை நிரம்பப் பிடித்து விட்டது!

அவள் நோய்க்காரியில்லாமல்... ரமணனும் வேற்றுப் பெண்ணை நேசிக்காமல் இருந்து... பெற்றவர்களின் சம்மதத்தோடு... ரமணனை மணந்து... மகிழ்ச்சியாய் வாழ்ந்தால்... வாழ்க்கை எத்தனை பாலோடையாய், தேனோடையாய் இனிமையாய்ச் சென்றிருக்கும்!

புனிதாவிற்கு நினைப்பு தித்தித்தது! ஆனால், நிஜம் கசந்தது!



# 18

கிருஷ்ணா வீட்டிற்குச் செய்தியைச் சொல்ல...

புனிதாவின் மேல் அதிகப் பாசமும், பற்றும் கொண்ட பார்வதியம்மா நம்பாமல் போக... கடிதத்தைக் காட்டிய பின்னர்தான் நம்பினார்.

கிருஷ்ணாவிற்கு மகிழ்ச்சியாய் இருந்தது.

காரணம்...?

புனிதாவை வைத்துக் கொண்டு அஞ்சலி கழுத்தில் எப்படித் தாலியைக் கட்டுவது?

அஞ்சலியோடு எப்படி சந்தோசமாகக் குடும்பம் நடத்துவது? புனிதாவை எப்படி ஏறிடுவது? எவ்வாறு எதிர் கொள்வது?

மணமகளாய் இருக்க வேண்டியவள் மாற்றாளாய் ஆகியதை நினைத்து வருந்த மாட்டாளா என்று உள்ளுக் குள்ளே ஆயிரம் கேள்விகள் வண்டாய்க் குடைந்தன.

புனிதா வீட்டை விட்டு வெளியேறிய செய்தியால் நிம்மதியாய் இருந்தது!

''சரிங்க! நாங்க வேற பெண்ணைப் பார்த்துக்கிறோம்!'' என்று பார்வதி கூற...

கிருஷ்ணா, அஞ்சலி, தனசேகர், சுமதி என அனைவரும் அதிர்ந்தனர்.

''அண்ணி... அண்ணி... புனிதா இல்லேன்னால் என்ன? என் இளைய மகள் அஞ்சலி இருக்கா இல்லே!

அவளை மாப்பிள்ளைக்கு மணமுடிக்கக் கூடாதா?'' சுமதி கண்ணீரோடு கேட்க...

''அஞ்சலியா... ம்கூம்... வேண்டாம்மா!'' என்று பார்வதி கூற...

''எனக்குமே பிடிக்கலே!'' கிருஷ்ணாவின் தந்தையும் கூற...

''அஞ்சலிக்குக் குணம் சரியில்லே! ஒரு பெண்ணுக்கு இருக்க வேண்டிய எந்த நல்ல குணமும் இவளிடம் இல்லே!''

''எங்க வீட்டுக்கு அடக்கமான, பண்பான மருமகள் தான் வேண்டும்... புனிதா போல!''

''நீங்க கணிச்சதும்... நாங்க நினைச்சதும் தப்பாகிப் போச்சேம்மா! இப்போ அந்தப் புனிதா எவனையோ இழுத்துட்டு ஓடிட்டாள்! தோற்றத்துல ஒண்ணுமேயில்லம்மா! அஞ்சலியும் ரொம்ப நல்லவள்! புத்திசாலிப் பெண்! சுட்டி! எதையும் கற்பூரம் போல சட்டுன்னு புடிச்சுக்குவா! குடும்ப மானத்தைக் கருத்தில் கொண்டு இந்த திருமணத்துக்கும் சம்மதிச்சி இருக்கா! மறுத்துடாதீங்க! பத்திரிகையை ஊராருக்கெல்லாம் கொடுத்தாச்சிங்கம்மா! ப்ளீஸ்...'' தனசேகர் கெஞ்ச...

''அண்ணி... எங்க அஞ்சலியை ஏத்துக்கங்க!'' சுமதி கெஞ்ச...

''பெரியவர்களை மதிக்கற பழக்கம் அஞ்சலிக்கு இல்லையே! நான் வீட்டுக்கு வரும் போதெல்லாம்.... திமிராயும்... அலட்சியமாயும் கடந்து போவாளே! அஞ்சலியை மருமகளாக்கினால் ஒரு வேளை நாங்க உடனே முதியோர் இல்லம் போக வேண்டி வரும்!



பார்வதி திடமாய்ச் சொல்ல... அஞ்சலி வன்மப் பார்வையோடு அவரை நோக்கினாள்!

''நீங்க நினைக்கறாப் போல அவ்வளவு குணம் கெட்டவ எங்க அஞ்சலி இல்லீங்கம்மா!'' தனசேகர் சோகத்தோடு மறுத்துப் பேச...

''அம்மா... நான் அஞ்சலியை மணந்துகொள்கிறேன்!'' என்று கிருஷ்ணா கூற...

பார்வதியும், அவருடைய கணவரும் யோசனையில் ஆழ்ந்தனர். பிறகு...

மகனின் மனம் எங்கே மாறிவிடுமோ என்று பயந்த பார்வதி...

''அவன் இஷ்டத்துக்கே விட்டுடலாங்க! நான் சொல்றது சரிதானே?''

அவர் தலையசைக்க, அனைவரும் மகிழ்ந்தனர், அஞ்சலியைத் தவிர!

அஞ்சலியின் மனதில் குரோதத் தீ கொழுந்துவிட்டு எரிந்தது!

அஞ்சலி மாமனாரையும், மாமியாரையும் பழிவாங்கக் காத்திருந்தாள்!

மணநாளும் வர... மண்டபமே நிரம்பி வழிந்தது! அஞ்சலியைப் பார்க்கப் பார்க்க படமெடுத்தாடும் நல்ல பாம்புபோல பார்வதியின் கண்களுக்குத் தெரிந்தாள்.

'புனிதா ஏன் அப்படிச் செய்தாள்? புனிதா அந்த அளவு தரம் கெட்ட பெண்ணாய் இருக்க வாய்ப்பில்லை! நிஜமாகவே புனிதா ஒருவனைக் காதலித்து இருந்தால்... அவள் முகத்தில் சிறிதேனும் கள்ளத்தனம் இருந்திருக்குமே! என்ன நடந்திருக்கும்?' என்ற நினைவுகளோடு பார்வதி வளைய வந்தார்.

அவருக்கு மண்டபத்தின் சட்டம், கட்டுப்பாடு எதுவும் தெரியாது! மண்டபம், கச்சேரி பொறுப்பெல்லாம் கிருஷ்ணாவுடையதே!

கிருஷ்ணா அஞ்சலியின் கழுத்தில் தாலியைக் கட்டி, மாலை சூட...

'புனிதா என் மருமகளாய் வரவில்லையே!' என்று பார்வதியின் மனம் கலங்கி அழுதது.

அந்த வீட்டிற்கு அஞ்சலி வலது காலை எடுத்து வைத்து உள்ளே நுழைந்ததும் அவளுடைய கொட்டமும் ஆரம்பமானது!

தன்னை வெறுத்தவர்கள்தானே என்று மாமனாரையும், மாமியாரையும் விரோதியைப் போலப் பார்த்தாள்!

மனம் புண்படும்படி பேசினாள்!


ஆனால், இதெல்லாம் கிருஷ்ணாவிற்குத் தெரியாது!

மருமகள் வந்து வீட்டுப் பொறுப்பையும், சமையலையும் கவனித்துக் கொள்வாள் என்ற பார்வதியின் பயங்கர நம்பிக்கையை அஞ்சலி உடைத்தெறிந்தாள்.

பார்வதி கஷ்டப்பட்டு, பார்த்துப் பார்த்துச் சமைத்து வைத்தால் நேரத்திற்கு வந்து உண்பாள்! பின் உறங்குவாள்! ஷாப்பிங் கிளம்பி விடுவாள்!

புது மணப் பெண்தானே என்று பார்வதி தன் மனதைத் தேற்றிக் கொண்டார்!

## 19



புனிதாவால் ரமணன் சொன்னது போல மாமியார், மாமனாரிடம் கோபமாய்ப் பேசவோ... வெறுத்து ஒதுக்



கவோ முடியவில்லை! அவர்களின் பெரும் பாசத்தை, அன்பைக் கண்டு மேலும் மேலும் அவர்கள் மேல் பற்றும், பாசமும் ஏற்பட்டது.

ரமணனோ கீதாவை மறக்க முடியாமல்... சோகத்தை இதயம் முழுக்க நிரப்பிக் கொண்டு நடமாடினான்.

நாராயணன், சாந்தா முன்பு சந்தோசத்தை வலுக்கட்டாயமாய்ச் சூடிக் கொள்வான்! அவர்களின் முன்பு புனிதாவிடம் நன்றாகப் பேசுவான்!

இரவு வந்துவிட்டால் அறைக்குள் அளவான பேச்சு நிலவும்! கையில் புத்தகத்தை எடுத்துக் கொள்வான்! அல்லது அவளுக்கு முதுகுகாட்டிப் படுத்துக் கொள்வான்!

புனிதா போர்வையை விரித்துப் படுத்து... விடிய விடிய வேண்டாத நினைவுகளை அசைபோட்டு... தன் உடம்பைக் கெடுத்துக் கொள்வாள்!

'நான் கீதாவை மறந்துவிட்டேன்! நீ என்னைக் கணவனா ஏற்றுக் கொள்! நாம் இருவரும் மற்ற கணவன் - மனைவி போலக் கருத்து ஒத்து... மனம் ஒத்து... உடலாலும் ஒன்றுபட்டு வாழலாம் புனிதா!' என்று ரமணன் கேட்டு விடுவானோ என்று பயந்தவளுக்கு இப்போது அந்தப் பயம் சுத்தமாகவே போய்விட்டது.

அவன் மனதில் கீதா ஏற்படுத்திய காயம் புற்றாய்ப் புறப்பட்டுப் புரட்டி எடுத்துக் கொண்டிருந்தது. அந்த வேதனையின் தாக்கத்தால்... காலையில் உணவு உண்டு பண்ணைக்குப் போனால் இரவுதான் வீடு திரும்புவான்.

மகன் திருமணத்திற்குப் பின்பு, பண்ணை, வீடு, மனைவி என்று பொறுப்பாய் இருப்பதாய் எண்ணி நாராயணன் மகிழ்ந்தார்! அவன் முழுப் பொறுப்பையும் கையில் எடுத்துக் கொண்டதும்... வீடு, புனிதாவின் சமையலைச் சப்பு கொட்டிச் சாப்பிடுவது என்று இருந்தார்!

சாந்தாவோ புனிதாவை நேரத்திற்கு அலங்கரித்து அழகு பார்ப்பதையே வேலையாய்க் கொண்டார்.

சமையலுக்குத் தேவையான காய், கீரைகளை கட் செய்து வேலைக்காரர்கள் கொடுத்தால்... அடுப்பில் போட்டுச் சமைத்து இறக்குவது மட்டுமே புனிதாவின் வேலை! தன் மேனியில் காயம் படாமல் பார்த்துக் கொண்டாள், புனிதா.

காயம் இருந்து... அதில் இருந்து வழியும் ரத்தம் உணவில் கலந்து... உடனே வீட்டினர் சாப்பிட நேர்ந் தால் தன்னைப் பிணித்த நோய் அவர்களையும் பிடித்து, தாக்கித் தரைமட்டமாக்கி விடுமே என்று பயம்!

ஒரே பாத்ரூம், கழிப்பறையைப் பயன்படுத்துவ தாலோ... நோயாளியைத் தொடுவதாலோ... கட்டிக் கொள்வதாலோ... முத்தமிடுவதாலோ எய்ட்ஸ் கிருமிகள் தொற்றாது என்று புனிதாவிற்குத் தெரியும்! ஆனாலும் சாந்தா அணைத்துக் கொள்ளும் போதும், கட்டி முத்த மிடும் போதும் பயமாய் இருக்கும்! விலக முயற்சிப் பாள்... விடாது பெரியவள் அணைத்துக் கொள்வார்! இழுத்து மடியில் போட்டுக் கொள்வார்!

மருமகள்தான் இப்போது சாந்தாவிற்கு உயிர்!

தவறாமல் படுக்கைக்குப் போகும் போது டாக்டர் கொடுத்த மாத்திரைகளை முழுங்குவாள், புனிதா.

சேலத்தில் நல்ல டாக்டரிடம் காட்டி, உண்மைதானா என்று, மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்ளச் சிறு எண் ணம் தோன்றும்!

சென்னையில் காட்டிய இரு டாக்டர்களுமே நகரில் பிரபலமானவர்கள்! இளம் வயதிலேயே மருத்துவத் துறையில் சாதித்துக் கொண்டிருப்பவர்கள்! அவர்களிடம்



காட்டிப் பெற்ற அவமானம் போதும் என்று அந்த எண் ணத்தை அழித்துக் கொள்வாள்!

கண்களில் கனிவையும்... இதழில் இதமான புன்ன கையையும் தேக்கி நடமாடும் அவள் மனதில் உள்ள துன்பங்களும், துயரங்களும் எவருக்குமே தெரியாது!

தனிமை கிடைக்கும் போது அவள் அழுவதை மறப்ப தில்லை!

இந்த் நிலை தொடர்ந்தால் கூடிய சீக்கிரமே அவளை மரணம் பிடிக்கப் போவது உறுதி!

அதற்குள் ரமணனை மாற்ற வேண்டும்! இங்கு ஏரா ளமாய் இருக்கும் பணத்தில் ஏதாவது நல்ல காரியத்தைச் செய்ய வேண்டும்! உயிருள்ளவரை நாலுபேருக்கு உதவியாய் இருக்க வேண்டும் என்று முடிவெடுத்தாள்!

என்ன செய்யலாம்?

எந்த மாதிரியான சேவையை இங்கு தொடங்கலாம்? யோசிக்க யோசிக்க...

தன்னைப் போன்ற நோயாளிகளை... எத்தனை பேர் நல்ல முறையில் பராமரித்து... அன்புகாட்டுகிறார்கள் என்று அறியாதவள் அல்ல புனிதா!

பெற்ற பிள்ளைக்கு எய்ட்ஸ் வந்தால் வெறுக்கும் தாய்... கணவன் இந்த நோயால் பாதிக்கப்பட்டால் அருவருக்கும் மனைவி... மனைவி பாதிக்கப்பட்டால் அடித்துத் துரத்தும் கணவன்... சகோதரனை வெறுக்கும் சகோதரி என்று அத்தனையும் அறிந்தவள்தான், புனிதா! சிறு வயது முதற்கொண்டு அவர்கள் மேல் பரிதாபம் கொண்டு சேவையும் செய்தவள்தான், புனிதா!

எத்தனையோ பேர் இன்று நடுத்தெருவில் நின்று தவிக்கிறார்கள்! அவர்களைத் தேடிப் பிடித்து அழைத்து

வந்து... இல்லம் அமைத்து... பராமரித்து... மருத்துவமும் கொடுத்துப் பார்த்துக் கொண்டால் நன்றாக இருக்கும்! அதனோடே அநாதையான பிள்ளைகளுக்கும் இல்லம் அமைத்தால் மேலும் சிறப்பாய் இருக்கும்!

இந்த வீட்டில் அதைச் சொன்னால் செய்வார்களா? என் வார்த்தைக்கு மதிப்புக் கிடைக்குமா? ஏகப்பட்ட செல்வம் கொட்டிக் கிடக்கிறது. ரமணன் ஒருவனுக்கு எதற்கு இத்தனை பணமும், சொத்தும்?

அதனை அறவழியில் செலவிட்டால் ஒன்றும் குறைந்து போகாது!

இந்தக் குடும்பம் எத்தனையோ நல்ல காரியங்கள் செய் கிறது! ஏழைகளுக்கு இலவசத் திருமணம்... இல்லா தோரின் குழந்தைகளுக்குப் படிப்புச் செலவு... மருத்துவ முகாம் என்று சொல்லிக் கொண்டே போகலாம்! அதோடு இதையும் செய்தால் நன்றாக இருக்கும்!

முதலில் ரமணனிடம் சொல்ல வேண்டும்! அவன் செய் என்கிறானா... வேண்டாம் என்று முட்டுக்கட்டை போடுகிறானா என்று அறிந்து பின்னர் பெரியவர்களிடம் இந்தச் செய்தியைக் கொண்டு போக வேண்டும்!

அன்று இரவு... ரமணன் படுக்க ஆயத்தமான போது...

''உங்களிடம் கொஞ்சம் பேச வேண்டும்!'' என்று கூற... ரமணன் கேள்வியாய் நோக்கி...

''சொல் புனிதா!'' என்று ஊக்குவிக்க...

''ரமணன், இங்கே ஏராளமான செல்வம் மலை போல குவிந்து கிடக்கிறது! அதை நல்ல காரியத்திற்குச் செய் தால் என்ன?''

''நிறையச் செய்யறோமே, புனிதாம்மா!''

''இது போதாதுங்க, ரமணன்! இன்னும் நீங்க ஏதாவது செய்யணும், இந்தச் சமுதாயத்திற்கு!''



''என்ன செய்யலாம்?''

''தமிழ்நாட்டில் எய்ட்ஸ் நோய்ல முதலிடம் வகிப்பது நாமக்கல் மாவட்டம்! சேலம் மாவட்டத்தைச் சுற்றி யிருக்கற நாமக்கல், ராசிபுரம், ஈரோடு போன்ற பகுதிகளில் நிறைய எய்ட்ஸ் நோயாளிகள்! லாரித் தொழிலாளிகள் அதிகம்! அவங்க மூலமாகவும்... இன்னும் பிற காரண மாகவும் இங்கே இந்த நோயாளிகள் அதிகம் தெரியுமா?...

வீட்டினரால் ஒதுக்கப்பட்டு அநாதையாய்ச் சரியான மருத்துவம், உடுத்த உடை, உண்ண உணவு, இருக்க இருப்பிடம் இல்லாமல் நிறைய நிறையப் பேர் தவிப் பார்கள்! அவர்களுக்கு இங்க ஒரு ஹோம் அமைத்தால் என்ன?'' புனிதா முடிக்க...

''வெல்டன் புனிதா! நீ கிரேட் புனிதா! எனக்கு இதுபோலத் தோணலையேம்மா! உன் உள்ளம்தான் எவ்வளவு கருணைத் தன்மை கொண்டது! நீ என்ன வெல்லாம் செய்யணும்னு நினைக்கறையோ அதையெல் லாம் அம்மா, அப்பாவிடம் சொல்லும்மா!'' என்று இன்முகத்தோடு ரமணன் கூறினான்.

மறுநாள் பெரியவர்களிடம் கேட்க... இருவரும் மகிழ்ந்து போனார்கள்!

''நீ கிடைக்க நாங்க ஏதோ தவம் செய்திருக்கிறோம் புனிதாம்மா!'' மாமியார் அணைத்து உச்சி மோர்ந்தார்!

''உன்னை என் மருமகள்ன்னு சொல்லிக்கப் பெரு மையா இருக்கும்மா!'' என்று நாராயணன் பாராட்டினார்.

''எய்ட்ஸ் நோயாளிகளை எப்படிக் கண்டுபிடிப்பே? அழைத்து வருவே?''

''ரொம்ப சிம்பிள் அத்தை! பேப்பர்ல நாம இங்கே ஹோம் ஆரம்பிக்கிறதா விளம்பரம் தருவோம்!''

''அப்புறம்?''

''எய்ட்ஸ் கட்டுப்பாட்டு வாரியம் ஒவ்வொரு மருத்துவ மனையிலும் இருக்கு! அங்கே போய் அட்ரஸ் கேட்டு... அவர்களை இருப்பிடம் போய்ச் சந்தித்து... பராமரிக்க முடியாமல் இருப்பவர்களிடம் அனுமதி பெற்று... இங்கே அழைத்து வந்து தங்க வைக்கலாம்!...

''பேப்பர் விளம்பரம் பார்த்துப் பெற்றோர் இல்லாத குழந்தைகளையும், சொந்தத்தால் நிராகரிக்கப்பட்ட குழந்தைகளையும் அக்கம் பக்கத்து மனிதர்கள் கொண்டு வந்து விடுவார்கள்! நம்ம சேவை மெல்ல மெல்லப் பரவி ஒவ்வொருத்தரா வருவாங்க, அத்தை!''

''உனக்குத்தான் எவ்வளவு நல்ல மனசு, மருமகளே! ஆமா... ஹோமுக்கு என்ன பேர் வைக்கலாம்? உன் பேரை வைக்கலாமாடா, புனிதாம்மா?''

''ஐயோ வேண்டாம்! மாமா பேரிலோ அல்லது உங்க பேரிலோ ஆரம்பிக்கலாம், அத்தை!''

''சரி! உன் விருப்பம்! புனிதா கட்டடம் கட்ட வேண்டிய அவசியமில்லே! ஊர்ல இருக்கற பங்களாவையோ அல்லது பண்ணையில இருக்கற பங்களாவையோ பயன் படுத்திக்கோ, புனிதா!''

''அத்தை! அவங்களுக்குத் தேவை நிம்மதியும், தனிமையும், இயற்கைச் சூழலும், சுகாதாரமும்! அதனால் பண்ணைப் பங்களாவையே பயன்படுத்திக்கலாமே!''

''உன் விருப்பப்படியே செய்யுடாம்மா!'' சாந்தா சொல்ல...

அங்கு வந்த ரமணன்...



''புனிதா! ஆரம்ப நாளை விழாப் போல கொண்டாடிட லாம்! பத்திரிகை அடித்து, சுற்றிலும் இருக்கற மாவட்டங் களுக்கெல்லாம் கொடுத்து...''

புனிதா இடைமறித்தாள்.

''அதெல்லாம் வேண்டாம்! நாளிதழ் விளம்பரம் போதும்! மீதியை ஆடம்பரம் இல்லாமல் செய்யலாம்!''

''சரி, செய்யலாம்! ஆனால் முக்கிய விருந்தாளியை அழைத்துதான் செய்யணும்!''

''யார் அது?'' மென்னகை பூவிதழில் தவழக் கேட்க...

''சஸ்பென்ஸ்!'' என்று ரமணன் சிரித்தான்.

அந்த முக்கிய விருந்தாளியின் வரவால் அவளது தலை யெழுத்தே மாறப் போகிறது என்று புனிதாவிற்குத் தெரி யாது!

## 20

ரமணன் புனிதாவின் செயலை அருகிலிருந்து கண் ணுறக் கண்ணுறக் கீதா ஏற்படுத்திய தோல்வியைக் கூடச் சில நேரங்களில் நினைப்பதை மறந்தான்.

பண்ணை வீடு சில சீர்திருத்தங்கள் செய்யப்பட... அது புதுமணப் பெண்ணாய்க் காட்சியளித்தது!

ஒரு ஐம்பது நோயாளிகளையும், நூறு அநாதைக் குழந்தைகளையும் தேடிப் பிடித்து விட்டாள், புனிதா!

ஒரு பக்கம் விருந்து... ஒருபக்கம் விருந்தினரைப் பெரு மைப்படுத்தச் சிறுமேடை என்று தடபுடலாய் இருந்தது.

புனிதா மெல்லிய அலங்காரத்தோடு... அழகே உரு வாய்... தன் நோய் மறந்து அங்கும் இங்கும் பரபரப்பாய் ஓடி வேலைகளைக் கவனித்தாள்.

நாராயணன், சாந்தா தம்பதி பெருமையில் துள்ளித் திரிந்தனர். ஏனென்றால் நண்பர்கள், உற்றார் உறவினர் களிடமிருந்து அத்தனை வாழ்த்துக்கள் வந்த வண்ண மிருந்தன.

அங்கு பெரிய கூட்டமே கூடிவிட்டது!

கொஞ்ச நேரத்தில் அங்கு வந்தவனைக் காணவும் புனிதா மயக்கம் போட்டு விழாத குறைதான்!

'டாக்டர் ஆகாஷ்!'

'அவள் ஒரு எய்ட்ஸ் நோயாளி என்று சான்றிதழ் தந்த சென்னை டாக்டர்!'

''புனிதா! டாக்டர் யார்ன்னு தெரியுமா? என் அக்கா பையன் ஆகாஷ்! உன் கல்யாணத்து அன்று ஆகாஷ் நியூயார்க்கில் ட்ரெய்னிங் என்று சென்றுவிட்டான்! சமீப மாய்த்தான் வந்தான்! உன்னுடைய செயலைச் சொல்ல சீப்கெஸ்ட்டா வரேன்னு ஒத்துட்டு வந்து இருக்கான்! இவனை நீ பார்த்திருக்கீயாடா, சென்னையில?''

சாந்தா கேட்க... புனிதாவிற்குக் கண்ணெல்லாம் இருட்டிக் கொண்டு வந்தது! பயத்தில் நாக்கு மேலண் ணத்தில் ஒட்டிக் கொண்டது! நிற்க முடியாமல் தள்ளாட...

''ஏன்? என்னடா புனிதாம்மா?'' என்று மாமியார் கேட்க... ஆகாஷ் மேல் வைத்த பார்வையை எடுக்காமலேயே...

''நேத்து நைட் சரியா சாப்பிடாமல் போனதால் மயக்கமா இருக்கு, அத்தை!'' சாந்தாவின் கைப்பற்றிக் கொண்டாள்.



ஆகாஷும் அவளையே நோக்கிக் கொண்டிருக்க... புனிதாவின் உடல் சில்லிட்டது! வியர்வை ஆறாய்ப் பெருகி ஓடியது!

ரமணன் அவள் அருகில் வந்து... தோள் பற்றி, ''அண்ணா... என் மனைவி புனிதா!'' என்று பெருமை யுடன் அறிமுகப்படுத்த...

புனிதாவே அவன் வார்த்தைகளைக் கேட்டு அதிசயப் பட்டாள்! அடுத்த நொடியே ஆகாஷின் மர்மமான பார்வையால் அதிர்ச்சிக்குள்ளானாள்.

ஆகாஷ் கொஞ்ச நேரம் உரையாற்றினான். பின்னர் விருந்து என்று இனிதே விழா முடிந்தது.

பங்களாவிற்கு அனைவரும் திரும்பி விட்டனர்.

மதிய உணவு முடிந்து அவரவர் அறையில் எல்லோரும் ஓய்வெடுத்துக் கொண்டிருக்க...

புனிதாவிற்கு அழ வேண்டும் போல இருந்தது.

அவள் வழக்கமாய் அமரும் மகிழ மரத்தடிக்கு வந் தாள். அங்கே போடப்பட்டிருந்த பெஞ்சில் அமர்ந்தாள்.

அடுத்த நிமிடம் விம்மலும் வெடிப்புமாய் அழுகை பொங்கிப் பிரவாகம் எடுக்க மடியில் முகம் புதைத்து அழுதாள்.

கொஞ்ச நேரத்தில் அழுகை கட்டுப்பட... நிழல் தந்த குளுமையில் அப்படியே பெஞ்சில் படுத்து உறங்கி விட்டாள், புனிதா.

ஆகாஷ் புனிதாவை அங்கே இங்கே தேடிக் கிடைக் காமல் போக... தோட்டத்துப் பக்கம் யதேச்சையாய் வந்தான்.

புனிதாவின் மெலிந்த தோற்றம் கண்டு சட்டென்று இளகினான்!

''புனிதா... புனிதா...'' என்று ஆகாஷ் அழைக்க... உறக்கம் கலைந்து எழுந்த புனிதா... அவனைக் கண்டு விம்மினாள்.

புனிதாவைத் திட்டி... அவளைப் பற்றிய உண்மையைக் குடும்பத்தினரிடம் கூறி அவமானப்படுத்தி விடுவானோ என்ற பயத்தோடே ஆகாஷை நீர் வழியும் கண்களோடு நோக்க...

''புனிதா... நல்லாயிருக்கீயாம்மா?''

கேட்டவனுக்கு அழுகையைப் பதிலாய்த் தந்தாள்.

''புனிதா... நீ என்னை மன்னிக்கணும்மா!'' என்று ஆகாஷ் புதிர் போட... புனிதா புரியாமல் கண்ணீரோடு நோக்க...

''ஆமாம்மா... நீ என்னை மன்னிக்கணும்மா! கிருஷ்ணா என் நண்பன்! நண்பனுக்கு உதவறதா எண்ணிட்டு... உனக்குப் பெரிய தீங்கிழைச்சிட்டேன்! உயிரைக் காப் பாற்றக்கூடிய டாக்டரா இருந்துட்டு... அப்படி இழிவான செயலைச் செய்திருக்கக் கூடாது!'' என்று வருத்தத் துடன் கூற...

''என்ன தீங்கு டாக்டர்?'' புனிதா பரபரப்பாய்க் கேட்க...

''உனக்குப் பொய் சர்ட்டிபிகேட் கொடுத்துட்டேன்!''

''என்ன சொல்றீங்க?'' என்று அதிர்ந்தவள், அடுத்த நொடியே மலர்ந்தாள்.

''நிஜம்தானா? நிஜம்தானா?''

''ஆமாம்மா! உனக்கு நோயே இல்லை! நோய் இருக் குன்னு தவறா சர்ட்டிபிகேட் கொடுத்துட்டேன்! ஐ ஆம் வெரி ஸாரிம்மா!''

''ஏன்?'' என்று கோபமாய்ப் புனிதா கேட்க...

''இதுக்கெல்லாம் முக்கிய காரணம் உன் தங்கைதான்!''

''என் தங்கை அஞ்சலியா?'' என்று இடி விழுந்த கணக்காய் அதிர்ந்தாள்.



''உனக்குப் பார்த்து நிச்சயம் பண்ணிய கிருஷ்ணாவை அவளுக்குப் பிடித்துவிட்டது! உன்னை விலக்கிட்டு... அவனை அஞ்சலி மணக்க விருப்பம் கொண்டு திட்ட மிட்டாள். கிருஷ்ணா சென்னை வரும் போதெல்லாம் வீட்டுக்குத் தெரியாமல் அவனைச் சந்தித்து மயக்கிவிட் டாள்! கிருஷ்ணாவின் மனமும் சஞ்சலப்பட்டு... அவள் மேல் ஆசை வந்துடிச்சி! இரண்டு பேரும் நெருங்கி பழக னாங்க! வீட்டுல சொல்லி உன்னோடான திருமணத்தை நிறுத்தப் பயம்! பலமாய் ஒரு காரணம் கிடைக்க, பயன் படுத்திகிட்டாங்க!''

புனிதா கேள்வியாய்ப் பார்க்க...

''கல்யாண மண்டபத்திலே பெண், மாப்பிள்ளைக்கி 'எய்ட்ஸ் நோய்' இல்லேன்னு சான்று கொடுக்கணும்! அது அந்த மண்டபத்தோட விதிமுறை! நான் அவன் நண்பன் என்பதால் என் மூலமா பயன்படுத்திகிட்டான்!''

''அப்போ எனக்கு அடிக்கடி சுரம், தலைவலின்னு வந்து முடியாமல் போனதெல்லாம்...?''

''நோய் பிடித்து இருக்கேன்னு ஏற்பட்ட கவலையால் வந்திருக்கலாம்!''

''அந்த நோய்க்கான மாத்திரை தினம் தினம் முழுங்க றேனே?''

''எல்லாம் சத்து மாத்திரைகள்!''

''இன்னொரு டாக்டரும் உங்களைப் போலவே... ச்சே... எல்லோருமே கிருஷ்ணா, அஞ்சலிக்கு நன்மை செய்யப் புறப்பட்டவர்கள்தானா? உங்க மேலும், அவர் மேலும் கேஸ் போட்டு உள்ளே தள்ள முடியும்! உங்க பேரை நாற அடிக்க முடியும். தெரியுமா?''

புனிதா புயல் போன்ற வார்த்தைகளை உபயோகிக்க... ஆகாஷ் ஆடிப் போனான்.

''அவங்க திருமணம் முடிந்து உண்மையைச் சொல் றேன்னு கெஞ்சியதால்தான் புனிதா... ஸாரி... ஸாரிம்மா!'' அதிகப்படியான வருத்தத்தைக் காட்டி ஆகாஷ் பேச...

''சரி. மன்னித்து விட்டேன்!'' என்று புனிதா கூற...

''நீ எப்படி இங்கே?''

புனிதா அத்தனையையும் சுருக்கமாய்ச் சொல்ல...

''காதலியா நடிக்க வந்தவள் மனைவியான கதை வெரி இன்ரஸ்டிங்தான்! நீ சேர வேண்டிய இடத்துக்குத் தான் வந்து சேர்ந்திருக்கே! நீ வைரம்! கிருஷ்ணா போன்ற தகரத்தில் பதித்து அழகு பார்க்க வேண்டியவள் இல்லை! ரமணன் போன்ற நல்ல சுத்தமான தங்கத் தில்தான் பதித்து அழகு பார்க்க வேண்டும்!...

''சித்தி, சித்தப்பா ரொம்ப நல்லவர்கள்! நல்ல உன்னத மான... உயர்ந்த கொள்கையுள்ள பெண் நீ! ரமணன் விரைவிலேயே அந்தக் கீதாவை மறப்பான்! உன்னை மனைவியாய் ஏற்றுக் கொள்வான்!''

ஆகாஷ் சொல்ல... புனிதா அழுதாள்.

சந்தோச அழுகையா...? துக்கத்தில் பீறிட்ட அழுகையா...?

அது புனிதாவிற்கே புரியவில்லை!

## 21

புனிதாவிற்கு நம்பவே முடியவில்லை!

'தான் இத்தனை தூரம் துரத்தியடிக்கப்பட்டதற்குக் காரணம் அஞ்சலியா?'



நினைக்க நினைக்க நெஞ்சம்... வேரினை இழந்த மரம் போலானது!

தனது சொந்தச் சகோதரிக்கு நிச்சயிக்கப்பட்ட ஆண் மீது ஆசை வைக்கலாமா? அவனை அடைய இதுபோல குறுக்கு வழியைப் பின்பற்றலாமா?

நல்ல முறையில் என்னிடம் அவள் கிருஷ்ணாவை விரும்பும் விஷயத்தைக் கூறியிருந்தால்... கிருஷ்ணா விற்குப் புனிதாவே முன்னின்று அஞ்சலியைத் திருமணம் செய்து வைக்க முயற்சி எடுத்திருப்பாளே! அதற்காக அவனை மயக்க இவ்வளவு கீழ்த்தரமான செயல் செய் திருக்க வேண்டாமே!

மன்மத போதையில் கிருஷ்ணா அப்போது மயங்கி யிருந்தாலும்... போதை தெளிந்த பின்... அவள் அடுத்த ஆணிடம் பேசினால் நம்புவானா? வேசியைப் பார்ப்பது போலத்தானே பார்ப்பான்!

ஏன் இந்தப் பெண்ணிற்குத் தெரியாமல் போனது!

இப்படி நோய் என்று கதைகட்ட... நானும் அது நிஜம் என்று நம்பி... தாங்க முடியாத சோகத்துடன்... பெற்ற வர்களுக்கு நோய் பற்றித் தெரியக் கூடாது என்று எண்ணி... காதலனோடு வாழப் போவதாய்க் கடிதம் எழுதி வைத்துவிட்டு வந்து... விதி வசத்தால் ரமணனின் மனைவியாகி... தான் ஒரு நோய்க்காரி என்று நொந்து வெந்து வாழ்க்கையை நடத்தினேனே!

எனக்கு இப்படிப் பொல்லாத பாவம் இழைத்த இருவரும்... அப்படி என்ன சுகத்தை அநுபவிக்கப் போகிறார்கள்?

இப்போது நான் ஒன்றும் அவளுக்குக் குறைந்துவிட வில்லை! பெரிய சாம்ராஜ்யத்தின் இளவரசனே... பேரழகனே எனக்குக் கணவனாய்க் கிடைத்திருக்கிறான்!

பெரியவர்கள் என்றோ என்னை மருமகளாய் ஏற்றுக் கொண்டார்கள்!

ரமணன் மனம் உவந்து என்னை மனைவியாய் ஏற்றுக் கொண்டால் மகிழலாம்! இல்லையேல் காலமெல்லாம் அவன் காலடியில்... அவன் நினைவுகளோடே வாழ்ந்து மடிந்துவிடலாம்!

ரமணனுக்கு என்னைப் பிடித்தால் என்னோடு வாழட்டும்! இல்லையேல் விலக்கிட்டு கூட வேறு பெண்ணை மணந்தால் இன்பமுடனேயே அதையும் புனிதா ஏற்றுக் கொள்வாள்!

தன் நேசிப்புக்கு உகந்தவனின் சந்தோசம் அவளுக்கு முக்கியம்! நேசிப்பு...? ஓ... புனிதா ரமணனை நேசிக்கவும்... சுவாசிக்கவும் ஆரம்பித்து விட்டாள்!

'ரமணன்... ரமணன்... என்னை ஏற்றுக் கொள்வீர்களா?'

'உங்கள் இதயத்தில் எனக்கொரு இடம் கொடுப்பீர்களா...? என் இதயம்... உங்கள் குடியிருப்புக்காகக் காத்திருக்கிறது ரமணன்!

'ரமணன்... நீங்கள் தொட்டுத் தாலிகட்டிய போதே... நான் உங்களை என் கணவனாய் நினைத்து வரிவரியாய் என்னுள் கவிதையெழுதி விட்டேனே!'

'என் கழுத்தில் கிடப்பது உங்களுக்கு வேண்டுமானால் பொய்த் தாலி! எனக்கு நிஜத் தாலி! என் உயிரினும் மேலான நேசத்துக்குரியவன் நீ!'

'உங்களை நான் விரும்பாமல் உங்கள் காதலியாய் நடிக்க ஒத்துக் கொண்டிருப்பேனா? எல்லாமே எனக்கு இப்போது புரிகிறது ரமணன்! சட்டென்று உங்கள் காதலியாய்... மனைவியாய் நடிக்க ஒத்துக் கொண்டதே...



உங்கள் மேல் உள்ள பிரியத்தால்... நேசத்தால் என்று இப்போது தெரிகிறது, ரமணன்!

'இத்தனை நாளும் உங்கள் மேலான நேசத்தை என் நெஞ்சுக் குழியில் போட்டுப் புதைத்து வைத்திருந்தேன்! இப்போது நான் நோய்க்காரியல்ல என்று உணர்ந்ததும்... அந்த நேசம் பீறிட்டு வெளியே வருகிறது!

'ரமணன்... நேசம் கேட்டுப் பெறுவதோ... கெஞ்சிப் பெறுவதோ அல்ல, ரமணன்! என் நேசம் நிஜமானால்... என் நேசமே... என் ரமணனை ஒருநாள் என்னிடம் கொண்டுவந்து சேர்த்துவிடும்!

'எனக்கு நம்பிக்கையிருக்கிறது, ரமணன்!

'இந்தக் கைக்கிளைக் காதல்... இந்த ஒருதலைக் காதல்... ஒருநாள் இரு வழிக் காதலாய் மாறும்!

'அப்போது நாம் இருவரும் கற்பியலை இன்பமாய் வாசிக்கலாம், ரமணன்!'

இதுநாள் வரை நிம்மதியற்று இருந்தவளின் நெஞ்சில் ஆனந்தம் வந்து குடியேற... அவளின் மேனியில் பளபளப்புக் கூடியது! கண்களில் கூடுதல் ஒளி குடிகொண்டது! அவளின் அழகிய வதனம் பாலாய்... பளிங்காய் மின்னியது!

மாமியார் அவளுக்குப் பார்த்துப் பார்த்து எடுத்துக் கொடுத்த சேலைகளைக் காலையில் ஒன்று, மாலையில் ஒன்று என்று உடுத்திக் கொண்டு உலக அழகியாய் வலம் வந்தாள், புனிதா.

இதழ்களில் இதமான புன்னகையோடே ரமணனுக்குத் தேவையான பணிவிடைகளைச் செய்தாள்.

ஒருநாள் மாமனார் முன்பு நின்றாள், புனிதா.

''என் கணவர் கஷ்டப்பட்டுப் படித்த படிப்பு வீணாகக் கூடாது, மாமா! அவர் எவ்வளவு கனவுகளோடும், கற்பனைகளோடும் வர்த்தகம் பற்றிய படிப்பு படித்து விட்டு வந்து இருப்பார்! அவர் இந்தப் பண்ணையை மேற்பார்வை பார்த்துக் கொண்டு பிடிப்பே இல்லாமல் நாட்களை நகர்த்துவது எனக்குமே பிடிக்கவில்லை, மாமா!'' என்று இதமாய்ச் சொல்ல -

''நான் என்ன செய்யணும், புனிதா?''

''அவர் விருப்பம் போல ஏதாவது பிசினஸ் ஆரம்பித்துக் கொடுக்க வேண்டும்! புதிதாய் வர்த்தகம் ஏற்படுத்தி னால் இன்னும் ஏராளமானோருக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கலாம், இல்லையா? எத்தனையோ குடும்பங் களுக்கு உங்க மகன் ஒளியேற்றி வைப்பது உங்களுக்குப் பெருமையான விஷயம்தானே?...

''விவசாயத்தை மேற்பார்வை செய்ய எதுக்கு இவ் வளவு படிக்கணும்? அவர் உங்களிடம் கோபித்துக் கொண்டு சென்னை சென்றதில் எந்தத் தவறுமே இல்லை, மாமா?'' என்று மாமனார் மேல் குற்றம் சுமத்த...

''அவன் கோபித்துச் சென்னை சென்றதால் தானே... உன்னைச் சந்தித்தான்! எங்களுக்குப் பொக்கிஷமான மருமகளை அழைத்து வந்தான்!'' என்று சொல்லிய வாறே அருகில் வந்த சாந்தா...

''புனிதா சொல்றதுல எந்த தப்புமே இல்லைங்க! ரமணனுக்கு ஏதாவது வர்த்தகம் ஏற்படுத்திக் கொடுங்க!'' கணவரிடம் கெஞ்ச...

''இங்கே இருக்கற சொத்தே போதாதா? ரமணனுக்கு மூளையைக் கசக்கி உழைக்கணும்ன்னு என்ன தலை யெழுத்தா, சாந்தா?'' என்று நாராயணன் சொல்ல...



''நீங்க எதுவும் சொல்ல வேண்டாம்! ஏதாவது தொழில் ஆரம்பிப்பது புனிதா சொன்னது போல நம்ம நன்மைக் காக அல்ல! சமுதாயத்துல வறுமை, வேலையின்மை யால வாடற மக்களுக்குக் கரம் கொடுத்து உதவுவதற்குத் தான்! அவன் உழைச்சி நம்ம வீட்டுக்குக் கொண்டுவர வேண்டாம்! இன்னும் நிறையப் புனிதமான காரியங்களை அவன் மனைவியோட சேர்ந்து செய்யட்டும்!'' சாந்தா முறைப்போடே விளக்க...

அவர் சரியென்று ஒத்துக் கொண்டார்.

மாலையே மகனை அருகில் அழைத்துப் பேசினார்.

''ரமணா... உனக்கு எந்த மாதிரி பிசினஸ் செய்ய ஆசை?''

தந்தை கேட்கவும்... ரமணன் ஆச்சரியத்தில் துள்ளி விட்டான்.

''ஏன் ஆச்சரியப்படறே? எந்த மாதிரி பிசினஸ் செய்ய விருப்பமோ... அதைச் சொன்னால் ஏற்படுத்திக் கொடுப் பேன்!''

''நிஜமாவாப்பா?''

''ம்! சத்தியமாடா!''

''காட்டன் மில்ஸ் ஆரம்பிக்கணும்பா! நம்ம வயல்ல விளையற பஞ்சைக் கொண்டு... தரமான காட்டன் ஆடைகளை உற்பத்தி செய்து... நாமே சேலத்துல ஒரு கடையை ஓப்பன் பண்ணி... இல்லாதோருக்கும், எல் லோருக்கும் மலிவு விலையில ஆடைகளை விற்க ணும்பா!''

''ரொம்ப நல்லது! மேலே சொல்.'' நாராயணன் ஊக்கு விக்க...

''அடுத்ததா நவீன அரிசி ஆலை ஆரம்பிக்கணும்! நம்ம வயல்ல விளையற நெல்லை... நாமே அவிச்சி... அரிசியாக்கி... தரமான அரிசியை மலிவு விலையில விற்கணும்! அடித்தட்டு மக்கள் பயன் பெறணும்! இது இப்போதைய ஆசை! இது ரெண்டும் சக்சஸ் ஆயிட் டால்... இன்னும் நல்ல பல திட்டங்களை இந்தச் சமு தாயத்திற்குப் பயன்படறாப்போல செய்யணும்!''

''உன்னை என் பிள்ளைன்னு சொல்லிக்க ரொம்ப பெருமையா இருக்குடா! செய்ப்பா மகனே!'' நாராயணன் சொல்ல...

''ரொம்ப நன்றிப்பா!'' என்று தந்தையை ரமணன் அணைத்துக் கொண்டான்.

''உன் நன்றியை உன் மனைவி புனிதாவிற்குச் சொல்! அவள்தான் எனக்கு அறிவுறுத்தியது! இல்லேன்னால் உன் கனவுகளுக்கும், நல்ல பல செயலுக்கும் நான் முட்டுக்கட்டையாய் இருந்திருப்பேன்!''

ரமணனைப் புனிதா காதல் வழிய நோக்கிக் கொண் டிருக்க... அந்த நேச மழையில் நனைய அவனிதயமும் தயாராகிக் கொண்டிருந்தது.

உடனே அரசாங்கம், அதிகாரி எனப் பார்த்து அலைந்து... அனுமதி வாங்கி... இஞ்சினியரைப் பார்த்து... இடம் தேர்வு செய்து... பூமி பூஜையும் போட்டாகி விட்டது!

கட்டடமும் மளமளவென உயர்ந்தது!

அதுபோல ரமணனின் மனதிலும் புனிதா மேலான நேசம் விண்ணை முட்டும் வண்ணம் வளர்ந்து கொண் டிருந்தது.

முன்பெல்லாம் புனிதாவை சுவாரசியமாய் நோக்க மாட்டான்! இப்போது கள்ளத்தனமாய் அவளின் அழகிய



வதனத்தையும், நீண்ட நயனங்களையும், மெல்லுடலை யும் ஆசை ஆசையாய் நோக்குவான்! பார்வையாலேயே தாகம் தீரும் வரை அள்ளியள்ளிப் பருகுவான்! வெளியே செல்லும்போது அவளின் தோற்றத்தைக் கண்களில் நிரப்பிக் கொண்டு செல்லுவான்.

எதற்கெடுத்தாலும் அவனுக்குப் புனிதா வேண்டும்! புனிதா இல்லாமல் அவனால் இயங்கவே முடியாது!

கீதா அவனுள் இருந்து வெளியேறி... புனிதா குடி கொண்டாள்!

புனிதாவின் மேல் ஆசை கூடிக் கொண்டே சென்றது! அதை விளக்கும், வெளிப்படுத்தும் விதம்தான் ரமண னுக்குத் தெரியவில்லை!

'என்னைக் கணவனாக ஏற்றுக் கொள்!' என்று அவள் மனதில் என்ன இருக்கிறது என்று தெரியாமல் கெஞ்சி நிற்க விரும்பவில்லை!

அவளின் இதயம் அறிந்து... தனது அன்பின் தன் மையை அவளிடம் சொல்ல நினைத்தான்!

அந்த நாளுக்காக அவன் காத்திருந்தான்!

புனிதா செய்யும் மரச்சிற்பத்தைக் கண்டு அவன் அதிச யித்து...

''வாவ்... வொண்டர்புல் புனிதா! இத்தனை நுணுக்க மும், கலையுணர்வும் கொண்டவளா நீ!'' என்று பாராட்டியதோடு அல்லாமல்...

''நீ நம்ம இல்லத்து மனிதர்களுக்கு... இதைச் சொல் லித் தரலாமே, புனிதா! உனக்குத் தெரியும் கலைகள் அனைத்தையும் சொல்லிக் கொடு! அவர்களும் செய் யட்டும்! அந்தப் பொருளை விற்று வரும் பணத்தை அவர்கள் குடும்பத்துக்கு அனுப்பட்டுமே!''

''முடியுமா?'' புனிதா சந்தேகத்தோடு கேட்க...

''சேலத்துல புதுசா கடையை ஒப்பன் செய்து... இங்கு தயாராகும் பொருட்களையெல்லாம் அதில் வைத்து... ஆட்களைப் போட்டு நிர்வகிக்கலாம்! அது என் பொறுப்பும்மா! நாள் முழுக்க நோயையும்... வீட்டு மனிதர்களால் ஒதுக்கப்பட்டதையும் நினைத்து வருந்துவதற்குப் பதிலாய்... பொழுதுபோக்காகவும்... வருமானம் வரும் தொழிலாகவும் அவர்களுக்கு ஆகிவிடும். நீ என்ன சொல்றே, புனிதாம்மா?'' அக்கறையாய்க் கேட்க... புனிதா நெகிழ்ந்து விட்டாள்!

''நிச்சயமா செய்யறேங்க!'' என்றாள்.

வீட்டையும் பொறுப்பாய் நிர்வகித்தாள்! அவள் நினைத்தது அத்தனையும் எளிதாய் நடந்தது!

இல்லத்துவாசிகளின் கண்களில்தான் எத்தனை ஒளி வெள்ளம்! அதனைக் கண்டு அகமகிழ்ந்து போனாள்!

புனிதா... ரமணனின் அன்பிலும், அக்கறையிலும் சந்தோசமாய் உயரே உயரே பறந்து திரிந்தாள்!

அவளின் றெக்கையை முறிக்க அரக்கியாய் ஒருத்தி வரப் போகிறாள் என்று அறியாமல்!

## 22



கிருஷ்ணாவிற்கு முன்பெல்லாம் இனித்த அஞ்சலி... இப்போது கசந்து போனாள்.

நுனி நாக்கு ஆங்கிலத்தையும், வெள்ளைத் தோலையும், நவநாகரிகத்தையும் விரும்பிய மனம்... இப்போது



அடக்கத்தையும், அன்பான, பண்பான பெண்ணையும் விரும்பியது!

அஞ்சலி வேறு எந்த ஆணிடம் பேசினாலும் சந்தேகிக்கத் தோன்றியது!

அஞ்சலி இறுக்கமான பனியனும்... ஜீன்ஸ் பேண்டும் போட்டு வளைய வந்தால் மனதிற்கு அருவருத்தது!

வேளை தவறாமல் உண்பது... உறங்குவது... ஷாப்பிங் போவது என அஞ்சலி இருக்க... அடக்கமாட்டாத கோபம் பொங்கியது!

அரைகுறை ஆடையில் கால் மேல் கால் போட்டு டி.வி பார்க்கும் அஞ்சலியை அறையத் தோன்றியது!

தாயும், தகப்பனும் அவளிடம் மாட்டிக் கொண்டு... கலங்குவது கண்டு உண்மையிலேயே வருந்தினான்.

அடக்கமாய் உடுத்து என்றால் எதிர்த்துப் பேசுவாள்!

அன்பாயிரு என்றால் ஏளனம் பேசுவாள்!

எல்லாத்தையும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தான்!

அஞ்சலியின் கொட்டம் பார்வதியிடம் அதிகமாக ஒரு நாள் விளாசித் தள்ளி விட்டான், பெல்டால்!

அன்றிலிருந்து எதற்கெடுத்தாலும் கை ஓங்கி விடுவான்!

மொத்தத்தில் புனிதா என்ற நல்லவளுக்குக் களங்கம் கற்பித்ததுக்குக் கிடைத்த பெரும் தண்டனையாய் எண்ணினான்.

புனிதாவை மணந்திருந்தால் வாழ்க்கை பனிக் காலச் சாரலாய்... மழைக்காலத் தென்றலாய்... எவ்வளவு இனிமையாய்ச் சென்றிருக்கும் என்று நினைத்து நெஞ்சம் வெந்தான்!

கொஞ்ச நாளில் அஞ்சலி வயிற்று வலியில் துடிக்க... டாக்டரிடம் காட்ட... கருப்பையில் புண் உள்ளதாகவும்... அதை அகற்றா விட்டால் கேன்சர் உருவாகிப் பரவ வாய்ப்புள்ளதாகவும் கூற... அவளுக்கு உடனே ஆபரேசன் செய்யப்பட்டது!

இனி அந்த தம்பதிக்கு வாரிசில்லா வாழ்க்கை!

கிருஷ்ணாவால் அதைத் தாங்க முடியவில்லை! வயிறு முட்டக் குடித்தான்! அடித்தான்!

''ஊர் சுத்தி மாடே! கண்டவனோடெல்லாம் தரம் கெட்டுப் பழகினாயா?''

''ஒரு நல்ல மகராசிக்குக் கிடைக்க வேண்டிய வாழ்க் கையைத் தட்டிப் பறிச்சே! அதற்கான தண்டனைதான் இது!

''வாரிசு பெற்றுத் தரமுடியாத மலடியெல்லாம் எதுக்கு வாழணும்?''

கிருஷ்ணா நாக்கில் நரம்பில்லாமல் தீயாய்ச் சுழன்று தாக்க... பார்வதி மகனை அதட்டுவாள். ஆனால் அவன் அஞ்சலியைக் கொடுமைப்படுத்துவதை விடவேயில்லை!

ஒருநாள் அஞ்சலி கோபமிகுதியில் தாலியைக் கழற்றி வீசிவிட்டுப் புறப்பட்டாள்!

தாய் வீட்டிற்குப் போகப் பிடிக்கவில்லை! அங்கே போனால் முதலிலிருந்து சொல்ல வேண்டும்! அப்படிச் சொன்னால் தாய், தகப்பன் வெறுத்து ஒதுக்குவார்கள் என்று நினைத்து ரயிலேறி விட்டாள், உயிர்த் தோழியின் உதவியை நாடி!

சேலத்தில் இறங்கி ஏற்காடு செல்லும் பஸ்ஸில் ஏறிப் பயணித்தாள், அஞ்சலி.



சேலத்தைக் கடந்து வந்த கொஞ்ச தூரத்தில் 'ரமணன் பண்ணைத்தோட்டம்' உங்களை அன்போடு வரவேற்கிறது என்ற போர்டு பார்த்ததும் அவளின் பார்வை கூர்மையானது!

பச்சைப் பசுமையாய் இருந்த நெல் வயல், பருத்தி வயல், மா, தென்னை, திராட்சைத் தோட்டங்கள் கவர, கண்ணெடுக்காமல் பார்த்துக் கொண்டு வந்தவளை அந்தப் பிரமாண்டமான கட்டடம் ஈர்த்தது.

கட்டடத்தின் முன் நின்ற 'ஸ்கார்பியோ' காரிலிருந்து ரமணன் இறங்க... அதனைக் கண்டவள்... கண்டக்டரிடம் பஸ்ஸை நிறுத்தச் சொல்லிக் கத்தினாள். இறங்கினாள். ரமணனிடம் ஓடினாள்.

இன்ஜினியரிடம் பேசிக் கொண்டிருந்த ரமணன் அருகில் போய் நின்றாள்!

திகைத்து, ரமணன் நின்றுவிட்டான்.

இருவர் பார்வையும் கலந்தன...!

முதலில் மௌனத்தைக் கலைத்தவள், கீதாஞ்சலிதான்!

ஆம் கீதா, அஞ்சலி இருவருமே ஒருத்திதான்!

''ரமணன்... ரமணன்... நலமா?'' என்று கண்ணீரோடு கேட்க...

இன்ஜினியர் பார்வை, வேலையாட்களின் பார்வை கூர்மை பெற...

''வா... வீட்டுக்குப் போய் எதையும் பேசலாம்!'' என்ற ரமணன் அந்த ஸ்கார்பியோ காரின் கதவைத் திறந்துவிட....

''கார் உங்களுடையதா, ரமணன்?'' என்று அவள் கேட்க... அவன் பதில் சொல்லவில்லை.

அவன் சொன்ன குடிசை வீடு, வயதான பெற்றோர் என எதிர்பார்த்தவளுக்கு... பங்களாவின் பிரம்

மாண்டமும், சாந்தா, நாராயணனின் மிடுக்கும் கண்டு - அதிர்ந்தாள்! அதிசயித்தாள்!

''என் பங்களா! என் பெற்றோர்!'' பெருமையுடன் அறிமுகப்படுத்தினான் ரமணன்.

''என் தோழி! சென்னையிலிருந்து வருகிறாள்!'' என்று அறிமுகப்படுத்தினான்.

அவனுடன் மாடி ஏறினாள்! அவன் அறையின் பிர மாண்டம் கண்டு பிரமித்தாள்!

''ரமணன்... நீங்க... நீங்க... நிஜம்தானா? ஏன் நீங்க ஒரு பணக்காரன்னு சொல்லலே?''

''அநாதை யில்லத்துல வளர்ந்த பொண்ணுகிட்ட தான் ஒரு பெரிய பணக்காரன்னு சொன்னால் மிரண்டு... என் அன்பை ஏற்றுக் கொள்ள மாட்டாயோ என்றுதான் சொல்லலே!''

''சொல்லாமல் இப்படிப் பெரிய பாதகம் செய்து விட்டீர்களே, ரமணன்!'' என்று குறைப்பட...

''சொல்லியிருந்தால் என்ன செய்திருப்பாய்?''

''நம் திருமணம் நடந்து இருக்கும்!

''அப்போதும் உனக்கு என் மீது காதல் இருந்து இருக் காது! என் பணத்தின் மீதுதான் காதல் இருந்திருக்கும்! உன் அகராதியில் மனிதனின் மனதிற்கு இருக்கும் மதிப்பை விட... பணத்திற்கு இருக்கும் மதிப்புதானே அதிகம். சரி... பணக்காரனாய்த் தேடிப் போனாயே! கல்யாணம் செய்து கொண்டாயா?''

ரமணன் நக்கலாய் கேட்க... சட்டென்று பொய்யுரைத்தாள்.

''ரமணன்! என்னை வார்த்தையால் கொல்லாதீங்க! நான் இன்னும் உங்கள் நினைவிலேயே வாழ்கிறேன்!'' என்று வார்த்தையில் ஜாலங்களைக் கூட்ட...



''பொய் வேண்டாம், கீதா! நீ ஒரு முக்கியமான நபரைச் சந்திக்கப் போறே!'' என்று கூறிக் கீழே வந்தான்.

புனிதா காபியோடு வர...

''புனிதாம்மா... உனக்கு முக்கியமான ஒரு விருந் தினரை அறிமுகப்படுத்தணும்! வாம்மா!''

ரமணன் அருகில் வந்து தோள் பற்றி அழைத்துப் போக... சட்டென்று மலர்ந்தாள்... விரைவில் வாடப் போகிறோம் என்று அறியாமல்!

ரமணனின் நேசமான தொடுகை மயிலிறகாய் வருடியது!

வதனம் பிரகாசிக்க உள்ளே சென்றவள்... கீதாஞ் சலியைக் கண்டதும் தீயை மிதித்தாற் போல உள்ளுக்குள் கதறினாள்.

''என் பெருமைக்குரிய மனைவி, புனிதா!'' என்று புனிதாவை அறிமுகப்படுத்த... அஞ்சலியின் முகம் செத்துவிட்டது.

## 23

''ரமணா... அந்தப் பெண் இங்கே எத்தனை நாள் தங்கப் போறாளாம்? எனக்கு அவளைப் பிடிக்க லேப்பா! அவள் முகத்துல கள்ளமும் கபடும், சூதும் வாதும் நிறைந்து கிடக்கு! அவளை இந்த வீட்டை விட்டு அனுப்பற வேலையை முதலில் பார்!'' அன்று மாலையே சாந்தா சொல்ல...

''அம்மா... ஒரு நாலைந்து நாட்கள் தங்க அனுமதி கேட்கறா!''

அவள் வந்ததிலிருந்து என் மருமகள் முகம் சரியில்லே! உன்னையும், அவளையும் இணைத்து... ஏதாவது கற்பனை செய்து கலங்கப் போறா, நம்ம புனிதா! தேவையில்லாமல் கணவன் - மனைவிக்கிடையே சண்டையும், விரிசலும் வேண்டாம், ரமணா! சீக்கிரமே அவளை வெளியேற்று!''

ரமணனிடம் சாந்தா கடுமையாய்க் கூறிவிட்டு அகன்றாள்.

புனிதா முகம் இருண்டு நடமாடினாள்.

தான் ஏற்கெனவே அநாதையென்று அறிமுகமாகியிருப்பதால்... மாமியாரிடம் கீதாஞ்சலி தனது தங்கை எனச் சொல்ல முடியாத நிலையை எண்ணி நொந்து போனாள்.

ரமணனும் தோழி... தோழி...' என்று அழைப்பதால் சாந்தாவிற்குச் சந்தேகம் வரவில்லை!

கீதாஞ்சலியும் தன் பெயர் 'ஜெனிபர்' என்று அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

புனிதா பார்க்கப் பார்க்க... ரமணனிடம் சிரிக்கச் சிரிக்கப் பேசினாள்! தொட்டுத் தொட்டுப் பேசினாள்!

அவன் முகமும்... அவள் வந்ததிலிருந்து பிரகாசிப்பது போலத் தோன்றியது நிஜமா? அல்லது புனிதாவுக்குத் தோன்றிய பிரமையா?

புனிதா உள்ளுக்குள் ஊமையாய் அழுதாள்.

நேசம் கொண்ட நெஞ்சு விம்மியழுதது!

இரண்டு நாட்கள் கழித்து... புனிதா மகிழம்பூ மரத்தடியில் கண்ணீர் சிந்திக் கொண்டிருக்க... அங்கே அழுத்தமான காலடிகளுடன் கீதாஞ்சலி வந்து நின்றாள்.

புனிதாவின் அருகில் அமர்ந்து...



''புனிதா... நான் உயிருக்குயிராய் ரமணனைக் காதலித்தேன்! நீ நோய் என்று பொசுக்குன்னு புறப்பட்டு வந்துட்டே! அங்கே நம் குடும்பத்தின் மான, மரியாதையைக் காப்பாற்ற... நானும் ரமணன் மேலான காதலை என்னுள்ளே போட்டுப் புதைத்துக் கொண்டு... கிருஷ்ணாவைத் திருமணம் செய்து கொண்டேன்! அவரோடான வாழ்க்கை நரகம், புனிதா! என்னை ரொம்பவே கொடுமைப் படுத்திட்டான்! தாலியைக் கழற்றி முகத்துல வீசியெறிந்துவிட்டு வந்துட்டேன்!''

புனிதாவிற்குச் சட்டென்று கோபம் பொத்துக் கொண்டு வந்தது!

''ஏய்... பொய் வேண்டாம்! டாக்டர் ஆகாஷ் இங்கே வந்தார்! எல்லா விபரமும் சொல்லிவிட்டார்! அவர் யாருன்னு உனக்குத் தெரியணுமா? என் புருஷனோட பெரியம்மா பையன்! இல்லத் திறப்பு விழாவிற்கு வந்தவர் உன்னோட கள்ளப் புத்தி, நீயும், கிருஷ்ணாவும் சேர்ந்து எனக்கு நோய்ன்னு சர்ட்டிபிகேட் தரச் சொன்னது என்று எல்லாத்தையும் சொல்லிட்டார்!'' என்று துணிச்சலாய்க் கோபத்தோடு பேச...

''சரி... கள்ளம்தான்... கபடு, சூதுதான்! உன்னைக் கட்டிக்க இருந்தவரை அபகரிச்சுகிட்டேன்தான்! நீ மட்டும் என்னோட ரமணனை அபகரிச்சுக்கலையா? ரமணன் எல்லாவற்றையுமே சொன்னார்... நீங்க ரெண்டு பேரும் கணவன், மனைவியா சேர்ந்து வாழாததுகூடச் சொன்னார்!''

கீதாஞ்சலி ஏளனமாய்ச் சொல்ல... புனிதா அதிர்ந்துவிட்டாள்!

கணவன் - மனைவிக்கிடையே உள்ள இரகசியத்தை இவளிடம் ரமணன் அரங்கேற்றியிருக்கிறானே! ச்சே...

என்ன மனிதன்! அப்போ மாய்ந்து மாய்ந்து... உருகி உருகி... அவனை நேசிப்பதும்... என் நெஞ்சில் சுமப்ப தும் நான் மட்டும்தானா?

அவனுக்கு எந்தவொரு பற்றுதலும் என்மேல் இல்லையா?

என் மீது நேசம், அன்பு பிறந்திருந்தால்... என்னிடம் மனம் விட்டுப் பேசி... இந்நேரம் தாம்பத்ய வாழ்க்கை வாழ்ந்து இருப்பான், இல்லையா? என்னை மனைவி யாய்ப் போற்றுவான், இல்லையா? அப்படியென்றால் ரமணனுக்கு என் மீது அன்பு இல்லை! என் மீது பாசமில்லை! என் மீது நேசமில்லை!

கீதாவிடம் இந்த இரண்டு நாளில் இனிக்க இனிக்கப் பேசியதில் இருபது சதவீதம் கூட என்னிடம் பேசவில் லையே!

அப்போஇன்னமும் ரமணனின் மனதில் கீதா இருக் கிறாள்! என்னை விலக்கி... கீதாவோடு ரமணன் இணைந் தால் இனிமையான வாழ்க்கையை வாழ்வான்!

'இனி இங்கே நந்தியாய் நான் எதற்கு?'

''ரமணன் என் மீது ஆழமாக நேசம் கொண்டு இருக் கிறார்! நான் இன்னும் அவர் நெஞ்சில் வாழ்கிறேன்! நீ விலகிப் போனால் அவரும் மகிழ்வார்! எனக்கும் நிம்மதி யான ராஜ போக வாழ்க்கை கிடைக்கும்! நான் என் இருப்பிடம் வந்து சேர்ந்து விட்டேன்! நீ உன் வழியைப் பார்த்துக் கொண்டு செல்கிறாயா?''

கீதாஞ்சலி நெஞ்சில் ஈரமே இல்லாமல் பேசிப் புனி தாவை வதைத்தாள்.

''சீக்கிரமே என் வீட்டை விட்டு வெளியேறுடி!'' என்று கீதாஞ்சலி கத்த...



புனிதா எதுவும் பேசாமல் கண்ணீரோடு அவ்விடம் விட்டு அகன்றாள்.

மாமியார் சாந்தா இந்த ஒரு வருடத்தில் ரொம்பவே நோய் வந்து படுக்காமல் தேறிவிட்டார்! இனி அவரை நோய் நெருங்காது! இதயம் கூடப் பலப்பட்டு விட்டது!

அதனால் மாமியார் பற்றி கவலை கொள்ளத் தேவையே இல்லை! ரமணனின் மகிழ்வான வாழ்வுக்கு இடைஞ்ச லாய் இருக்க விரும்பாமல்...

இரவு எல்லோரும் உறங்கிவிட... புனிதா பங்களாவின் பின்புற கேட் வழியே புறப்பட்டு... பஸ்பிடித்து... சேலத் திலிருந்து சென்னைக்கு விடியற்காலையில் வந்து சேர்ந் தாள்.

தனசேகர், சுமதிக்குப் புனிதாவைக் கண்டு அதிர்ச்சி!

அவள் சொன்ன அனைத்துச் செய்தி கேட்டு நெகிழ்ச்சி!

கதறிய மகளை இழுத்து மடியில் போட்டுக் கொண் டாள், சுமதி! தகப்பனோ அவளின் தலை கோதி... கன்னம் தடவி... தனது அன்பினை வெளிப்படுத்தினார்!

சூடான வெந்நீரில்... சுமதியே புனிதாவைக் குளிக்க வைத்தாள். தாயின் வற்புறுததலுக்கு இணங்கி இரண்டு இட்லியை விழுங்கினாள்.

இரவு உண்ணாதது, உறங்காதது, நீண்ட தொலைவு பயணம்... அனைத்தும் சேர்ந்து களைப்படைய வைக்க... ரமணனின் நினைவோடே படுத்தாள்!

''என் இதயம்

உன் நினைவுகளைச்

சுமக்கும் கருவறை!''

ரமணனை எண்ணிய உடனே மனதில் புதுக்கவிதை தோன்ற... தலையணையை நனைத்துக் கொண்டு உறங்கி விட்டாள்!

கனவில் வந்த ரமணன் புன்னகைத்தான்... இழுத்து இதழ் ஒற்றினான்! மேனி நோகும் வண்ணம் நொறுங்க அணைத்தான்!

புனிதா கனவு தந்த இம்சையால் திடுக்கிட்டு விழித்தாள்.

கதவு திறக்கும் ஓசை கேட்டு... கண்களைத் துடைத்து நிமிர... அங்கே...

ஆக்ரோஷத்தோடு கூடிய வீரபத்திரன் சிலையாய் ரமணன் வந்து நின்றான்.

புனிதா அவனைக் கண்டு 'பேந்தப் பேந்த'க் குழந்தை யாய் முழிக்க...

ஓங்கிக் கன்னம் பழுக்க இரண்டு அறைவிட்டவன்... தாங்க முடியாமல் தாவி அணைத்துக் கொண்டான்!

அவனின் பரந்த நெஞ்சில் முகம் புதைத்து வீறிட்டாள், புனிதா.

ரமணன் அன்போடு, மோகத்தோடு... அவளின் முகம் பற்றிக் கன்னம், உதடு, நெற்றி என முத்தமிட... அவளும் ஆசையாசையாய் அவன் கொடுத்த முத்தத்திற்குப் பதில் முத்தம் கொடுக்க என்று... அவர்களின் இந்த மோக நிலை நெடுநேரம் நீடித்தது.

காலையில் விழித்த ரமணன் புனிதாவைத் தேடி... காணாமல் போக... பதறியவன் கீதாஞ்சலியை இரண்டு தட்டுத் தட்ட முழுவதையும் கூறிவிட்டாள்.

சேலத்திலிருந்து சிறு விமானம் பிடித்து உடனே வந்துவிட்டான்!



''சொல், ஏன் அப்படிச் செய்தாய்?'' என்று கேட்க...

''நீங்கள் கீதாஞ்சலியின் நினைவாய் இன்னமும் வாழுவதால்... உங்களின் நல்வாழ்வை எண்ணி...'' அவள் முடிக்கும் முன்னர்...

''நீ எப்படி... அப்படி எண்ணலாம், புனிதா? சொல்லுடி. அவள் ஏற்படுத்திய தோல்வியின் காயம் ஆறி... உன்னை உயிராய் எண்ணி உருகி உருகி நேசிக்கும் போது... மடச்சி... மடச்சி...'' என்று இழுத்து அணைத்துக் கொண்டான்.

''அப்புறம் ஏன் கீதாவிடம் எல்லாவற்றையும சொன் னீர்கள்? கணவன் - மனைவியா வாழலேன்னு சொன் னீர்கள்?'' என்று குற்றம் சாட்ட...

''நான் எங்கே சொன்னேன்? கீதாஞ்சலி கதை விடறதுல கெட்டிக்காரின்னு தெரியுமில்லே? அவள் கற்பனையா கதைவிட... அது நம் வாழ்வில் நிஜமாய் நடக்க...

அதை நான் சொன்னதா முட்டாள் மாதிரி புரிஞ் சிட்டு... இப்படியா என்னை, அம்மாவை, அப்பாவைத் தவிக்கவிட்டு ஓடிவருவே! முதல்ல போய் என் மருமகளை முடியைப் பிடித்து, தாதான்னு இழுத்து வாடான்னு சொல்லிட்டு ஆஸ்பிட்டல்ல போய்ப் படுத்துட்டாங்க!''

''ஐயோ...'' என்று புனிதா துடிக்க...

''லேசா நெஞ்சுவலி, கொஞ்சம் பீபியும் எகிறிடிச்சி! பயப்படாதேம்மா!'' என்று கூற...

''அப்பாடி...'' என்று கட்டிலில் அமர்ந்தவளை இழுத்து மடியில் போட்டுக் கொண்டான், ரமணன்.

''என்னை உங்களுக்கு எப்போதிருந்து பிடிக்கும்?''

''ஹோம் ஆரம்பிக்க முயற்சி எடுத்தே இல்லே... அன்றிலிருந்து இந்த மகாராணி... மனம் முழுக்க ஏறியமர்ந்துட்டீங்க! டாக்டர் அண்ணாகிட்ட ''என் மனைவி''ன்னு பெருமையா அறிமுகப்படுத்தினேனே! என்னை நீ உணரலையா, புனிதாம்மா? என் நேசத்தை வெளிப்படுத்தக் காத்திருந்த போது...''

''தப்புதாங்க... தப்புதாங்க...'' என்று நிஜமாய் அவள் வருந்த...

''என்னைப் பிரிந்து இங்கே வந்தேன்னா... உனக்கு என்னைப் பிடிக்கலையா, புனிதாம்மா?''

''ஐயோ... ரமணன்... ரமணன்... உங்க தாலியேறிய நிமிடமே... உங்களை விரும்ப ஆரம்பித்தேன்! நோய்க்காரின்னு உங்களை நான் நெருங்கலே! டாக்டர் வந்து என்னைப் பற்றி விளக்க... ரொம்ப சந்தோசப்பட்டேன்! ஆனால் நானா உங்ககிட்ட என் நேசத்தைச் சொல்ல ஏதுவோ தடுக்க... ஸாரி... ஸாரி ரமணன்! ஐ லவ் யூ, ரமணன்!'' என்று புனிதா இதழ் மலர...

''என் கண்ணே... என் அன்பே... இதயத்தை திருடிய தேவதையே... உன்னைக் கண்டதே வரமல்லவா...!'' என்ற ரமணன் மனைவியை இழுத்து அணைத்துக் கொண்டான்.

ஜில்லென்ற காற்று தென்றலாய் மோதி அவர்கள் இடைப்புகுந்து போக முயற்சிக்க...

வெளியே கருமேகம் வானுக்கும், பூமிக்கும் ஊஞ்சல் கட்டி சந்தோசமாய் ஆடிக் கொண்டிருந்தது, மழையாய்!